பட்டாபியின் முகநூல் இதழ்

Jan 2024 FB JOURNAL VOICE OF PLURALISM



Pattabi’s FB Postings of Jan 2024

Jan 2024 FB

Jan 1

Nasadiya Sukta – The Hymn of Creation from Rig Veda 10th Mandala- 129th Hymn in Tamil and English

அப்போது எதுவுமே இல்லை; இல்லாமலும் இல்லை; ஏதுனும் இருந்ததுமில்லை; இல்லாமலும் இல்லை. அப்போது விண்வெளியோ ஆகாயமோ இல்லை; அதற்குப் பின்னரும் எதுவுமே இல்லை. என்ன நேர்ந்தது? எங்கே? யார் இதைக் கவனித்தார்? ஆழம் தெரியாத அளவுக்கு அப்போது தண்ணீர் இருந்ததா?

2.சாவு என்பதே அப்போது கிடையாது; மரணமில்லப் பெருவாழ்வு என்பதும் இல்லை. பகல் இரவு என்பதே இல்லை. ஆனால் ஒன்றுமட்டும் உயிர்மூச்சுடன் இருந்தது; காற்றே இல்லாவிடினும் அது தனது சக்தியால் சுவாசித்துக் கொண்டிருந்தது. அதைத்தவிர எதுவுமே இல்லை.

3.ஆரம்பத்தில் இருளை இருட்டு வளைத்துப் பிடித்துக் கொண்டிருந்தது. எதையும் பிரித்துக் காட்டுவதற்கு எதுவுமே இல்லை. எங்கும் தண்ணீரோ! எல்லா இடமும் வெற்றிடம். அப்போது தவ சக்தியால், தவ (Heat) வெப்பத்தால் ஒன்று மட்டும் எழுந்தது (மாபெரும் வெடிப்பு BIG BANG இதுதான்)

4.துவக்கத்தில் அதற்கு ஆசை எழுந்தது. அதுதான் மனதில் விதைக்கப்பட்ட முதல் விதை; ஒன்றுமே இல்லாததில் ஒன்று இருந்ததை ஞானத்தை நாடும் தெய்வீக கவிஞர்கள் கண்டார்கள்

5.அந்தக் கயிறு – இணைப்பு- எங்கும் சென்றது ஆனால் கீழ், மேல் என்று ஏதாவது அப்போது உண்டா? விதைகள் தூவப்பட்டன. எங்கும் சக்தி. உயிர்த்துடிப்பு மேலும் கீழும்.

6.யாருக்குத் தெரியும்? யார் இதைச் சொல்ல முடியும்? அது எப்போது தோன்றியது? இந்த படைப்பு என்பது எப்போது ஏற்பட்டது ?படைப்புக்குப் பின்னரே (நாம் இன்று வணங்கும்) கடவுளர் வந்தனர். அப்படி இருக்கையில் இது எப்போது தோன்றியது என்பதை எவர் அறிவார்?

7. எப்போது இந்தப் படைப்பு ஏற்பட்டது? அதுவே ஏற்பட்டதா? இல்லையா? யார் இதை மேலிருந்து கவனித்தாரோ அந்த உயர்ந்த சுவர்கத்துக்கே அது தெரியும்; தெரியாமலும் இருக்கலாம்.

There was neither non-existence nor existence then. There was no sky, nor the heaven beyond it.

What covered it? Where? Under whose protection? Was there (celestial) water, deep and mysterious?

At that time, there was neither death nor immortality. There was no appearance of night or day.

'That one' breathed without air on its own nature. Other than 'that', there was nothing else beyond.

At first, there was darkness concealed by darkness. All this was unrecognizable (cosmic) water.

'That', when coming into being was covered by emptiness. 'That one' arose by the power of heat.

At first, in the beginning, desire (to create) engulfed it, which was the first semen/seed of the mind.

Sages, having searched in their hearts with wisdom, established the relationship of existence in the non-existence.

Having extended their (measuring) cord sideways, what could be considered 'below' and what 'above'?

There were bearers of semen/seed; there were the powerful; (with) natural instincts below, and zealous intents above.

Who verily knows? Who here announces (as to) from where this was born, from whence this creation?

The gods are more recent than this creation. Therefore, who knows from where this came about?

From where did this creation arise? Did he create it or did he not?

He who is its supervisor in the highest heaven, he indeed knows; or may be, even he does not know!

Jan 1

Foreword by R.Pattabiraman to the Tamil Translation Book of The Murderer, The Monarch and The Fakir by Appu Esthose Suresh and Priyanka Kotamaraju done by Akkalur RAVI

காந்தி படுகொலையும் வெறுப்பரசியலும்

வெறுப்பு அரசியல் எப்போதும் எதிரியை கட்டமைத்துக்கொண்டேயிருக்கும். எதிரி இல்லையெனில் தனக்கு இருப்பில்லை என்பதை அது நன்றாக அறியும். தன் கோட்பாட்டு மரணம் நேராதிருக்க எதிரியின் மரணம் குறித்து சிந்தை செலுத்தும்.. அப்படியே மரணித்தாலும் புதிய எதிரி ஒன்றை அது எப்படியாவது நிர்மாணித்து அதை செலாவணியாக்க எத்தனிக்கும்.

வெறுப்பு அரசியல் தன்னை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தும். மதம், சாதி, இனம், மொழி என அது பிரதான வடிவங்களில் ஏதோவொன்றையோ இல்லை அனைத்தையுமோ பெறும்.

வெறுப்பரசியல் எப்போதும் எவரையும் திட்டிக்கொண்டேயிருக்கும். அதன் இலக்கியமே வசவுமொழிதான். அதற்கு வரலாற்றை தோண்டிப்பார்க்கும் ஆர்வம் இல்லாமல் இருக்காது. ஆனால் நடந்தவை- கடந்தவை எல்லாம் தனக்கு மோசம் செய்யப்பட்ட- தன்னை அபகரித்துக்கொண்டே நிகழ்வுகளாகவே அது வரலாற்றை சுருக்கிப் பார்க்கும். மோசம் எவரால் என அது பேசித்தான் தன் எதிரியை சுட்டிக்காட்டும். அதற்கு நிவாரணத்தை பெற்றே ஆகவேண்டும் என கதையாடும். வரலாற்றை நேர்செய்தல் என பெயரிட்டு அதை நோக்கி காய் நகர்த்தும். பழக்கமான பெயர் ஒன்றை அதற்கு இடும். இல்லையேல் பெயரிட்டு அதை பழக்கமாக்கும்.

பன்முக உரையாடல் என்கிற சாத்தியப்பாட்டிற்கு அது எப்போதும் கதவடைத்தே வைக்கும். பிறர் குரல் என அதற்கு ஏதும் இருக்கக்கூடாது. தன் குரலை எப்போதும் சத்தமாக வைத்துக்கொள்ளும். வெறுப்பரசியல் பொல்லாதது. அவருக்கு வேண்டாதவரை கொலை செய்துவிட்டு நியாயம் பேசும்.

காந்தியின் படுகொலைக்கும் இந்த வெறுப்பரசியலுக்கும் உள்ள தொடர்பை விரிவாக பேசும் நூலாக The Murderer, The Monarch and The Fakir by Appu Esthose Suresh and Priyanka Kotamaraju அக்டோபர் 2021ல் வெளியானது. எந்த காந்தி கொலை

செய்யப்பட்டார்- அகிம்சாவாதியா , தேசவிரோதியா , ராம் ஆனாலும் அல்லா ஏசு ஆனாலும் அன்பே கடவுள் உண்மையே கடவுள் என்று பேசியவரா எந்த காந்தியை என அப்பு எஸ்தோஸ், பிரியங்கா கோடமராஜு என்கிற ஆசிரியர் இருவரும் ஆராய முற்படுகின்றனர்.

அப்பு சுரேஷ் புகழ்வாய்ந்த புலனாய்வு பத்திரிகையாளர் பிரியங்கா கேம்பிரிட்ஜ் புலமையாளர்.

இந்த புத்தகம் எந்தவித திசை மாற்றமும் இல்லாமல் காந்தி படுகொலை , அதை இயக்கிய சித்தாந்தம், சித்தாந்தத்தை உருவாக்கிய சாவர்க்கர் போன்றவர்கள், அதை அமுலாக்க விரும்பிய ஹிந்து மகாசபா எனும் ஸ்தாபனம், சதிகார குழு என்பதை மய்யப்படுத்தியே எழுதப்பட்டுள்ளது. இந்த ஆங்கில நூல் வெளிவந்த அடுத்த ஆண்டிலேயே இப்போது தமிழில் வருகிறது. மூலநூலே தமிழில் தான் எழுதப்பட்டுள்ளதோ என்ற எண்ணத்தை தரக்கூடிய வாசிப்பு அனுபவத்தை அக்களூர் ரவியின் மொழிபெயர்ப்பு தருகிறது.

அக்களூர் இரவி தமிழ் சமூகத்திற்கு தன் மொழிபெயர்ப்பு பணி மூலம் அற்புதமான மேம்பட்ட உழைப்பை நல்கி வருகிறார். அவரின் இந்தியா கருத்தாக்கமானாலும், காந்தி பகத்சிங் ஆனாலும், ஒபாமா ஆனாலும், அரசியல் சிந்தனையாளர் புத்தரானாலும் நல்லதோர் தாக்கத்தை ஏற்படுத்தின. அரசியல் கருத்தாங்கள் மட்டுமல்லாது ஏராள இலக்கியப் பிரதிகளும் அவரின் உழைப்பால் தமிழுக்கு கிடைத்துள்ளன. தேர்ந்த மொழிபெயர்ப்பாளாராக மூல நூலை சிறப்பாக உள்வாங்கியவராக பயணிக்கும் இரவியின் தமிழ்த் தொண்டு மேலும் சிறக்கட்டும்.

காந்தி புரிந்து கொண்டு பரிந்துரைத்த அஞ்சாமை கொண்ட இந்திய தேசியம் என்பதற்கும் சாவர்க்கர் விரும்பிய ‘மிலிட்டரைசிடு மஸ்குலின் இந்துத்துவா தேசியம் ‘ என்பதற்குமான வேறுபாட்டை இந்நூலாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தேசியம் என்கிற மகிழ்ச்சிப்பாடு குறித்து Slavoj Zizekன் மேற்கோள் ஒன்றை ஆசிரியர்கள் காட்டுகின்றனர். பிறர் எனும் others கட்டுமானம் குறித்த சுவாரஸ்யமான மேற்கோளது.

விடுதலையடையும் இந்திய தேசம் எனும் கட்டுமான பிரச்னையை கருத்தில்கொண்டு அதை தங்கள் இந்து தேச கட்டுமானமாக ஆக்க விரும்பிய சிலரின் சதியை இந்தப் புத்தகம் கூடுதலான தகவல்களுடன் பேசுகிறது. இராணுவத்துவம்- ஆண்மைத்துவம் என்ற வழிகளில் மட்டுமல்லாமல், சமஸ்தானங்களில் செயல்பட்ட சிலரின் சதி பங்களிப்பையும் இந்த புத்தகம் உரக்கப்பேசுகிறது.

புலனாய்வு பத்திரிகையின் அறம் வழி நின்று ஆசிரியர்கள் தங்கள் முயற்சியை வெளிப்படுத்தியுள்ளனர். துல்லியமான தகவல்களை சேகரித்து எங்கு எந்த நாளில் எவரெவர் என்ன பேசிக்கொண்டார்கள்- சதி எப்படி கவனமாக நிறைவேற்றப்பட்டது என்பதை இந்த ஆக்கம் பேசுகிறது.

நவீன இந்தியாவின் பெரும் பூகம்பான இந்த நிகழ்வை ஏன் பாடப்புத்தகங்கள் அலட்சியம் செய்தன என்ற கேள்வியை இந்த புலனாய்வாளர்கள் எழுப்பியுள்ளனர். எது எப்படியாயினும் இந்த புத்தகம் காந்தியின் உயரிய சிந்தனைகள் தொடர்ந்த பேசுபொருளாக வழிகாட்டும் திசையாக இருக்கவேண்டும் என்றவிழைவை முன்வைக்கிறது.

II

காந்தி படுகொலைக்கு முதல்நாள் நாதுராம் ஆப்தே கர்கரே பிர்லா மந்திரில் சந்திப்பது என முடிவெடுக்கின்றனர். அந்தக் கோயிலில் இப்படி ஒரு வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. விஷ்ணு எனும் காக்கும் கடவுள் வேறு எவருமல்லர். அவர் அழிக்கும் கடவுளான ருத்ரந்தான். ருத்ரன் வேறு யாருமல்ல படைக்கும் கடவுளான பிரம்மாதான். அங்கு அவர்களை ருத்ரா தான் வழிநடத்தியிருக்கக்கூடும்.. நாதுராம் விநாயக் தன்னை விநாயக் என்றும் நாரயண ஆப்தே நாரயனன் என்றும் சொல்லி விமானத்தில் பறந்துள்ளனர். அவர்கள் புனைபெயர்கள் எளிதில் இவர்களை அடையாளம் காட்டக்கூடியதாகவே இருந்தன.

ஜனவரி 30 மாலை 5.18க்கு மனுபென்னை சற்று தள்ளிவிட்டு துப்பாக்கியால் மகாத்மாவை சுட்ட கோட்சேவை சார்ஜெண்ட் தேவ்ராஜ் சிங் கையை பிடித்து சில குத்துக்களை விடாமல் இருந்தால் மேலும் பல குண்டுகளை கூட்டத்தினரைப்

பார்த்து கோட்சே சுட்டிருக்க வேண்டும். சுற்றி வந்த 10 பேர்கள் கோட்சேவை கட்டுப்படுத்தினர் என்ற செய்தியை ராபர்ட் பைனே தந்திருப்பார்.

இந்த புத்தகத்தில் சதியில் ஈடுபட்டவர்கள்- வாக்குமூலத்தில் இடம் பெற்றவர்கள் என இரு பிரிவை ஆசிரியர்கள் சொல்கின்றனர். சாவர்க்கர் அதில் வாக்குமூல பெயர் பட்டியலில் இருந்தார். இக்கொலையில் தனக்கு தொடர்பில்லை என்பதை மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் உடல், மனம், மொழிகளால் அவர் எப்படி நகர்த்தினார் என்பது விரிவாக பேசப்பட்டுள்ளது. கோட்சே உட்பட பலரும் அதற்கு ஒத்துழைத்த காட்சியையும் ஊகித்து உணரமுடிகிறது.

மதன்லால் எனும் அகதி காந்தி படுகொலையில் மிக முக்கிய காரக்டர். அந்த பாத்திரம் சதிகாரர்களால் எப்படி பயன்படுத்தப்பட்டது. பாகிஸ்தான் பகுதியிலிருந்து அகதியாக பெரும் பாதிப்பு அல்லலுக்கு உள்ளான அவன் எப்படி பயன்பட்டான் என்பதும் விரிவாக பேசப்படுகிறது. அவன் குறித்து அறிந்த பேரா ஜெயின் அவர்களின் தகவல்களை மொரார்ஜி தேசாயும் அவர் வழி படேலும் எடுத்துக்கொண்டவிதமும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இந்த புத்தக ஆசிரியர் இப்படிச் சொல்கிறார். ஜனவரி 20, 1948 கொலை முயற்சி நடந்த அந்த உரிய நேரத்தில் போதுமான தகவல்கள் இருந்தும் கோட்சேவின் அடையாளத்தை தைனிக் அக்ரானி ஆசிரியர் என சொல்லப்பட்டிருந்தும் காவல்துறை தவறியதை சுட்டிக்காட்டுகிறார். உளவுத்துறை நடவடிக்கை எடுக்கத் தேவையான தகவல்கள் முன்னதாகவே கிடைத்திருந்தும் காந்தி படுகொலையை அது தடுக்கத் தவறியது. இது இந்திய உளவுத்துறை வரலாற்றில் மிகப்பெரிய வீழ்ச்சியான சம்பவம் என ஆசிரியர்கள் கருதுவதை நாம் காண்கிறோம்.

இந்து மகாசபா அலுவலகம் இதன் பின்னணியில் இருந்ததை இப்புத்தகம் விரிவாக விவாதிக்கிறது. சாவர்க்கர் தொலைபேசி எண் உடன் இந்து மகாசபா டிரங்கால் பதிவும் சொல்லப்பட்டுள்ளது.

சாவர்க்கரை யார் யார் எப்போது சந்தித்தார்கள், எங்கு எப்போது பயணித்தார்கள், மிக முக்கிய ஆகஸ்ட் சதி விமானப் பயணம் என பலவும் விறுவிறுப்பான காட்சிகளாக வாசகர்கள் முன் படைக்கப்பட்டுள்ளன. நகர்வாலா உயர் பம்பாய் அதிகாரியின் விசாரணை சாவர்க்கர் தொடர்பை ஆதாரங்களை திரட்டி தந்தது.

ஜனவரி 20 1948 குண்டுவெடிப்பு படுகொலை முயற்சிக்கு முன்னர் கோட்சே, ஆப்தே சாவர்க்கரை சந்தித்ததும், வேறொரு சதிகாரர் கார்க்கரே மதன்லாலுடன் வந்து போனதும் விசாரணையில் பெரிதாக்கப்படாமல் போயுள்ளன. சாவர்க்கரோ தான் எவரையும் சந்திக்கவில்லை என்பதை அழுத்தமாக சொல்லிவந்தார். கபூர் கமிஷன் வெளியாகும்வரை இது போன்ற உண்மைகள் மக்களுக்கு தெரியாமல் வைக்கப்பட்டதை இந்த புத்தக ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நகர்வாலா பிப்ரவரி 1 நாட்குறிப்போ சாவர்க்கர் சந்திப்புகளில்தான் மகாத்மா ஒழிப்பு திட்டம் இறுதியானதாக சொல்கிறது. சாவர்க்கர் வீட்டில் நடந்த சோதனைகளில் கோட்சேவுடன் கடந்த காலத்தில் எழுதிக்கொண்ட கடிதங்கள் கிடைத்தன. ஆனால் நேரடியாக தொடர்புபடுத்தும் ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

நகர்வாலா டைரி குறிப்பு பிப் 23, 1948ல் சாவர்க்கரின் புரட்சிகர சித்தாந்த ஈர்ப்பே அதை திருப்தி செய்யவே கோட்சே, ஆப்தே, கார்க்கரே இந்த குற்றத்தை செய்திருப்பதாக எழுதப்பட்டிருந்தது.

சாவர்க்கர் அவரது கூட்டாளிகள் தவிர காந்தியின் படுகொலையை வேறு யாரெல்லாம் விழைந்திருப்பார்கள் என்ற கேள்வியுடன் மேலும் தங்கள் ஆய்வை இந்த ஆசிரியர்கள் நகர்த்தியுள்ளனர். இதில் சமஸ்தானங்களின், அங்கிருந்த சில முக்கியஸ்தர்கள் சிலரின் உடந்தையான பாத்திரங்களையும் ஆசிரியர் வெளிக்கொணர்ந்தனர்.

குவாலியர் சார்ந்த் டாக்டர் பார்ச்சூர் மூலம் துப்பாக்கி பெற்றது, ஆல்வார் சமஸ்தான பிரதமர் டாக்டர் நாரயண் காரே, சாமியார் ஓம்பாபா எனப்படும் கோபி கிருஷ்ண வியாஸ் குறித்து ஆசிரியர் விரிவாக பேசியுள்ளனர். ஆல்வார் சமஸ்தான பிரதமர் பங்கை எவரும் கண்டுகொள்ளாமல் ஆதாரமில்லை என தள்ளியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளனர்.

சாமியார் காந்தி படுகொலையை முன்பே சொன்னவர் என்பதுடன் காந்தி கொலையன்று அவர் ஆல்வார் ராஜாவை பார்க்க முயற்சித்துள்ளதும் சொல்லப்பட்டுள்ளது. கோட்சே காரே உறவு மறைக்கப்பட்டது. அது தொடர்பான விசாரணைகள் நடைபெறாத புதிரையும் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. காரே

ஆகஸ்ட் 1947ல் அகில இந்திய ஹிந்து தேசிய முன்னணியை டெல்லியில் துவக்கினார். அன்று சதிகாரர்கள் பலர் சந்தித்துள்ளனர்.

சமஸ்தானங்களில் வலது சித்தாந்தங்களுக்கு ஆதரவாக இருந்த சிலருக்கு காந்தி ஒழிப்பு ஏன் தேவைப்பட்டிருக்கலாம் என்பதை கிரிப்ஸ்க்கு காந்தி எழுதிய கடிதம் போன்ற சிலவற்றை முன்வைத்து இந்த புத்தகம் விவாதிக்கிறது. சமஸ்தானங்கள் இந்து பண்பாட்டின் காவலர்கள் என்ற உளவியலால் இந்து மகாசபா செயல்பட்டதும் காரணமாக இருக்கலாம் என ஆசிரியர் முடிவிற்கு வருகின்றனர்.

சாவர்க்கர் ஜூலை 19, 1944ல் ஜெய்ப்பூர் ராஜாவிற்கு எழுதிய கடிதத்தில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள், முஸ்லீம்கள் போன்ற பலரிடமிருந்தும் சமஸ்தானங்களின் அதிகாரம், கெளரவம் காக்க அவர் உறுதியளித்தது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சமஸ்தானங்கள், ஹிந்து இராணுவமயமாக்கல் ஆகியவற்றில் மூஞ்சே செயல்பாடுகளும் இந்த புத்தகத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

நாசிக்கில் அமைந்த ஹிந்து இராணுவப்பள்ளியின் அமைப்பே இந்து வரலாறு ஒன்றின் தேவையை வெளிப்படுத்தும் விதமாக ஆக்ரமிப்பாளர்களை அம்பலப்படுத்தி நீக்கும் உளவியலுடன் அமைக்கப்பட்டதை விரிவாக ஆசிரியர்கள் கூறியுள்ளனர். ஹிந்துஸ்தான் எனப் பெயரிட்டு, ராம் பூமி என இடத்தை அழைக்கும் சிம்பல்களை செய்தனர்.

மூஞ்சே ஜனவரி 6, 1947ல் படேலுக்கு எழுதிய கடிதத்தில் ஹிந்துக்களின் பாதையில் காந்தியின் குறுக்கீடு குறித்த அதிருப்தியை பதிவு செய்திருந்தார். ஆகஸ்ட் 1947 சதிகாரர்கள் கூடிய கூட்டத்தில் சாவர்க்கருடன் மூஞ்சேயும் பங்கேற்றதை பார்க்கிறோம். விடுதலை கொண்டாட்டங்களில் பங்கேற்காமல் அன்று ஆத்ம விசார தினம் அனுசரிக்கலாம் என்ற உணர்வே கூட்டத்தில் வெளிப்பட்டுள்ளது. காவிக்கொடி ஏற்றவும் முடிவானது.

செங்கோட்டை டெல்லியில்தான் முக்கிய அரசியல் வழக்குகள் நடைபெறும். முன்னர் கடைசி முகல் மன்னர் பகதூர் ஷா வழக்கை பிரிட்டிஷார் அங்குதான் நடத்தினர். 1945 நேதாஜியின் இராணுவத்தினரான அய் என் ஏ புகழ் பெற்ற வழக்கும் அங்கு நடந்தது. இப்போது அந்த வரலாற்றில் காந்தியின் கொலை வழக்கும் இடம்பெற்றது. நீதிபதியாக இருந்தவர் ஆத்ம சரண். கோட்சே, ஆப்தே,

கர்கரே முன்வரிசை என்றால் பின்வரிசையில் சாவர்க்கர் அமரவைக்கப்பட்டார். ஜனவரி 20,1948 அன்று கையில் இருந்த பிற 5 குண்டுகளையும் கோட்சே சாதாரண மக்களின் உயிர்ப்பலிகளைப்பற்றி கவலை கொள்ளாது வெடிக்க எண்ணியது விசாரணையில் தெரியவந்தது.

பிப்ரவரி 10, 1949ல் தீர்ப்பு சொல்லப்பட்டது. கோட்சேவிற்கும் ஆப்தேவிற்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. சாவர்க்கர் நீங்கலாக மற்றவர்க்கு வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. போலீசாரின் அலட்சியத்தை ஆத்மசரன் சென்சூர் செய்தார். அப்பீல்களை பரிசீலிக்க சிறப்பு நீதிமன்றம் சிம்லாவில் செயல்பட்டது.

ராம்தாஸ் காந்தி அமைதிக்காகவும் அகிம்சைக்காகவும் நின்ற காந்திஜியை கோட்சே கொன்றது சரியா என்ற கேள்வியுடன் கோட்சேவிற்கு கடிதம் அனுப்பினார். ராம்தாஸ் மற்றும் உறவினர்களுக்கு தன்னால் ஏற்பட்ட மனவலியை கோட்சே தெரிவித்தாலும் வேறு ஒரு பக்கத்திலிருந்தும் அதைப்பார்க்க வேண்டும். நேரில் சந்திக்க விரும்பவில்லை என பதில் எழுதியதையும் காண்கிறோம். இக்கடிதப் போக்குவரத்து மே 1949ல் நடந்தது.

நவம்பர் 15 1949ல் கோட்சேயும் ஆப்தேயும் தூக்கு ஏற்றப்பட்டபோது அகண்ட பாரதம் என்கிற முழக்கத்தை எழுப்பினர்.

ஆனால் வாஜ்பாய் பிரதமராக வாய்ப்பு கிடைத்தவுடன் பாகிஸ்தான் சென்றபோது அவர் மரியாதை செய்த இடத்தில் ஒன்றாக பாகிஸ்தான் தீர்மானம் இயற்றப்பட்ட 1940க்கான நினைவிடம் இருந்த முரணையும் பார்க்கிறோம்.

ஆப்தேவும் கோட்சேயும் தங்கள் மரணத்துடன் காந்தி கொலையின் ஏராள சதி இரகசியங்களை சேர்த்தே புதைத்துவிட்டனர். அவற்றை தோண்டும் செயல் முழுமையடையாது என்றே தோன்றுகிறது. அவ்வப்போது அந்தப் பயணத்தில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் தங்களுக்கு கிடைக்கும் புதிய தகவல்களை கொண்டு வந்து நாம் அறிய தருகின்றனர்

ஹிந்துத்துவம் தன் அடிப்படைகளை பொதுவான தேசம்- இனம், நாகரீகம் அதாவது ஒரே தேசம்- ஒரே பண்பாடு என எப்படி தொடர்ந்து கட்ட விழைகிறது என்பதையும் இந்த புத்தகம் தன் ஆய்வு பின்னணியில் சேர்த்துக்கொண்டுள்ளது.

கிலாபத், மாப்ளா கிளர்ச்சிகள் குறித்த பார்வைகளும் விவாதிக்கப்பட்டுள்ளன. இந்துக்கள் அனைவரையும் முஸ்லீம்களுக்கு எதிராக கட்டியமைப்பதில் சாதியம் என்பது பெரும் பலவீனமாக இருப்பதை சாவர்க்கர் உணர்ந்ததும் பேசப்பட்டுள்ளது.

இன்று 'லவ் ஜிஹாத்' தடுப்பு சட்டங்கள் என பாஜக ஆளும் மாநிலங்களில் உரக்கக்குரல்கள் வருவதைக்காண்கிறோம். இந்த சொல்லாட்சி எப்போது முதலில் பயன்படுத்தப்பட்டது என்பதை இந்த புத்தகம் விவரிக்கிறது. ஹிந்துக்களை காந்தியின் அகிம்சைக்கொள்கை பலவீனமாக்கியதால் சாவர்க்கரின் ஹிந்துக்களை இராணுவமயமாக்கல் என்ற மாற்று முன்வைக்கப்பட்டதை இந்த புத்தகம் அலசுகிறது.

மனசாட்சியை மூடிவைத்துவிட்டு எந்தவித உறுத்தலும் இல்லாமல் கோட்சே புகழ்பாடல்கள் எப்படி கட்டமைக்கப்படுகின்றன என்பதையும் இந்த புத்தக ஆசிரியர்கள் விசாரிக்கின்றனர். காந்தியை தவறுக்கு மேல் தவறு செய்தவர் என்கிற கோட்சேவின் தரப்பு கட்டுடைப்பு உரை பெரிதும் கொண்டாடப்படுவதையும் காண்கிறோம். காந்தியை கோட்சே பாகிஸ்தானின் தந்தை என கேலி செய்ததையும் காண்கிறோம்.

இந்த நூல் ஆகஸ்ட் 8, 1947ன் சாவர்க்கர், கோட்சே, ஆப்தே விமான பயணத்துடன் துவங்கி அதிலிருந்து காந்தியை அப்புறப்படுத்த கொலை செய்திட எடுத்திட்ட சதிகளை நுணுக்கமாக பின்னித்தருகிறது. காந்தி கொலை தொடர்பாக வேறு எந்த நூல்களையும் படிக்காத வாசகருக்கு அந்த பின்புலத்தை அவர்களின் கோட்பாட்டு எரிச்சல் சார்ந்த அம்சங்களுடன் சேர்த்தே வழங்குகிறது. காந்தி கொலை குறித்து வேறு நூல்களை வாசித்தவர்களுக்கு அக்கொலை தொடர்பான சிறு சிறு தகவல்களை இணைத்து வாசிக்கும் வாய்ப்பைத் தருகிறது.

இந்த புத்தகம் நம்முன்னரும் இந்தக் கேள்விகளை வீசாமல் இல்லை. காந்தி என்பவர் யார்? இலட்சக்கணக்கானவரின் மனதில் அன்பையும் மதிப்புணர்வையும் விசிறிவிட்டவரா? சத்யாகிரகத்திற்கு பலவீனமான தன் உடலை தியாகம் செய்தவரா? நம் மத்தியில் இருந்த முரட்டு மனிதர்களை பக்குவாக்க முனைந்தவரா? யார் அவர்.. இன்னும் அவர் குறித்த கேள்விகள் அவரவர் அனுபவத்தின்படி எழலாம். வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் வாழ்தல் படி

சொல்தல்- செல்தல் என நின்று காட்டிய அப்பெருமகனார் மனித குலத்தின் பெருந்தேடலாளராகவே இன்னும் பல காலத்திற்கு இருப்பார் எனத்தோன்றுகிறது.

Jan 2

" தங்கத்தைவிட அதிக உண்மையையும்- அதிகார ஐஸ்வர்ய ஆடம்பரத்தைவிட அதிக பயமின்மையையும், சுயநல ஆசையைவிட அதிக உதாரத்தையும் காட்டும்போதுதான் நம் நாடு உண்மையிலேயே ஆன்ம சக்தி வாய்ந்த நாடாக இருக்கும். நம் வீடுகளையும், அரண்மனைகளையும், கோவில்களைையும் செல்வத்தினால் தோன்றிய விளவுகளிலிருந்து தூய்மையாக்கி, அவற்றுள் தார்மீகத்திற்குரிய தன்மைகளை காட்டவேண்டும்..."

காந்தியின் உரை 1916 டிசம்பர் 22 அலகாபாத் மத்தியக் கல்லூரி பொருளாதார சங்க கூட்டம்

Jan 2

Maulana Azad's letter to viceroy Linlithgow dated 13th Feb 1943

To make serious charges against those who are prevented from replying to them, to make those charges without producing evidence, to support them by the vast propaganda machine of a powerful Government and, at the same time, to suppress news and views which are contrary to them, are not evidence either of fair play or a strong case

(Gandhiji started his 21 days fast from 10th Feb 1943)

On Feb 17th Thakkar Bapa met Gandhi. Talking to him Gandhiji said

" This government has crossed all limits. From the very beginning its case has rested on falsehoods. I say put me on trail, produce the evidence against me and if I am proved guilty I shall make amends. Even in Russia the accused are given the benefit of trail. I am denied that right. All I seek is justice"

பிரிட்டிஷ் வைஸ்ராயின் கேளா காதை விமர்சித்துவிட்டு அவரது கவுன்சிலிருந்து ஆனே, மோடி, சர்க்கார் போன்றவர்கள் விலகினர். சில இந்து உறுப்பினர்கள் விலகினாலும், மீதமுள்ளவர்கள் மற்றும் ஜின்னா ஆதரவுடன் அடக்குமுறை ஆட்சியை நீடிக்க லின்லித் விரும்பினார். சிறையில் காந்தியை சாக விட்டுவிடாதீர் என அமெரிக்கா தொடர்ந்து அறிவுறுத்தி வந்தது.

இந்திய செயலர் அமெரி வைஸ்ராய் மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள், அவரை காந்தியை நாடு கடத்தலாமா- அங்கு அவர் உண்ணாவிரதம் இருந்தால் செய்தியைக் கூட வெளியிடாமல், அவர் மறைந்தாலும் 6 மாதங்கள் கழித்து

அறிவிக்கலாம் என்றெல்லாம் அழுகிய மனதுடன் யோசித்து எதையும் செயல்படுத்த முடியாமல் தவித்துக்கொண்டிருந்தனர்.

காந்தியின் ஆன்ம பலம் அவர்கள் அனைவரின் அதிகாரத்தை மிகத் துணிச்சலாக, எந்த புலம்பலும் இன்றி எதிர்கொண்ட காட்சிகளாக 1942-43 கடந்து போனது

Jan 2

1921 ல் பிறந்த நரசிம்மராவிற்கு, அவரது 10 ஆம் வயதிலேயே சத்யம்மா என்கிற உறவுக்கார குழந்தையுடன் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலபுலன்கள் வெளியே போய்விடக்கூடாது என்ற ஏற்பாட்டில் நடந்த திருமணமது. பமுலபர்த்தி என்பது குடும்பப் பெயர். பமுலபர்த்தி வெங்கட நரசிம்மராவ் என்பது அவரது பெயர் விரிவு. ஊர் கரீம்நகர் மாவட்டத்தின் வாங்கரா கிராமம்.

சத்யம்மா 8 குழந்தைகளைப் பெற்றவர். ஊரிலேயே, நீ ஏதாவது அரசியல் செய்துக்கோ என வாழ்ந்தவர். எழுத படிக்க என்பதில் எல்லாம் ஆர்வம் காட்டாத அம்மையார். 1970ல் அவர் மரணிக்கும்வரை ஊரிலேயே நிலபுலன்களை பார்த்துக்கொண்டு மிகச் சாதாரண கிராம வாழ்க்கையை கழித்தவர்.

நரசிம்மராவ் தன் 17ஆம் வயதில் நிஜாம் அரசின் உத்தரவை மீறி 300 மாணவர்களுடன் கல்லூரியில் வந்தே மாதரம் பாடியதால் நீக்கப்பட்டார். நாக்பூர் கல்லூரி முதல்வர் சேர்த்துக்கொண்டதால் அங்கும், பின்னர் புனேவிலும் படிக்கலானார். மராத்தியில் புலமையாளராகவும் முடிந்தது.

நாக்பூர் காலத்தில் அவரிடம் வலது- இடது இரு எழுத்துக்களும் வரலாயின. சாவர்க்கர் வந்தார். கூடவே பி சி ஜோஷியும் வந்தார். கம்யூனிஸ்ட் இலக்கியங்களை ராவ் படிக்கலானார். ஊர் பழக்கத்திலேயே அவருக்கு தாய்மொழி தெலுங்கு தவிர, மராத்தி, கன்னடா, ஒரியா, இந்தி தெரியலானது. நிஜாம் ஆட்சியின் சூழலில் உருதுவும் கற்க முடிந்தது. பெர்சியன் கற்கலானார். ஏறத்தாழ 10 மொழிகளில் அவரால் சகஜமாக பேச முடிந்தது. நிஜாமும் அவ்வளவு மோசமாக நடந்துகொள்ளவில்லை. சம்ஸ்கிருத சுலோகங்கள் கூட்டமாக படிக்க அனுமதி, இந்து பண்டிகைகளுக்கு விடுமுறை போன்றவற்றை அவர் அனுமதித்தார்.

1938ல் ஹரிபுரா- குஜராத் காங்கிரஸ் மாநாட்டில் முதன்முறையாக ராவ் பங்கேற்றார். ராவிற்கு நாக்பூரில் சட்டம் படிக்க வாய்ப்பு கிடைத்தது. அரசியலில் நுழையலாமா, வீட்டு சூழலில் ஊர் போய் நிலபுலன்களுடன் வியாபாரம் செய்து வாழ்வதா, அல்லது லண்டன் சென்று கேம்ப்ரிட்ஜ் சூழலில் மேலும் படிப்பதா என்ற

குழப்பம் ராவிடம் இருந்தது. காந்தி, நேரு, படேல், அம்பேத்கர், ஜின்னா வழியில் சட்டப் படிப்பு என முடிவெடுத்தார். முடித்தவுடன் ஹைதராபாத் சமஸ்தானத்திற்கு முதலமைச்சராக பின்னர் வந்த பர்குல ராமகிருஷ்ணராவ் அவர்களிடம் ஜூனியராக சேர்ந்தார்.

இந்தியா ஆகஸ்ட் 15, 1947ல் விடுதலை அடைந்த சூழலில் ஹைதராபாத் இணைக்கப்படவேண்டும் என்ற போராட்டம் தீவிரமானது. பன்மொழி அறிஞர் சுவாமி ராமானந்த தீர்த்தர் போராட்டத்தை தீவிரப்படுத்தியவர்களில் ஒருவர். அவர் Sprituality and Socialism என்கிற இரண்டையும் இணைத்து மக்களிடம் இந்திய தேச பக்தியை மூட்டி வந்தார். நரசிம்மராவ் தனது 26 ஆம் வயதில் இதில் ஈர்க்கப்பட்டார். பிற்காலத்தில் மகராஷ்ட்ரத்தில் முதல்வரான எஸ் பி சவான், கர்நாடக விரேந்திர படீல், ஆந்திர நரசிம்மராவ் அனைவருக்கும் இந்த தீர்த்தா குருவாக இருந்தார். பின்னர்தான் சந்திரசுவாமி நரசிம்மராவின் முக்கிய குருவானார்.

நரசிம்மராவ் எப்படி அரசியலில் வளர்ந்தார். பிரதமரானார். மாற்றங்களை உருவாக்கினார் என வினய் சத்பதி எழுதியுள்ள புத்தகமான The Man who Remade India பேசுகிறது.

நரசிம்மராவின் மகள் வாணிதேவி ஒருமுறை சொன்னாராம். அப்பா அஜாதசத்ரு. அதாவது அவருக்கு எதிரி என இன்னும் எவரும் பிறக்கவில்லை என்ற பொருளில்..

Jan 3

இந்திய அரசமைப்பு அசெம்பிளி ஜனநாயகத்திற்கான விவாதங்கள் என்ற புத்தகம் ஆங்கிலத்தில் வந்து 4 ஆண்டுகள் ஆகிறது. ஜனவரி 2, 2023 முகநூலில் சிறிய அறிமுகத்தை தந்திருந்தேன். சிலநேரம் ஒருவர் இக்கருத்து சென்றால் நல்லது என நினைத்துப் போடும் இடுகைகள் கவனம் பெறாமல் கூடப் போய்விடும். நேற்றைய இடுகையும் அப்படி போயிருக்கலாம்.

இந்தப் புத்தகத்தை உதித் பாட்டியா எடிட் செய்துள்ளார். கட்டுரையாளர்கள் அரசமைப்பு அசெம்பிளி விவாதத்தை மிக critical ஆகவே பார்த்து தங்கள் கேள்விகளை எழுப்பியுள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்பு சற்று அதிகமாகவே எனக்குப் பட்டது. விவாதம் என்ற அளவில் அவை எழுப்பும் கேள்விகளை புரிந்துகொள்ளத்தானே வேண்டும்.

கல்யாணி ராம்நாத் அவரது கட்டுரையில் அடிப்படை உரிமைகள் மற்றும் நெறிசெய் கோட்பாடுகள் (Fundamental Rights and Directive Principles) பற்றிய விவாதத்தை செய்திருக்கிறார். இங்கு we the people எப்படி புரிந்துகொள்ளப்பட்டுள்ளதாக கல்யாணி அவரது விளக்கத்தை தருகிறார். இந்திய மக்களாகிய என்பது ஒருங்கிணைந்தா அல்லது பிளவுண்ட மக்கள் என்ற பொருளிலா என்ற விவாதத்தையும் அவர் செய்கிறார். அது வாக்காளர் என்ற பொருளில் சில நேரம் அடங்கிவிடுகிறதா அல்லது அனைவரும் என்று விரிகிறதா என்ற கேள்வியையும் அவர் வைக்கிறார்.

இந்த FR - DPSP என்ற உரிமைகளில் FR அடிப்படையானதாக லீகலானதாக பார்க்கப்பட்டால், DPSP non enforceable but moral என்று அம்பேத்கரின் நீண்ட விளக்கம் நமக்கு கிடைக்கும். இதை கேள்வியாக்கி எச் வி காமத் தனது விவாதத்தை செய்திருப்பார்.

மக்களிடம் வாக்கு கேட்டுப் போகிறவர்கள் ஆட்சிமைக்கு நெறிசெய் கோட்பாடுகளை அலட்சியம் செய்துவிட்டு போகமுடியாது என்பதை அம்பேத்கர் அழுத்தமாக சொன்னார். காமத் நீங்கள் ஜனநாயகத்தை வாக்களிப்பவர்களுடன் நிறுத்திக்கொள்ளமுடியாது . Duty of the State to people who could not assert their rights, including the politically disempowered..populations beyond those who participate in elections.

கிருஷ்ண சந்திர சர்மா மக்கள் என்றால் உடல் வலிமையுடன் என்ற பொருளை உருவாக்க வேண்டாமா என்ற கேள்வியை முன்வைத்தார். அவர்களின் வேலைசெய்யும் ஆற்றலை உத்தரவாதப்படுத்துதல் என்பதாக வேண்டாமா என்ற கேள்வியை எழுப்பினார். அவரது விமர்சனப்பார்வை இவ்வாறு சென்றது..

There is not a single item or provision anywhere to make the people work or to make them grow. You have got Directive Principles. There the State endeavours to give primary education and to find work and employment. The State does not take the responsibility to make the people work, on the principle that he does not work, neither shall he eat..we should have provisions for enforcement of work for able bodied citizens

கே டி ஷா அழகாக ஒன்றை வற்புறுத்தினார். The concept of living with dignity is tied to working with dignity .

கண்ணியமான மனித கெளரவத்தைக் காக்கும் வேலை என்பது சுரண்டலுக்கும் பேராசைக்கும் அப்பாற்பட்டு இந்தியர்களுக்கு கிடைக்கும் எனில் அது பொருளாதார அசமத்துவத்தை போக்குவதில் அடிப்படைகளை உருவாக்கும். ஆனால் இந்திய சமூக சமத்துவ பார்வைக்கு இன்னும் எவ்வளவு தூரம் நாம் பயணப்படவேண்டியிருக்குமோ- ஊகிக்க முடியவில்லை.

ஏராள விவாதங்கள் அரசமைப்பு அவையில் கொட்டிக்கிடக்கின்றன. அன்றைய பிரிவினைச் சூழலைத் தாங்கிய அச்சத்தையும், சந்தேகத்தையும், பாதுகாப்பையும், அதிகார மிகு தன்மையையும், இந்திய elite class தேவைகளையும் அவர்கள் ஆள தோதான சூழலையும் அந்த விவாதங்கள் பிரதிபலிப்பதை இந்த புத்தகம் தொட்டுக்காட்டுகிறது.

Jan 4

2023க்கு வணக்கம்

கடந்து போன 2023க்கு எனது வணக்கம். உடல் உபாதை மற்றும் மழை பாதிப்பு நாட்கள் நீங்கலாக மீதி பெரு நாட்கள் உழைக்க அருள் கூர்ந்த ஆண்டாக அமைந்தது. முகநூலில் சில நாட்களைத் தவிர தொடர்ந்து பதிவு இடமுடிந்தது. Pattabiwrites வலைப்பூவில் 500 பக்க அளவில் எழுத முடிந்தது. பங்கேற்ற கூட்டங்கள் மிகக் குறைவு. முறையாக மாதந்தோறும் என கணக்கிட்டு பார்த்தப்படி 117 புத்தகங்களை வாசிக்க 2023 நல்வாய்ப்பைத் தந்தது. ஆங்கில புத்தகங்கள் 50 ஆகவும்,தமிழ் புத்தகங்கள் 67 ஆகவும் அமைந்தன. வெகுசில மறு வாசிப்புக்குள்ளானவை. நீள அகல உயர புத்தகங்களும் ஏராளம். சிறு புத்தகங்களும் இதில் அடங்கும். புத்தகங்களுக்காக கொஞ்சம் ரூபாய் செலவிட முடிந்தது. அமேசான் அடிக்கடி வரலானது.

பல தரப்பு வாதங்களை முன்வைக்கும், பல் ரசனை- பல இச புத்தகங்களை வாசித்திருப்பதை , இதைப் பொருட்படுத்துபவர் உணரமுடியும். உலகின் பன்முகத்தை அதன் பல வாசங்களை இந்த புத்தகங்கள் நல்கின. டெண்டுல்கரின் மகாத்மா 8 வால்யூம்களை முடிக்க முடிந்த என்னால், பியாரிலால்- சுசிலாவின் 11 வால்யூம்களை முடிக்கமுடியாமல் 8 வது வால்யூமில் 2023 என்னை நிறுத்திவிட்டது. எனது வாசிப்பு வேக போதாமையால் செய்யவியலாமல் போனது.

என்னைவிட விரிவாக வீச்சாக படித்தவர் பலர் இருக்கக்கூடும். மிகச் சாதாரண எளிய நடுத்தர - சி செண்டர் வாழ்க்கையிலிருந்த வந்த - தொழிற்சங்க பழக்கம் தவிர வேறு கல்வி வாசனை இல்லாத எளிய மனிதன் என்ற வகையில் தீவிர வாசிப்பு பழக்கம் பற்றிப் பிடித்து அழைத்துச் சென்றதால் இந்த அளவாவது செய்ய நேர்ந்தது. உலகின்/ இந்தியாவின் ரம்யம் மட்டுமல்ல அதன் விரிவும் ஆழமும் அகலமும் பிரம்மாண்டத்தையும் உட்கார்ந்த இடத்திலிருந்து சற்றாவது உணர முடிந்தது. என்னுள் அவ்வப்போது எழும் ego களுக்கு குட்டுகளும் விழுந்தன.

வாசித்தவைகளை தந்துள்ளேன். அனைத்தையும் சிலராவது வாசித்திருக்கக்கூடும். வாசிக்காதவர் எப்போதாவது வாசிக்கக்கூடும் என்ற

வகையில் அவை உதவலாம். வாசிப்பும் எழுத்தும் உழைப்புதான் என ஏற்றால், 2023ல் உழைத்திருக்கிறேன் எனச் சொல்லலாம்.

2023ல் படித்த ஆங்கில புத்தகங்கள்

1. The Indian Constituent Assembly deliberations on democracy edited by Udit Bhatia

2. India Through the Ages A survey of the growth of Indian life and thought by Sir Jadunath Sarkar Madras univ lectures 1928

3. K M Munshi by v B Kulkarni

4. Rajendra Prasad Autobiography

5. DeenDayal Upadhyaya by Mahesh Sharma

6. Real Marxist Tradition by John Monyleux

7. Mahatma Life of MKG by D G Tendulkar vol 1

8. Mahatma Life of MKG by DGT vol 2

9. The Saffron Surge untold story of Rss leadership

10. Marx's Revenge the resurgence of Capitalism and The death of Statist Socialism by Meghnad Desai

11. Mao Zedong A biography by Jonathan Clements

12. Mahatma Life Of MKG D G Tendulkar vol 3

13. Ambedkar an intellectual biography by Vijay mankar

14. 75 years of Indian Economy by Sanjaya Baru

15. Mahatma vol 4 by D G Tendulkar

16. Mahatma vol 5 by D G Tendulkar

17. Mahatma vol 6 by D G Tendulkar

18. Karl Marx Greatness and Illusion by Gareth Jones

19. Marx before Marxism David McClellan

20. Interpreting The Dravidian Movement M S S Pandian

21. Mahatma vol 7 by D G Tendulkar

22. Mahatma Life of MK Gandhi by D G Tendulkar vol 8

23. Indian Ideas of Freedom by Dennis Dalton

24. Mahatma Gandhi vol 1 The Early Phase Pyarelal

25. Dr Babasaheb Ambedkar Life and Mission by Dhananjay Keer

26. Search for Truth Dr Radhakrishnan

27. Mahatma Gandhi vol 2 The discovery of Satyagraha on the threshold Pyarelal

28. Minoo Masani by S V Raju

29. Bal Gangadhar Tilak by Manoj Kumar and Monika

30. Periyar political Biography by Bala Jeyaraman

31. Mahatma Gandhi vol 3 Pyarelal

32. Marx's Das Capital A Biography by Francis Wheen

33. Reconstructing Lenin by Tamas Krausz

34. Understanding Dravidian movement by prof Karthigesu Sivathamby

35. Who wrote Bhagavad Gita by Meghnad Desai

36. Mahatma Gandhi vol 4 Sushila Nayar

37. Caste as social capital by prof R Vaidyanathan

38. Mahatma India Awakened vol 5 by Sushila Nayar

39. The political Career of E V Ramasami Naicker -viswanathan

40. The Dravidian Movement in TN and its legacy Lectures by A N Sattanathan (Rereading)

41. Nehru's India Essays edited by NayanTara Sahgal

42. The Origins and Development of Hinduism by A L Basham

43. Mahatma vol 6 salt satyagraha the watershed- Shushila Nayar

44. varna Jati caste by Rajiv Malhotra and Vijaya

45. Buddhism The Marxist Approach

46. Veer Savarkar by Dhananjay Keer

47. Mahatma vol 7 by Shushila Nayar

48. communism in Indian politics

49. Milestones - Indirani Jagajivan Ram

50. Hindus in Hindu Rashtra Anand Rangathan

2023ல் வாசித்த தமிழ் புத்தகங்கள்

1. ஜேபி எழுதிய மக்கள் சுயராஜ்யம் தஞ்சை சர்வோதயா

2. பார்ப்பனியத்தை விமர்சித்தல் by முரளி

3. சுப்பிரமண்ய சிவா கட்டுரைகள்

4. எஸ் ஸ்ரீநிவாச அய்யங்கார் பப்ளிகேஷன் டிவிஷன்

5. பரதகண்ட புராதனம் கால்டுவெல்

6. காமராஜர் ஓர் ஆய்வு வி கே நரசிம்மன்

7. காங்கிரஸ் மகாசபை வரலாறு பட்டாபி சீதாராமய்யா

8. டேவிட் ரியாஸ்னாவின் மார்க்ஸ் எங்கெல்ஸ்

9. இந்திய பெருமுதலாளி வர்க்கம் சுனிதிகுமார் கோஷ் (மறு வாசிப்பு)

10. கார்ல் மார்க்ஸ் - அ.மார்க்ஸ்

11. ஔரங்கசீப் ஆட் ரே ட் ரஷ்கே தமிழில் ஜனனி ரமேஷ்

12. மார்க்சின் மூலதனம் - தமிழில் தியாகு வால்யூம் 1

13. வல்லபாய் பட்டேல் - ஐ ஜே பட்டேல்

14. தென்னிந்தியாவில் இஸ்லாமியப் படையெடுப்புகள் எஸ் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

15. திராவிட இயக்கம் - பேரா அன்பழகன்

16. ஆடம் ஸ்மித் முதல் கார்ல் மார்க்ஸ் வரை - நீலகண்டன்

17. கம்பரிடம் யான் கற்ற அரசியல் ம பொ சி

18. எனது நினைவுகள் கோவை அய்யாமுத்து

19. தெற்கிலிருந்து ஒரு சூரியன்

20. பெரியார் அம்பேத்கர் நட்புறவு ஒரு வரலாறு- கி வீரமணி

21. அடி - தி. ஜானகிராமன் நாவல்

22. மகாபாரதம் மாபெரும் விவாதம் - பழ கருப்பையா

23. புளிய மரத்தின் கதை - சுந்தர ராமசாமி (மறு வாசிப்பு)

24. தி மு க வரலாறு

25. இந்தியத் தாயின் பணிக்கு .. சுவாமி விவேகானந்தர்

26. மால்கம் எக்ஸ் - ரவிக்குமார்

27. தமிழர் பண்பாடு - வையாபுரிப்பிள்ளை

28. கலையும் வாழ்வும் டால்ஸ்டாய் தமிழில் டி சி ராமசாமி

29. கயிறு தகழி சிவசங்கரப்பிள்ளை

30. மறைமலை அடிகள் நாட்குறிப்புகள்

31. வைக்கம் காந்தி கட்டுரைகள் வேங்கடராஜு

32. புத்தரின் புனித வாக்கு பால் காரஸ்

33. ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு புலவர் கா.கோவிந்தன்

34. மறைமலையடிகள் வரலாறு புலவர் அரசு

35. அரிஜன அய்யங்கார் சம்பந்தம்

36. திலக மகரிஷி ஜீவிய வரலாறு வ உ சி

37. பிறப்பொக்கும் நாவல் கன்யூட் ராஜ்

38. பெரியாரின் இறுதி உரை

39. ஈரோட்டுப்பாதை சரியா ஜீவா

40. வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும் நெடுஞ்செழியன்

41. ஆரியமாயை அண்ணா

42. திராவிட மாயை ஒரு பார்வை vol 1 சுப்பு

43. திராவிட அரசியலின் எதிர்காலம் சுகுணா திவாகர்

44. புறநானூறு தமிழர் நாகரீகம் சாமி சிதம்பரனார்

45. மொழிஞாயிறு பாவாணர்   பெருஞ்சித்திரனார்

46. ரிக் வேதகால ஆரியர்கள் ராகுல சாங்கிருத்தியாயன்

47. ஏழு நதிகளின் நாடு சஞ்சீவ் சன்யால்

48. திராவிட மாயை பகுதி vol 2 சுப்பு

49. ராஜகோபாலாச்சாரி ஆர் கே மூர்த்தி (மறு வாசிப்பு)

50. திராவிட மாயை பகுதி வால்யூம் 3 சுப்பு

51. பெரியார்- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

52. பாலஸ்தீனம் - சாமிநாத சர்மா

53. முசோலினி - வெ சாமிநாத சர்மா

54. தமிழ் இலக்கிய வரலாறு - தேவநேயப் பாவாணர்

55. குறளமுதம் தமிழ் வளர்ச்சித் துறை

56. சனாதன மறுப்பாளர் வள்ளலார்- ஜெயராமன்

57. திரும்பத் திரும்ப திராவிடம் பேசுவோம் - ப.திருமாவேலன்

58. நிலமெல்லாம் இரத்தம் - பா ராகவன்

59. ஜவஹர்லால் போராட்டக்காலச் சிந்தனைகள் அர்ஜூன் தேவ்

60. தலித்களுக்கு பாடுபட்டதா நீதிக்கட்சி வெங்கடேசன்

61. இஸ்லாம் தத்துவம் - ராகுல்ஜி

62. பழந்தமிழர் அரசியல் - சாமி சிதம்பரனார்

63. ஆஷ் அடிச்சுவட்டில் ஆ இரா வேங்கடாசலபதி

64. இஸ்லாமின் வரலாற்றுப் பாத்திரம் - எம் என் ராய் (மறு வாசிப்பு)

65. இஸ்லாமும் ஜிகாத்தும் ஏ ஜி நூரணி

66. கைலாசபதி இராம சுந்தரம்

67. மூலதனம் – வால்யூம் 2 தமிழ் தியாகு

Jan 5

இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தி- காங்கிரஸ் தலைவர்கள்- ஜின்னா முஸ்லிம் லீக் தலைமை- வைஸ்ராய் மற்றும் அவரது கவுன்சில் உறுப்பனர்கள்- மாநில கவர்னர்கள்- இந்து மகாசபா , சோசலிஸ்ட்கள், கம்யூனிஸ்ட்கள் போன்ற சிறு அமைப்பினர்- அனைத்திற்கும் மேலாக பிரிட்டன் நாடாளுமன்ற ஆளும் மற்றும் எதிர் கட்சி உறுப்பினர்- அமெரிக்க , ரஷ்யா, இத்தாலி , ஜெர்மனி, ஜப்பான், சீனா என இரண்டாம் உலகப்போரில் எதிர்காலத்தை நிர்ணயிக்க போராடிய சக்திகள் என ஏராள forces அவர்களின் விவாதங்கள் என ஏராளம் பின்னிக் கிடக்கின்றன.

1942 குவிட் இந்தியா அறிவிப்பை பயன்படுத்தி வைஸ்ராய் லின்லித்கோ அவரது கவுன்சில் உறுப்பினர்கள்- செயலர் அமேரி ஆகியவர்கள் காந்தி மீதும் காங்கிரஸ் தலைமை மீதும் முழு அவதூறுகளை பொய்களை பரப்பி கடுமையான அடக்குமுறைகளை கேலி அவமானங்களை செய்து வந்தனர். 1942-43 கால முழுமையான வைஸ்ராய் கவுன்சில் கூட்டக்குறிப்புகள் அப்படியே வரலாற்று ஆய்வாளர் எவரின் முயற்சியால் வெளியிடப்படும் எனில் பலர் வெளிறிப்போவர்.

லின்லித் படு கேவலமாக முரட்டுத்தனமாக நடந்துகொண்டதை அறியமுடிகிறது. வங்க பஞ்சத்தை சமாளிக்க முடியாத படு தோல்வியை இந்திய மக்களின் கோர சாவுகளை வங்க கவர்னரின் திறமையின்மையும், வைஸ்ராயின் பொறுப்பின்மையும் உணர்த்தின.

லின்லித் போய் வேவல் வைஸ்ராயாக வந்தார். அவர் வந்தவுடன் கல்கத்தா மற்றும் வங்கப் பகுதிகளுக்கு நேரில் சென்றார். கவர்னர் உட்பட அனைத்து திறமை மற்றும் பொறுப்பற்றவர்களையும் நீக்கி, திறம்பட சமாளிக்க முடிந்தவர்களை, முடிந்தவரை துயர் துடைக்கும் வழிகளைக் கண்டார்.

ஆகாகான் மாளிகையை குத்தகைக்கு எடுத்து அதில் ஒரு பகுதியை சிறைத்துறை வைத்திருந்தது. அங்குதான் காந்தி கஸ்தூர்பா தேசாய் மற்றவருடன் வைக்கப்பட்டிருந்தார். சிறைக் காலத்தில் மகாதேவ் , கஸ்தூர் சாவின் துயர்கள் காந்தியை வாட்டின. காங்கிரசின் உயர் தலைவர்கள் பலரும் சிறையில் வாடினர்.

குவிட் இந்தியாவிலிருந்து வேறுபட்ட ராஜாஜி தனது நிலைப்பாட்டை வெளியிலிருந்து பேசி வந்தார். லிபரல்கள் சாப்ரு ஜெயகர் தனியாக முயற்சிகளை செய்து வந்தனர். ஜின்னா காங்கிரஸ் இல்லாத சூழலை முழுமையாக பயன்படுத்தி அடைந்தால் பாகிஸ்தான் என்பதில் மும்முரமாக இருந்தார்.

இதுவரை அதிகம் எவராலும் வெளிச் சொல்லப்படாத செய்தி ஒன்றை சுசிலா தன் மகாத்மா வால்யூம் 8 ல் தருகிறார். த்வைனாம் Twynam central provinces கவர்னர். பிப்ரவரி 1944 ல் தீர்வு ஒன்றை முன்வைத்து தனது பேப்பரை அவர் தருகிறார். அதில் ஜின்னா- ராஜாஜி இருவரையும் கொண்ட அரசாங்கம்/ வைஸ்ராய் கவுன்சில் அமைத்தல் என ஆலோசனை சொல்கிறார். லின்லித் அமைத்த கவுன்சில் தான் வேவல் வந்தபோதும் தொடர்ந்தது. அதில் அம்பேத்கர் உட்பட பலர் இருந்தனர். குவிட் இந்தியா காங்கிரசை எதிர்த்தவர்கள்தான் அதில் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

ராஜாஜி நவம்பர் 1943 ல் கிரிப்ஸ் முன்மொழிவுகளை ஆதரித்து The way out என்கிற பிரசுரத்தை வெளியிட்டிருந்தார். அதை த்வைனாம் கவர்னர் endorse செய்து பிரிட்டிஷ் அரசிற்கு எழுதியிருந்தார். த்வைனாம் ஆலோசனையாக

Ignore Congress altogether and bring together Jinnah and Rajagopalachari to evolve a formula for an interim settlement with Muslim League. Rajagopalachari and Jinnah or a nominee of Jinnah, might also be asked to join the Executive Council (page 531 of Mahatma vol 8 by Shushila)

வேவல் அந்த ஆலோசனையை நிராகரித்தார். சிம்லா மாநாடு என்கிற சிந்தனைக்கு முன்பாக யார் எவர் அவர் பலம் என்ன என்கிற எதார்த்த நிலைமைகளை அவர் பரிசீலிக்க முயற்சித்தார். ஏப்ரல் 1944ல் அரசியல் நிலை என்ன என்பது குறித்த அவரது கருத்துக்களை லண்டனுக்கு அனுப்பினார். அதில்

“ Jinnah has seized the opportunity of the congress eclipse to strengthen the position of League…beyond Pakistan, I do not think he has any constructive ideas, and I doubt whether he has any clear constructive ideas about Pakistan itself. He is an ambitious politician and does not really represent the solid conservative Muslim spirit but power to stir up a lot of trouble and the will to do so in pursuit of his ambition..Jinnah might challenge Govt also..” (பக் 533 வால்யூம்)

காங்கிரசிற்கு வெளியே தலைவர்களாக தெரியக் கூடிய எவருக்கும் மக்களின் ஆதரவு இருப்பதாக உணரமுடியவில்லை என்கிற மதிப்பீட்டையும் வைஸ்ராய் வேவல் தந்துள்ளார்

The old liberals Sapru, Jayakar had no constructive ideas and no following. Rajagopalachari thought the ablest had no following. Ambedkar had some following but it was not influential. M N Roy had the elements of a party and with the government support might gain more followers. Still the Congress and League were the only parties which commanded popular following and could influence elections.

…in short the Congress leaders not released, the political deadlock would continue

நிலைமைகளை மனச் சாயல் ஏதுமின்றி முடிந்தவரை அறிந்து கொண்ட கள எதார்த்தப்படி வேவல் வெளிப்படுத்தியுள்ளார். அவர் குவிட் இந்தியா காலத்தில் வன்முறை அழிவுவேலைகளில் ஈடுபட்ட சோசலிஸ்ட்கள் குறித்தோ, அரசிற்கு ஆதரவாக அச்சூழலில் நடந்து கொண்ட இடதுசாரிகள் (எம் என் ராய் தவிர) குறித்தோ, வெளிநாட்டில் ஜெர்மனி ஜப்பான் ஆதரவை தேடிக்கொண்டிருந்த நேதாஜி குறித்தோ, சாவர்க்கரின் இந்து மகாசபா குறித்தோ வேவல் ஏதாவது தெரிவித்தாரா / தெரிவிக்கவில்லையா என்பதை சுசிலா புத்தகம் மூலம் அறியமுடியவில்லை.

விடுதலை வரலாறு மகாநதி போன்ற ஒன்று. அதில் பல ஓடைகள், சிறு குட்டைகள் என ஆங்காங்கே நீர் திவலைகளாக சில பெருமிதங்கள். மகாநதியாக சென்ற அதன் வரலாறு ஏராள சுழிப்புகள் கொண்டதாக செல்வதைக் காணமுடிகிறது.

Jan 5 2024

லெனின் குறித்த லூயி பிஷரின் பெரிய புத்தகம் ஒன்றை படித்துக்கொண்டிருக்கும் போது அதில் இடம் பெற்ற lighter moment செய்தி ஒன்றைப் பார்த்தேன். லெனின் சிரித்த இடங்களையெல்லாம் பிஷர் பதிவு செய்திருப்பார். லெனின் ஜோக் அடிக்கும் இடம் கூட வருகிறது. இதெல்லாம் ஜோக்கா என சொல்லக்கூடாது. அனுபவிக்க முடிந்தால் நல்லது.

லெனின் கிருப்ஸ்காயா மற்றும் கிருப்ஸ்காயா அம்மா மூவரும் பேசிக்கொண்டிருந்தபோது அந்த ஜோக் அடிக்கப்பட்டது.

லெனின் கேட்கிறார் இரட்டை கல்யாணம் செய்தவர்க்கு பெரிய தண்டனை என்ன தெரியுமா? அவரே சிரித்துக்கொண்டே பதில் சொல்கிறார். அய்யோ ”இரட்டை மாமியார்” இருப்பார்களே. இவ்வளவிற்கும் கிருப்ஸ்காயா தாயார் அவர்களுக்கு உதவிகரமாக இருந்தவர்தான். Lighter moment ஆக எடுத்துக்கொள்ளவேண்டும்.

பொலிட்டிகலாக கீழே விழுந்து மேலே வந்தவர்கள் குறித்து நரசிம்மராவ் பற்றி எழுதிய வினய் சத்பதி ஒப்பீடு ஒன்றை தந்திருப்பார். சர்ச்சில் டெங்சியோபிங் நரசிம்மராவ் எனப் போகும். அதில் டெங் பற்றி ஒரு தகவலை வினய் தந்திருப்பார்.

1960களில் மாவோவுடன் டெங்கிற்கு ஏற்பட்ட கருத்து மாறுபாட்டால் அவருக்கு வினோத தண்டனை ஒன்று தரப்பட்டதாம். டெங்கும் அவரது மனைவியும் ஜிங்ஜியாங் டிராக்டர் ஒர்க்ஷாப் பகுதிக்கு அனுப்பப்பட்டனர். தினம் காலை 6.30க்குள் அவர்கள் எழுந்து மாவோவின் எழுத்துக்களை ஒருமணி நேரம் படிக்க வேண்டும். பின்னர் தினம் டிராக்டர் ஒர்க் ஷாப்பில் உடல் உழைப்பை செய்திட வேண்டும் என்பது தண்டனையாகி அவர் அதை செய்ய நேர்ந்தது. நான்கு ஆண்டுகள் முடித்தவுடன்தான் மீண்டும் மாவோ தரிசனமே அவருக்கு கிடைத்ததாம். பொறுமை காத்த அந்த டெங்சியோபிங் தான் பின்னர் 1970 களின் - 1980களில் சீனாவின் மாபெரும் சீர்திருத்த தலைவராக எழுந்தார். அவரது சிந்தனைகளை உலகின் பல இடதுசாரிகள் படித்தனர். வலதுசாரிகளும் அவரது மேற்கோள்களை காட்டலாயினர்.

Jan 6

தோழர் O P குப்தா

தோழர் குப்தா விடுதலை போராட்ட மரபுகளிலிருந்து முகிழ்த்தவர். மார்க்ஸ் துவங்கி மாவோவரைக் கற்றவர். காந்திஜி அவர்களின் நடைமுறைகளை உள்வாங்கியவர். தன்னை ஞானவான் ஆகக் காட்டிக் கொள்ளாதவர். ஓரடியானாலும் அனைவருடன், மிகப்பொறுப்புடன் என்கிற நெறிகாத்து நின்றவர்.

தோழர் குப்தாவின் பல்வேறு தலையீடுகள் ஊழியர்களுக்கும் இயக்கத்திற்கும் எவ்வாறு சாதகமாக அமைந்தன என்பதைப் பல்வேறு இடங்களில் இப்பிரசுரம் சுட்டிக்காட்டுகிறது. விவாதங்களில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார் தோழர் குப்தா. விவாத மூடல், உரையாடல் மறுப்பு இயக்க ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும்; அதே நேரத்தில், முடிவேயின்றி விவாதம் என்பதும் கூடாது என்றும் கற்றுத் தந்தவர்.

தோழர் குப்தாவிடம் அறிவுப் பெருக்கத்திற்கான உரையாடல்கள் இருப்பதில்லை. காரியார்த்தமான, செயல்பாட்டிற்கு ஊக்கம் தரும் உரையாடல்களையே அவர் மேற்கொண்டார். Talk Big (வானளாவ வாய் வீச்சு) என்பதெல்லாம் அவரிடம் காண முடியாது. ஓரடியானாலும் அனைவருடனும் போதுமானது என்கிற காந்திஜி வகைப்பட்ட செயல்பாடே அவரிடம் இருந்தது.

அவரிடம் ஒளிவு மறைவு இருக்காது. இரகசியங்களின் மூலம் இயக்கம் வளர்ந்துவிடாது எனச் செயல்பட்டவர் தோழர் குப்தா. எவர் பலத்தையும், குறிப்பாக அரசாங்கத்தின் பலத்தைக் குறைத்து மதிப்பிடாதவர். தன்னைப் பற்றியும் மிகை மதிப்பீடுகளை ஏற்படுத்தாதவர். எவரின் பலவீனங்களையும் சாதகமாக்கிக் கொள்ளவேண்டும் எனச் செயல்படாது, உரையாடல் மூலம் நேர்மறையாக விவாதக் கருத்தொற்றுமைக்கு வாழ்நாள் முழுவதும் நின்றவர் தோழர் குப்தா.

நிர்வாகத்துடனோ, அமைச்சர் பெருமக்களுடனோ விவாதம் முடிவடைந்த நிலையில் கூட்டக்குறிப்பை அவர் கோருவார். அதில் சுட்டிக் காட்டவேண்டிய இடைவெளிகள் இருந்தால் உடன் சுட்டிக் காட்டுவார். அப்படி மினிட்ஸ் என ஏதும் வரவில்லையெனில், அவரே நடந்தவற்றை உரியவர்களுக்கு நினவூட்டும் வகையில் பதிவிடுவார். ஊழியர்களுக்கும் அது வெளிப்படைத் தன்மையுடன் உதவும்.

அவசியமற்ற போராட்டங்களைக் கட்டிவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையுணர்வுடன் இருப்பார் குப்தா. தொழிலாளர் மீதான தாயுள்ள பண்புகளுடன் அவர் நகர்வுகள் அமையும். தன்னை வருத்திக் கொள்வதும், கூடுதல் அவசியமெனில் துணை சக்திகளாகத் தன் படையை இறக்குவதுமான போராட்ட முறையை அவர் கைக்கொள்வார். தோழர்களின் சக்தியை அவசியமின்றிச் செலவிட ஒப்பமாட்டார். எவரையும் போராட்டத்தில் காவு கொடுத்துவிடக் கூடாது என்கிற உறுத்தல் உணர்வு அவரிடம் தொழிற்பட்டுக் கொண்டே இருக்கும்.

வானளாவிய கோரிக்கைகளில் அவர் உடன்பட மாட்டார். ரூ 1/= ஆனாலும் அதன் நியாயப்பாட்டை, தேவையை உணர்ந்தே கோரிக்கைகளை உருவாக்குவார். உருவாக்கிவிட்டால் கோரிக்கைகளை நடைமுறையாக்கிடத் தொடர் முயற்சிகளை எடுப்பார். தீர்வினையும் கொணர்வார்.

கார்ப்பரேஷன் உருவாக்கம் குறித்து Connecting India - The Birth of BSNL என்கிற புத்தகம் ஒன்றை டைரக்டர் நிதி ஆக இருந்து ஓய்வுபெற்ற புகழ் வாய்ந்த திரு S D சாக்சேனா எழுதினார். பல்வேறு பக்கங்களில் தோழர் குப்தாவின் மேதமையை, ஆளுமையை அவர் பதிவிட்டுள்ளார். அவரின் அந்தச் சில வரிகளை இங்கு தருவது பொருத்தமாக இருக்கும்.

“Mr Gupta always said that Organisational Viability was of paramount importanace and had to be the long term objective that would ensure survival and growth of the organization. One ought not to be distracted by the short term strategy, and the narrow focus of bargaining for higher salaries and benefits for the employees…. Mr Gupta prevailed on the Govt to grant pension benefits to the employees of BSNL- a privilege that no other PSU got at that time… It goes to the credit of O P Gupta who had a vision for the corporation and yet worked in the interest of workers and was still to sell the idea of change to them. It is sad that in the next union elections, Gupta lost because he had stonewalled workers' demands for short term benefits. But by then, he had already attained a status that went beyond power, privilege and prestige.”

டைரக்டர் நிதி பொறுப்பு வகித்த திரு S D சாக்சேனா பதிவிட்டதன் தமிழாக்கம்:

“திரு குப்தா எப்போதும் கூறுவார், எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது நிறுவனத்தின் நிலைத்தன்மை. நிறுவனம் நிலைத்திருக்கச் செய்வது என்பதுதான் தொலைநோக்கு இலக்காக எப்போதும் இருக்க வேண்டும். அப்போதுதான்

நிறுவனம் துடிப்புடன் இயங்கவும் தொடர்ந்து வளர்வதையும் உறுதி செய்ய முடியும். அதற்கு மாறாக, ஊழியர்களுக்கான உயர் ஊதியம் மற்றும் சலுகைகள் பெற தொழிலாளர்களின் கூட்டுபேரச் சக்தியை – தொலை நோக்கைக் கைவிட்டு – குறுகிய வழிமுறையாகக் கொண்டு நமது கவனம் சிதற விட்டுவிடக் கூடாது.. .. .. BSNL ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்களை அரசே வழங்க வேண்டும் என்ற தனது நிலைபாட்டை மத்திய அரசை ஏற்க வைத்தார் திரு குப்தா. அப்போது ஓய்வூதியச் சலுகை என்பது வேறு எந்தப் பொதுத்துறை நிறுவனத்திலும் நடைமுறையில் இல்லாத ஒன்று. அப்படி இருந்த போதும், ஓய்வூதியத்தைப் பெற்றுத் தந்த பெருமை முழுமையும் திரு குப்தாவையே சாரும். அவருக்கு கார்பரேஷன் குறித்த தெளிவான தொலைநோக்குக் கனவுப் பார்வை இருந்தது; அவர் நிறுவனத்தின் நலனுக்காக நின்றார், அதே நேரத்தில் ஊழியர்களுக்கான நலன்களுக்காக உழைத்து அதனைப் பெற்றும் தந்தார். அவருக்குத் தனது கருத்தோட்டங்களை அரசிடமும் நிலை நிறுத்த முடிந்தது, தனது உறுப்பினர்களிடமும் மாற்றத்தை ஏற்கச் செய்ய முடிந்தது. ஆனாலும் துயரகரமானது, அடுத்து வந்த சரிபார்ப்புத் தேர்தலில் திரு குப்தா தோல்வி அடைந்தது – அவரது தோல்வி ஏனெனில், குறுகிய காலப் பயன்களைக் கருதி ஊழியர்கள் முன் வைத்தக் கோரிக்கைகளுக்கு எதிராகத் தடுப்புச் சுவராக அவர் நின்றார் எனக் கருதப்பட்டதே. தோல்வி அடைந்தால் என்ன, அப்போதே அவர் பதவி, அதிகாரம், ஆதாயம், புகழ் என்பதை எல்லாம் கடந்துவிட்ட ஒரு பேருரு உயர்நிலையை அடைந்து விட்டார்.”)

1972 பென்ஷன் விதிகளே குணாம்சத்தில் சட்டபூர்வமானவைதான். ஏனெனில் அவை அரசியல் அமைப்பு சட்டவிதிகள் 309 மற்றும் விதி 148 - 5 ன் வகைப்பட்டும் உருவாக்கப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றமும் பென்ஷனை அரசின் கருணையினால் வழங்கப்படும் கனிவுக்குரிய ஒன்றல்ல, அது ஊழியர்களின் கடந்தகாலச் சேவைக்குரிய பேமெண்ட். - குறைந்த ஊதியம் காரணமாகத் தரப்படும் ஈடு என்றே வரையறுத்தது. Pensioners should live not merely exist (ஓய்வூதியர்கள் சமூக அந்தஸ்துடன் வாழ வேண்டும்; மாறாக ஏதோ உயிரோடு இருக்கிறார்கள் என்பதாகக் கருதலாகாது) என்பது உணர்வாக இருக்கவேண்டும் என்றது.

பொதுவாக, சட்டப்படியான உரிமை என்றே பென்ஷன் பார்க்கப்படுகிறது. 5 வது ஊதியக்குழு ‘As such It should be fixed, revised, modified and changed in ways not entirely dissimilar to the salaries granting to serving employees (எனவே ஓய்வூதியமும் உரிமை என்ற வகையிலேயே நிர்ணயிக்கப்படவும், மாற்றியமைக்கப்படவும் வேண்டும்; அத்தகைய பென்ஷன் திருத்தம், உயர்த்தி மாற்றியமைக்கப்படுவதும் பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் அளிக்கப்படுவதன் அடிப்படையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக, மாறுபாடு உடையதாக அமைய வேண்டியதில்லை) என்று குறிப்பிட்டது. பென்ஷன் உரிமையானது மட்டுமல்ல - அது ரூல்களின்படியானது என்றும் நீதிமன்றம் வழிகாட்டியுள்ளது. நாம் அரசாங்க ஊழியராக இல்லாமல் பொதுத்துறை ஊழியராக ஓய்வுபெற்றாலும் நமது பென்ஷன் அப்படி ரூல்வகைப்பட்டதாகச் --சட்டபூர்வ பாதுகாப்பு கொண்டதாக-- மாற்றிக் கொண்டுள்ளோம் என்பதே நமது இயக்கத்தின் தனிச்சிறப்பு. பென்ஷன் கொடுப்பதற்கு Fund or Reservoir (ஓய்வூதிய நிதியம், தனித்தொகுப்பு) என்பதெல்லாம் ஏற்கமுடியாது whatsoever due and payable by Govt is budgeted for (எவையெல்லாம், எவ்வளவு எல்லாம் பெற உரிமையானதோ, அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டியதோ, அவை எல்லாம் அரசின் பட்ஜெட் மூலமாக மட்டுமே) என உறுதியாக நின்று பங்களிப்பைச் செய்தவர் மகத்தான தோழர் ஓ பி குப்தா.

Inputs from the booklet of OPG and Pension issue

Jan 6

ஆகஸ்ட் 8 1942ல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய முழு தீர்மானத்தையும் படித்துக்கொண்டிருந்தபோது, அதில் எங்கேயாவது quit India என்ற பதம் எழுதப்பட்டுள்ளதா என்பதை வரிக்கு வரி தேடிப்பார்த்தேன். குவிட் இந்தியா என்ற பதமோ அல்லது தமிழில் அடிக்கடி நாம் பயன்படுத்தும் 'வெள்ளையனே வெளியேறு' எனப் பொருள்படும் நிற இனச் சொல்லாடலோ அதில் காணப்படவில்லை.

பல வரிகள் நேரு எழுதி காந்தி சரி பார்த்தவையாகவே எனக்குப் படுகிறது. ருஷ்ய சீன போராட்டங்கள் அத்தீர்மானத்தில் பாராட்டப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்ற சொல்லாடல் வந்திருந்தாலும், நாசிசம்- பாசிசம்- ஏகாதிபத்திய எதிர்ப்பில் விடுதலை இந்தியா உறுதியாக நிற்கும் என்ற உறுதிமொழி அதில் தரப்பட்டிருந்தது. உடன் இந்திய விடுதலை என்பதை பிரிட்டிஷ் அமெரிக்கா ஏற்று செயல்படுத்த வேண்டும் என்ற அப்பீல் அதில் இடம் பெற்றிருந்தது. குவிட் இந்தியா என்கிற exact சொல்லாடல் அதில் இல்லை.

..the immediate ending of British Rule in India is an urgent necessity, both for the sake of India and for the success of the cause of the United Nations என்கிற வரிகள் தான் பிரிட்டிஷ் ஆட்சி உடனடியாக இந்தியாவில் முடிவடைய வேண்டும் எனப் பேசுவதைக் காணலாம்.

அதேபோல் இத்தீர்மானம் அகிம்சை வழி மக்கள் திரள் போராட்டம் என்பதும் கூட காங்கிரசை பதவிக்கு கொணர்வதற்கான நோக்கம் கொண்டதல்ல என்பதைச் சொல்லிவிட்டு கீழ்கண்ட உறுதிமொழியையும் தந்தது.

The power when it comes, will belong to the whole people of India.

இப்படிப்பட்ட தீர்மானம்தான் பிரிட்டிஷ் பேரரசையே பயமுறுத்தி அச்சப்பட வைத்தது. கொடுமையான அதிரடி நடவடிக்கைகளை லின்லித் வைஸ்ராயும் அவரது கவுன்சில் உறுப்பினர்களையும் எடுக்க வைத்தது. காந்தியும் நேருவும் பிற தலைவர்களும் தீர்மானம் நிறைவேற்றிய உடனேயே கைது செய்யப்பட்டு, விசாரணை இல்லாமலேயே சிறை வாழ்க்கையில் வைக்கப்பட்டனர்.

காந்தி மீது தேவையற்ற அபாண்ட அவதூறுகளை பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் பரப்பியது. அமெரி லின்லித் சர்ச்சில் போன்றவர்கள் படு மோசமாக மன வக்கிரத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர்.

இந்தியாவிலும் லீக் ஜின்னா, ராஜாஜி, அம்பேத்கர், எம் என் ராய், கம்யூனிஸ்ட் இயக்கம், லிபரல்கள், இந்து மகா சபா என பல்வேறு தரப்பினரும்- காந்தியை காங்கிரசை ஆகஸ்ட் தீர்மானத்தை சந்தேகத்துடன் பார்த்தனர். நாசிகள் ஜப்பானியருக்கு ஆதரவான ஒன்றாக புரிந்துகொண்டு, பிரிட்டிஷ் ஆட்சிக்கு துணை நிற்கும் நிலைப்பாட்டை எடுத்தனர்.

காந்தி ஆகஸ்ட் தீர்மானத்தை விலக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தங்களை வைஸ்ராய்களாக இருந்த லின்லித்கோ, வேவல் எடுத்தனர். காந்தி ஆகஸ்ட் சரியான தீர்மானம் என்றார், ஏற்பட்ட வன்முறைகள் பிரிட்டிஷ் அரசின் விளவுகளே - தன்னை பொறுப்பாக்குவது உண்மைக்கு மாறானது என தனித்து போராடிக்கொண்டிருந்தார். அதற்கான இழப்புகளையும் அவர் சந்தித்தார். தனது அவயம் எனக் கருதிய மகாதேவ தேசாயை சிறை வாழ்க்கையில் இழந்தார். 62 ஆண்டுகள் தாம்பத்திய தோழி கஸ்தூர்பாவை இழந்தார். கடுமையான உடல் உபாதைகளை அனுபவித்தார். அமெரியும் சர்ச்சிலும் தொடர்ந்து impolite ஆகவே பேசி வந்தனர். 27 ஆண்டுகால நண்பர் ஜின்னா கஸ்தூர் மறைவிற்கு அஞ்சலி செய்தி கூட அனுப்பாத நிலையையும் பார்க்கிறோம்.

குவிட் இந்தியா வெள்ளையனே வெளியேறு என்கிற பதம் மட்டுமல்ல, அந்த தீர்மானம் உருவான விவாதச் சூழல், எழுதப்பட்ட வரிகள், பின்னர் உருவான அடக்குமுறைகள், ஜேபி லோகியா உள்ளிட்ட சோசலிஸ்ட்களின் கலகங்கள் என அனைத்தும் தவறாகவே புரிந்துகொள்ளப்பட்டன. அனைத்திற்கும் காந்தி என அவர் சுமைதாங்கியாக்கப்பட்டார்.

Jan 6

Thus Wrote KAUSIK BASU

Money is nothing but a generic promise from society—government being the most important arbiter of that—that you will be able to change these bits of paper for goods and services in the future. This is why the worker who toils all day accepts money rather than insisting her employer hand over food, clothing, and shelter material as payment at the end of each day’s hard work. Money is a kind of pledge to her by society at large. She can redeem that pledge at leisure and in small measures—buying food, shelter, education, as and when she needs these.

Money was not discovered one day in a moment of scientific triumph. It emerged gradually, in small measures and through little innovations. But in terms of human achievement it must stand right there at the pinnacle of inventions. Without it we would have very little of what we know today as civilized life.

(in his book An Economist in the Real World)

Jan 6

கார்ல் மார்க்ஸ் லண்டன் வாழ்க்கையில் பெரும்பாலும் பிரிட்டிஷ் மியுசியத்தில் மணிக்கணக்காக படித்து குறிப்புகளை எடுப்பவராக இருந்தார் என்பது பலரும் அறிந்த செய்தி.

மார்க்ஸ் தனது சொந்த நூலகம் -படிப்பறை -எழுது மேசை அறை குறித்த செய்தியை மார்க்சிய அறிஞர் மார்செல்லோ முஸ்ட்டோ தனது The Last Marx 1881-83 An Intellectual Biography ல் தருகிறார். முஸ்ட்டோ இந்தப் புத்தகத்தை இத்தாலிய மொழியில் 2016ல் எழுதினார். மார்க்ஸின் 200 ஆம் ஆண்டையொட்டி தமிழ் உட்பட பலமொழிகளில் இவ்வாக்கம் வெளியானது.

தமிழில் முஸ்ட்டோவுடன் பழகிய அறிஞர் எஸ் வி ராஜதுரை , என் சி பி எச் வழியாக 2018ல் மொழிபெயர்த்து அரிய சேவை ஒன்றை ஆற்றியிருக்கிறார்.

மார்க்ஸின் நூலகத்தில் 2000 நூல்கள் இருந்ததாம். மிக அதிக அளவில் ஜெர்மனி, ஆங்கில (1/3 1/3) நூல்கள் இருந்தன. அதற்கு சற்றுக் குறைவாக பிரஞ்சு நூல்களும், சில சிரில்லிக் எழுத்து வகை ரஷ்ய நூல்களும் இருந்தனவாம். அரசியல் கோட்பாடு, வரலாற்று ஆய்வுகள், தத்துவ நூல்கள், இயற்கை அறிவியல் என பல வகைப்பட்ட நூல்கள் இருந்தனவாம்.

1878ல் அவரது படிப்பறையை பார்த்த சிக்காகோ ட் ரிப்யூன் நிருபர் இவ்வாறு எழுதியுள்ளார்

“ ஒரு மனிதரை அவர் படிக்கும் புத்தகங்களைக்கொண்டு பொதுவாக மதிப்பிட முடியும். எனது மேலோட்டமான பார்வைக்கு ஷேக்ஸ்பியர், டிக்கன்ஸ், தாக்கரே, கெதே, வால்டைர், பெய்ன் ஆகியோரின் நூல்கள் தென்பட்டன. ஆங்கில, அமெரிக்க, பிரஞ்சு நூல்கள், புளூ புக்ஸ்- (நீலப் புத்தக ஆவணங்கள்) , ரஷிய, ஜெர்மன், ஸ்பானிய, இத்தாலிய இன்னும் பல மொழிகளில் எழுதப்பட்ட அரசியல், தத்துவ நூல்கள் காணப்பட்டன”

லபார்க் அவர்கள் மார்க்சிற்கும் புத்தகங்களுக்குமான உறவை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்

“ புத்தகங்கள் அவரது சிந்தனைக்கான கருவிகளேயன்றி, ஆடம்பர பொருட்கள் அல்ல. அவை என் அடிமைகள், நான் விரும்பும் அளவிற்கு அவை எனக்கு சேவை புரியவேண்டும் என மார்க்ஸ் சொல்வார். அவர் புத்தகப் பக்க முனைகளை மடித்து வைப்பார். பக்க ஓரங்களில் பென்சிலால் கோடிட்டு சம்பந்தப்பட்ட வரிகளை குறித்து வைப்பார். சில வரிகள் முழுமைக்கும் அடிக்கோடு இடுவார். புத்தகங்களில் அவர் எதையும் எழுத மாட்டார். சம்பந்தப்பட்ட நூலின் ஆசிரியர் தாம் சொல்ல வந்த விஷயத்தில் மட்டுமீறிப் போய்விட்டதைக் கண்டால் அந்த இடத்தில் கேள்விக்குறியையோ ஆச்சரியக்குறியையோ இடாமல் அவரால் இருக்க முடியாது. அடிக்கோடிடும் முறையை அவர் கையாண்டதால் , எந்த நூலிலும் தமக்கு தேவையான பகுதியை அவரால் எளிதாக கண்டறிய முடிந்தது”

மார்க்ஸ் லபார்க்கிற்கு எழுதிய ஏப் 11, 1868 விளக்கம் ஒன்றில் இவ்வாறு தன்னைப் பற்றி சொல்கிறார்

“ புத்தகங்களை விழுங்கி, பின்னர் மாற்றப்பட்ட வடிவத்தில் அவற்றை வரலாற்றின் குப்பை மேட்டில் தூக்கியெறிகின்ற இயந்திரமாக இருக்கும்படி நான் விதிக்கப்பட்டுள்ளேன்”

மார்க்ஸின் படிப்பறையில் சோபா ஒன்றிருந்தது. அவ்வப்போது அதில் அவர் ஓய்வு எடுப்பார். ஓய்விற்கு மற்றொரு முறை அறையில் நடந்து கொண்டிருப்பது. திடிரென வந்த சிந்தனையை எழுத அமர்வார். லபார்க் எழுதுகிறார்- மார்க்சும் அவரது படிப்பறையும் ஒன்று பட்டிருந்தன. அதிலிருந்த புத்தகங்களும் காகிதங்களும் அவரது கைகால்களைப் போலவே அவரது கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தன.

- கார்ல் மார்க்ஸ் அறிவுலகப் பயணத்தில் புதிய திசைகள் மார்செல்லோ முஸ்ட்டோ தமிழில் எஸ் வி ராஜதுரை

Jan 6

Autobiography Rajendra Prasad 1946ல் அவரால் எழுதப்பட்ட ஒன்று. 2010ல் பெங்குவின் பதிப்பு வந்தது. 600 பக்கங்கள் கொண்ட சுயவரலாறு.

தன்வரலாறு புத்தகங்களில் சில அனுபவத் தெறிப்புகளும், சுவையான செய்திகளும், எடுத்துக்கொள்ளவேண்டிய பாடங்களும் கிடைக்கும். குறிப்பிட்ட காலச்சூழலில் அந்த குறிப்பிட்ட மனிதன் எழுந்து உருவாகும் சித்திரமும், அவரின் பார்வையில் நிகழ்ச்சி ஓட்டங்களும் வாசிப்பவர்க்கு கிடைக்கும்.

பிரசாத் தன்வரலாறு இப்படிப்பட்ட சுவைகளை கொண்ட ஒன்றுதான். அவரின் கிராமம், குடும்பச்சூழல், பிகாரி காயஸ்தா சாதி ஆசாரங்கள், கல்கத்தா உயர் ஆங்கில கல்வி, வக்கீலான சூழல் என ஆரம்ப பக்கங்களில் நகர்கிறது. வெளிநாடு சென்ற காயஸ்தர்கள் சாதி நீக்கம் - சேர்த்துக்கொள்ள பிராயசித்தம் போன்ற அக்கால நடைமுறைகள் இவர்கள் கிராமத்திலும் வலுவாக இருந்துள்ளது.

பிரசாத் தனது அண்ணன் மற்றும் சில நண்பர்கள் உதவியுடன் இங்கிலாந்து செல்வதற்கான ஏற்பாடு இரகசியமாக நடந்து வந்தது. எப்படியோ தந்தைக்கு கசிந்து பெரும் பிரச்னை ஆனது. ஏற்பாட்டை என்ன செய்வது. நண்பர் சுகதேவ் வர்மாவுடன் ஜோஸ்யர் ஒருவரை பார்த்து கனவு பலிக்குமா என கேட்க பிரசாத் செல்கிறார்.அவர் வயதான பிராம்மண ஜோஸ்யர். அந்தப் பெரியவர் ஜாதகம் பார்த்துவிட்டு சொல்கிறார். பலிக்கும் ஆனால் இப்போது இல்லை என்கிறார். இருவரும் சிரித்துக்கொண்டே வெளியே வருகின்றனர்.

பிரசாத் ஏற்பாடுகள்தான் முடிந்துவிட்டதே, தாம் இங்கிலாந்து போவது உறுதி என நினைத்துக்கொண்டிருக்கிறார்.

அப்பா உடல்நிலை மோசமாகி உடன் கிராமம் திரும்பும் நிலையில், சுகதேவ் கேட்கிறார்- நான் இங்கிலாந்து போகட்டுமா என்று. ஏற்பாடுகள் அவருக்கு மாற்றப்பட்டு சுகதேவ் வெளிநாடு செல்கிறார். பிரசாத் தன் கிராமம் திரும்பி அப்பாவின் சாவை சந்திக்கிறார். நல்லவேளை இங்கிலாந்து போகவில்லை என்ற மனநிலையில் ஆறுதல் அடைகிறார். அந்த ஜோஸ்யரும் கண்முன் வருகிறார்.

பிரசாத் வக்கீல் தொழிலை அப்பரண்டிஸ் ஆக practice செய்திட புகழ்வாய்ந்த கான் பகதூர் சம்சுல் ஹூடா அவர்களிடம் சேர்கிறார். கடின உழைப்பால் அவரின் அன்பை நம்பிக்கையை பெறுகிறார். ஹூடா முஸ்லிம் லீகின் தலைவராகவும்

கல்கத்தா பகுதியில் செல்வாக்கு பெற்றவர். பின்னர் வங்க கவர்னர் கவுன்சில் உறுப்பினராகவும் இருந்தவர். கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்ந்தவர்.

பக்ரீத் வரபோகிற சூழல். பசுவை வெட்டி நிகழ்வு அங்கு நடந்தால் என்ன செய்வது என்று பயிற்சி வழக்கறிஞர் பிரசாத்திற்கு மனக்குழப்பம். நான்கு நாட்கள், பக்ரீத் முடிகிறவரை ஹூடா அலுவலகம் வீட்டு பக்கம் போகவேண்டாம் என பிரசாத் முடிவெடுக்கிறார். பக்ரீத் முடிந்து பிரசாத் ஹூடா வீட்டிற்கு செல்கிறார்.

என்ன 4 நாட்களாக காணவில்லை என ஹூடா கேட்கிறார். நண்பர்களை பார்க்கப்போய்விட்டதாக பிரசாத் பதில் தருகிறார். ஏய் பசுவை பக்ரீத் பண்டிகைக்கு வெட்டிவிடுவோம் என்றுதானே நீ வரவில்லை என ஹூடா போட்டுடைத்தார். பிரசாத் நீ ஒன்றை தெரிந்துகொள். நாங்கள் பசுவை கொலைசெய்வதில்லை. எங்கள் இல்லத்தில் பல இந்து வேலைக்காரர்கள் இருப்பதால் அவர்கள் மன உணர்வை புண்படுத்தக்கூடாது என்று அந்த முடிவை நாங்கள் எடுத்தோம் என விளக்கினார்.

ஹூடா அப்போது வங்கப்பிரிவினைக்கு ஆதரவாக நின்றவர். முஸ்லிம் லீக் சார்ந்தவர் என்பதெல்லாம் இருந்தாலும், அவர் வெளிப்படுத்திய இந்த உயரிய பண்பை கேட்டு வருத்தத்தை தெரிவித்தார் பிரசாத்.

மண்டேலா சொன்னதுதான் நினவிற்கு வருகிறது. எந்த மனிதரும் அவர் வெளிச்செய்வது போல்தான் மனதளவிலும் இருப்பார் என நினைக்கவேண்டியதில்லை. எல்லோர் மனதிலும் ஈரக்கசிவு சுரக்காமல் இருப்பதில்லை. சூழலும் நிர்ப்பந்தமும் ஒருவரை ஏதோ ஒரு பக்கத்தில் குறிப்பிட்ட காலத்தில் நிறுத்தியிருக்கலாம். தனிப்பட்டு நெருங்கி எந்த மனிதரையும் அருகே தொடும்போது அவரின் குழந்தைத்தன்மையை, வாஞ்சையை, ஈரக்கசிவை நாம் உணரமுடியும். Inputs Autobiography Rajendra Prasad

Jan 7

லெனின் ஆட்சிக் காலத்தில் கட்சிக்குள் கடுமையான விவாதங்கள் நடந்தன. அனைவருமே ஆட்சி நிருவாகத்திற்கு புதியவர்கள். மார்க்சிய தியரியை வெகுவாக நேசித்து நம்பியவர்கள். அதை சோதிக்க விரும்பியவர்கள். தொழிற்சங்கத்திற்கு என்ன பங்கு, மரணதண்டனை இருக்கலாமா, விவசாயிகள்

தங்கள் நிலத்தின் விளை பொருட்களை விற்றுக்கொள்ளும் தனியார் முறை இருக்கலாமா என பல பிரச்சனைகளில் தீவிர விவாதம் இருந்தது. விவாதம் கட்சி ஒற்றுமை என்ற எல்லைக்குள் இருக்கவேண்டும், நடைமுறை தேவைகளை புரிந்து அனுசரிப்பதாக இருக்கவேண்டும் என்கிற அறிவுரையை மட்டும் லெனின் கொடுத்து வந்தார். லெனின் , புகாரின் டிராட்ஸ்கி, லுனாசார்ஸ்கி, ஸ்டாலின் என பல கோணத்தில் ஒத்துப்போகியும் வேறுபட்டும் அவர்கள் நின்றனர். வெளியே இருந்த கார்க்கிக்கு லெனின் கூட நடைமுறை சார்ந்து பேசாமல் தியரி பேசுவது போல் பட்டது. இருவரும் விவாதங்களை மேற்கொண்டனர்.

தொழிற்சங்க சார்பில் 5 அல்லது 6 பேர் கொண்ட குழு, production விவகாரங்களை கட்டுப்படுத்துவது என்பதை லெனின் ஏற்கவில்லை. ஒரு expert manager அவர் தலைமைக்கு கட்டுப்பட்டு பாக்டரி நிருவாகம் என்கிற முதலாளித்துவ நாடுகளின் முறையை புறக்கணிக்க வேண்டாம் என லெனின் அறிவுரை கூறிவந்தார். What industry needed was bourgeois specialists, not proletarian collegiums என்றார்.

அடுத்து governmentalisation or state isation of Trade Union என்பது பிரச்சனையானது. லெனின் party -isation என்பது தேவை எனக்கருதினார். Workers state என்பதே காப்பு - அதைத் தவிர தனியாக ஏன் trade unions என்கிற அளவிற்கு கூட கட்சியில் விவாதம் சென்றது.

இந்த பிரச்சனை இந்திய சூழலிலும் இருக்கிற பிரச்சனை. இங்கு பாஜக ஆட்சி என்றால் பிஎம் எஸ் அரசாங்கமயமாகிவிடுவதைக் காண்கிறோம். முன்பு ஐ என் டி யு சி, கேரளா வங்கத்தில் சி அய் டி யு, தமிழகத்தில் எல் பி எப், அண்ணா பேரவை என ஆட்சிகள் காலத்தில் அவை governmentalisationக்கு உள்ளாகும் அனுபவத்தைக் காண்கிறோம்.

மரணதண்டனை கூடாது என்கிற விவாதம் வந்தபோது, கமிட்டி கூட்டத்தில் லெனின் இல்லை. பின்னர் பங்கேற்ற அவர் அது அவசியம். எதிர் புரட்சியாளர்களை ஒடுக்க அவசியம் என ஏற்க வைத்தார்.

கலை இலக்கியம் என்பதில் கூட கட்சிமயமாக்கும் தன்மையைதான் லெனின் ஆதரித்து பேசிவந்தார்.

முக்கிய ஒரு விஷயத்தில் அவர் தன் தெளிவை நல்கினார். சோவியத் சோசலிச ரிபப்ளிக் என நாம் நாட்டை அழைப்பதாலேயே, சோசலிசம் வந்துவிட்டதாக தோழர்கள் புரிந்துகொள்வது தவறு. அதை நிர்மாணிக்கும் வேலையை கவனப்படுத்துகிறோம் என அதை விளக்கி வந்தார். சோசலிசத்தை கட்டளைப்போட்டு கொணரமுடியாது என உணர்த்தி வந்தார்.

லெனின் ஆட்சிக்கு வந்த சில மாதங்களில் சுவையான நிகழ்வொன்றை எதிர்கொண்டார். துணைவியார் கிருப்ஸ்காயா உடல் நிலை தேறுவதற்காகவும் கல்விப் பணிகளை செய்வதற்காகவும் சோகோல்னிகி எனும் பகுதியில் இருந்தார் . அவரை பார்க்க லெனின் ஜனவரி 19, 1919ல் ஞாயிறு அன்று தனது சகோதரி மரியாவுடன் காரில் சென்றார். டிரைவர் பெயர் கில். எங்கும் பனிப்படலம். தூய்மை பணிகள் நடக்காததை லெனின் பார்க்கிறார். வழியில் சிறு கும்பல் காரை நிறுத்துகிறது. கில் உள்ளே லெனின் என்கிறார். அவர்கள் அதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கவில்லை. காரை விட்டு இறங்கு என்கிறார்கள். கில் துப்பாக்கி வைத்திருந்தும், லெனினுக்கு ஏதும் நேர்ந்து விடக்கூடாது என யோசித்து அமைதி காக்கிறார். மரியா ஏதோ சொல்லப்போகிறார். அந்த வழிப்பறியாளர்கள் காரில் ஏறி அதை எடுத்துக்கொண்டு, வந்தவர்களை ஏதும் செய்யாமல் செல்கின்றனர்.

சிறிது தூரம் நாட்டின் அதிபர் தனது தங்கை டிரைவர் சகிதம் நடந்து சென்று , ஒரு தொலைபேசி நிலையத்தை அடைகின்றனர். அங்கு பணியாளர் ஒருவரிடம் நடந்ததைச் சொல்லி, போன் பேச கேட்கின்றனர். அவர் அரசாங்க பாஸ் இல்லாமல் எவரும் உள்ளே செல்ல முடியாது என விதியைச் சொல்கிறார். இவர் லெனின் நாட்டின் தலைவர் எனச் சொல்லி, போனில் விவரத்தை போலீஸ் தலைமையகத்திற்கு சொல்லி மாற்று ஏற்பாடுகளை செய்துகொண்டனர். இரவிற்குள் காரைத் தேடும் வேலை முடுக்கிவிடப்பட்டது. கார் ஓரிடத்தில் காணப்பட்டது. அருகில் இரு போலீஸ்காரர்கள் உடலும் கிடந்தன.

நாட்டின் அதிபர் , உலக புரட்சிக்கு நாயகர் என அறியப்பட்டவர் தன் மக்களை நம்பி மிகச் சாதாரணமாக தன் சொந்த வேலை என்பதால் செக்யூரிட்டி படை சூழாமல் செல்லும் எளிமை என்பதை இங்கு உணரமுடியும். அதேநேரத்தில் புரட்சி

நடந்தாலும், பழைய நடைமுறைகள் சில கிரிமினல் முறைகள் மறைய காலம் தேவைப்படும் என்பதும் உணரப்படுகிறது.

Facts என்பவை இசங்கள் பார்ப்பதில்லை. Views என்பதற்கு இசங்கள் உதவலாம்.

Jan 8

Nehru said so about Rajaji on 24th June 1948

" Rajaji is a person of strong convictions and strong beliefs. You know he was very much influenced in the early years by Mahatma Gandhi. He accepted basically the approach of Mahatmaji to various problems. nevertheless, at no time did he become a person who unthinkingly accepted any one's dictum, not even Mahatmaji's.

Rajaji would argue with Mahatmaji, debate with him and would not give in easily. Ultimately, however, he gave in because he hought it best under the circumstances to accept Mahatmaji's judgment. Rajaji's faith in mahatma was tremendous but never allowed his mind to slip away.Whatever happened he came to his own conclusion. But if he did give in to somebody, he did so consciously and deliberately, after arguing the matter.

Therefore Rajaji, whether he sometimes disagreed with us or very often agreed with us, brought an extraordinary keen and analytical mind to bear every question, that came before us. Whether he agreed or disagreed wit us he would like every question to be discussed throughly. So we honour tremendously a man like Mahatama Gandhi for what I call the opposite possessions, titles etc. Likewise we honour Rajaji for his spirit of individuality, service and sacrifice. Rajaji represents fundamentally the highest type of mind of India"

- Rajaji and Gandhi by B K Ahluwalia and Shashi Ahluwalia

Jan9

பேருந்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் குறித்து வழக்கம்போல் எதிரும் புதிருமான கருத்துக்கள் வருகின்றன.

அமைச்சர் சிவசங்கர் வேலைநிறுத்தம் அரசியல் காரணங்களுக்கானது, பேருந்துகள் ஓடும் என்றும், நிதி நிலை மேம்படும்போது பிரச்சனைகளை தீர்க்க முயற்சிப்போம் என்கிறார்.

CITU தலைவர் சௌந்திரராஜன் ஒரு கோரிக்கையைக் கூட அரசாங்க ஏற்கவில்லை. எங்களை இரண்டாம் குடிமகன் போல் நடத்துவதாக கருத்து தெரிவித்துள்ளார்.

அண்ணா பேரவை கமலக்கண்ணன் கிட்டத்தட்ட 17 தவணை கிராக்கிப்படியை அரசாங்கம் தராமல் வைத்திருக்கிறது. ஓய்வு பெற்றவர் பலன்களை settle செய்யாமல் ஆயிரக்கணக்கானவர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாங்கள் நல்ல அவகாசம் அரசிற்கு தந்தோம். எங்கள் ஆட்சி மோசம் என்று சொல்லித்தான், தொழிலாளிக்கான பட்டுவாடாக்களை செய்வோம் என்று வாக்குறுதி தந்துதான் திமுக ஆட்சிக்கு வந்தது. At least current DA மட்டுமாவது தாருங்கள் என்றுதான் கேட்டோம். அரசு ஏற்கவில்லை. எல் பி எப் கட்சி தொழிற்சங்கத்தினருக்கும் இக்கோரிக்கைகள் பொருந்தும். அரசாங்கம் செவி சாய்க்கவில்லை என்கிறார்.

பொங்கலின் போது லட்சக்கணக்கானவர் ஊர் சேர வேண்டாமா- இது நியாயமா என்ற குரல் கேட்கவே செய்யும். கமலக்கண்ணன் சொன்ன ஒரு கிராக்கிப்படி தவணைக்கு 70-75 கோடி செலவாகலாம். அரசு அதற்காவது செவி சாய்த்திருக்கலாம் என்ற குரலும் கேட்கிறது.

பொங்கலின் போது தொழிற்சங்க தலைவர்கள் மட்டும் பட்டினிப் போராட்டம் மேற்கொண்டு தங்கள் நியாயத்தை வலியுறுத்தி இருந்தால், அவர்களின் moral ground சற்று நேர்த்தியாக இருந்திருக்கலாம். பின்னர் தங்களின் படையை போராட்டத்தில் இறக்கியிருக்கலாமோ என பழைய தொழிற்சங்க நினைப்பு என்னிடம் பேசுகிறது.

Jan 9

மகரந்த் ஆர் பரஞ்சபி - ஜே என் யு ஆங்கில பேராசிரியர். இலக்கிய மற்றும்

கலாச்சாரத்துறைகளின் ஆய்வாளர். IIAS சிம்லாவிலும் பணிபுரிகிறவர். டெல்லி IITக்கு பாடம் எடுக்கச் செல்லும் பேராசிரியர்.

அவர் வலதுசாரி அறிவு அரங்கங்களில் அடிக்கடி தென்படுபவர். Indic ஆய்வு வட்டாரங்களில் சேர்ந்து இருப்பவர். சில தடாலடி வலது போல் இவர் எழுதுவதில்லை. மாணவராக அன்று இடதுசாரியாக இருந்த கனையாகுமார் இவரிடம் மோதிய போது நிதானமாக பதில் அளித்தவர். ஆய்வுலகின் நேர்மையை விட்டுவிடாமல் தனது வலது சார்பில் ஏராளம் எழுதி வருகிறார்.

பரஞ்சபி எழுதிய The Death and Afterlife of Mahatma Gandhi பேசப்பட்ட புத்தகம். அதை படிக்க வாய்ப்பு முன்னர் கிட்டியது. அவரின் cultural politics in Modern India வை தொட்டுவிட்ட நினைவு. படிக்கவில்லை.

2020ல் மகரந்த் பரஞ்சபியின் விவேகானந்தா புத்தகம் Swami Vivekananda- Hinduism and India's Road to Modernity வந்தது. தள்ளிப்போட்டுக்கொண்டேயிருந்தேன். படிக்கலாம் என ஆரம்பித்துள்ளேன். மேக்நாத் தேசாய் போன்றவர்கள் பாராட்டி சொல்லியிருக்கிறார்களே பார்க்கலாம் என்ற ஆவல்.

அந்த புத்தகத்தில் India's Vivekananda, Vivekananda's India, Secular Dharma, Beyond Belief போன்ற சாப்டர்களை முதலில் என் விருப்பப்படி படிக்க எண்ணினேன். விவேகானந்தரின் இந்தியா என்பது இப்புத்தகத்தின் இறுதி அத்தியாயம். மாடெர்னிட்டி என்பதன் மீதான விவாதமாக, இந்தியா தனது நவீன உலகிற்கான பாதையை தெரிவு செய்திட விவேகானந்தர் ஆற்றிய radical சிந்தனை தெறிப்பை இதில் பரஞ்சபி விவரிக்கிறார். ஏ எல் பாஷம் விவேகானந்தரைப் பற்றி எழுதியதில் உடன்படும் - வேறுபடும் இடங்கள் பற்றியும் விவாதிக்கிறார்.

பரஞ்சபியின் சில வரிகள்

" it is all the more necessary to realign religion to reason, even it means holding to scrutiny using the same methodology as science. This proposition of Vivekananda's is more radical, in my view, than by any similar spiritual leader."

“ Indeed we may see Vivekananda’s attempt to explain Religion in terms of Science as both strategic defence of religion in a world dominated by science and an attempt to focus on the more rational aspects of faith”

We have to see “ Vivekananda’s interest in science- religion and interfaith dialogues. It is in this sense that his contribution to the modern world is very important. He not only inaugurates a kind of inter religious dialogue, but also wants to end the fanaticism of scientific dogma. But more important than both of these is that he wants to re -establish religion on scientific lines “

- பார்க்கலாம் பரஞ்சபியின் மற்ற சாப்டர்கள் எப்படி போகிறது என..

Jan 9

So wrote Louis Fischer about totalitarianism

" The party is above the state , the government and morality , but not above personality.

The person, however operates through the party, and if he loses control of the party, his personality shrinks. If he has complete control of the party , his personality becomes a cult.

The party, the state, the nation and the leader merged into one identity. This is what constitutes totalitarianism "

Jan 10 Pension

Understanding the facts while analysing the views- Pension Revision

Fact Number 1: BSNL unions are demanding pay revision from 1-1-2017. Most of the pensioners' Associations are demanding pension revision as per CPC, quoting PBCAT and orders for food transferees as per CPC and CDA.

Fact number 2: Applicability of CPC means, the date is 1-1-2016 for anything and everything.

Fact Number 3: There cannot be any solution to pre 2016/ pre 2017 Retirees as per CPC/ PRC without finding solution to post 2016/ post 2017.

Fact number 4: solution can be possible only thro CPC as that of food transferees, if there is no one like post 2016 cases in BSNL. But lakhs are there in that category in BSNL.

Fact number 5 : If solution analogous to food transferees for pre 2016, then it may be possible to take pension as on 31-12-2015 as basic to calculate his or her new pension that is revision.

Fact Number 5 : In the case of post 2016, for any change in pension, they need a pay change in their existing pay on 31-12-2015. They were all in their second PRC scales, a stagnating one. Unless pay scales changed, enhanced pay as per computation as that of pre 2016 is not possible. If CPC, what is that pay scales- CPC scales equivalent to that of IDA scales of 2nd PRC scales?

It seems that , the leaders demanding pension revision, repose faith in the DOT, somehow DOT may find a solution for post pensioners also, if they accept CPC without going appeal , as the MOC is showing green flag .

It seems that some leaders are taking the position that no pay scales are necessary for computing new pension and refusing to answer how that is possible to shift an employee from his pay when becoming pensioner after 1-1-2016/ 1-1-2017 (CPC/ PRC) from his 2nd PRC scales. Can that be possible to enhance his pay by continuously keeping him in second PRC scales is the serous question to find suitable answer.

DOT in their own adroitness, found a way out for post 2017 , in the absence of pay revision and presented the same in their Oct 17 th 2022 notes on 3 rd PRC . The issue on that was nil fitment.

Can the DOT settle CPC fitment with CDA to both pre 2016 pensioners , and post 2016 employees turning to pensioners- by the same yardstick, taking the scales of CPC- is the serous question to be addressed. In that case all TUS, Associations of pensioners tacitly go with that?

Hope pensioners will give ears to the facts , though every one has a right to hold his or her views.

- 08.45 hrs 10-1-2024 R. Pattabiraman

Jan 11

பரிதிமாற் கலைஞர் என புகழ் பெற்ற விகோ சூரியநாராயண சாஸ்திரியார் 1892ல் பி ஏ தேர்வில் தமிழிலும், வேதாந்த தத்துவத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல்வராகத் தேறினார்.

அப்படி வருபவர்களை தன் இல்லத்திற்கு அழைக்கும் வழக்கத்தை

சி வை தாமோதரம் பிள்ளை வைத்திருந்தார். அவர்களின் தமிழறிவை சோதித்து தேர்வு நிகழ்த்தி பரிசுகள் வழங்குவார். சாஸ்திரியாரை அவ்வாறே பிள்ளை அழைத்தார். அவருக்கு வினாத்தாள் கொடுத்து ஒரு மணி அவகாசத்தில் முடிக்கச் சொன்னார். வி கோ சூ அரை மணியில் முடித்துக்கொடுத்தார். மறுநாள் அவரை பிள்ளை வரச்சொன்னர்.

நீர் திராவிட சாஸ்திரி எனப் பாராட்டினார் பிள்ளை. சரி இந்த கவிதையை செய்யுள் வடிவமாக்கு என சேக்ஸ்பியரின் Merchant of Venice வரிகளை தந்தார். அவ்வரிகள்

“ The man that hath no music in himself

Nor is not moved with concord of sweet sounds

Is fit for reasons, stratagems and spoils

The motions of his spirit are dull as night

And his affections dark as Erebus

Let no such man be trusted

சாஸ்திரியார் அதை இவ்வாறு மொழி பெயர்த்து பிள்ளையிடம் கொடுத்தார்.

“ கன்னலங் கனிந்த பாடற் காயகனல்லனேனு

மின்னிசை கேட்டு நெஞ்ச மிளகிடா திருப்பன் வஞ்ச

மன்னவர் துரோக மாதி மாபாவஞ் செய்யத் தக்கானன்னவன்றனை

நம் பாம லகற்றிட வேண்டு மன்றே.

தாமோதரம் பிள்ளை மகிழ்ந்து தன் நூல்களை பரிசாக கொடுத்து மெச்சினார்.

jan 11

தர்மகீர்த்தி புகழ் வாய்ந்த புத்த சிந்தையாளர். Perception and inference என்பதில் நம்பிக்கை கொண்டவர். அவர் சிந்தனையிலிருந்து சில வரிகளை India Dissents நூலில் அசோக் வாஜ்பேயி கொடுத்துள்ளார். அவ்வரிகள்

Nobody goes ahead of me

None follows me

But the way is not trampled by fresh feet altogether

So why say that I am alone?

Let them know

That this was the way

Frequented earlier

Now it may be deserted

I have plainly chosen to energise

The other path

Which is different but has a potency

Hemachandra என்பவர் ஜைன அறிஞர். அவரின் யோக சாஸ்த்ரா பேசப்படும் ஒன்று. அசோக் அவரின் வரிகளை தந்துள்ளார்.

There can never be a speech/ word without the speaker. Even if we believe for the sake of argument that there could be such a text possible, there still remains the doubt about validity of such a text because it is always the integrity of the speaker that determines the validity of a speech

Bhartrihari 5 ஆம் நூற்றாண்டின் சம்ஸ்கிருத கவி. அவரின் சில வரிகள்

If you are the king

We are also superior in intellect

Which we nurtured serving our teachers.

You are known for your riches,

Our fame is spread far and wide by poets

O glorious one! There is not much difference between you and us.

But if you turn away from us

We also are absolutely free from any longing

Akka Mahadevi 12 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர். பசவன்னா காலத்தவர். வீர சைவ கலகக் கவி. அவரின் வரிகள்

Those who have become equal by love,

Should they need background or pretensions?

Those who have gone mad,

Do they know shame or restraint?

Inside my husband, outside my lover,

I cannot handle them both

Everyday life and supreme quest

I cannot handle them both

Allama Prabhu இவரும் அக்கா மகாதேவி காலத்தவர். கர்நாடகக்காரர். அவரது வசனங்களும் புகழ் வாய்ந்தவையாம்.சில வரிகள்

If I am not God,

Are you God?

If you are God,

Why do you not take care of me?

When thirsty, I offer myself a pitcher of water

When hungry I give myself a morsel of rice

Look

I am god, o gogeshwara

jan 12

நரசிம்ம ராவ்- மன்மோகன் சிங்

1991ல் ராஜீவ் காந்தியின் கொடூர மரணத்தை சோனியா குடும்பம் தாங்கமுடியாத துக்கத்துடன் எதிர்கொண்டிருக்கும் வேளையில், நாட்டின் பிரதமரை தீர்மானிக்கும் கடினமான பணி சோனியாவிடம் வந்து சேர்கிறது. என் டி திவாரியா, சரத் பவரா, நரசிம்மராவா என காய்கள் நகர்ந்துகொண்டிருந்தன. சோனியா நட்வர் சிங்கை அழைத்து கருத்தைக் கேட்கிறார். இந்திராவின் ஆலோசகர் பி என் ஹக்சரைக் கேட்போம் என நட்வர் சொல்ல, 77 வயதான ஹக்சர் நம்பர் 10 ஜனபத் இல்லத்திற்கு வந்தார். அவர் சங்கர் தயாள் சர்மா பொருத்தமானவர் என்றார்.

நட்வர் சிங்கும், அருணா ஆசப் அலியும் துணை ஜனாதிபதியாக இருந்த சர்மாவை பார்க்கச் செல்கின்றனர். சோனியா மேடத்திடம் தெரிவித்து விடுங்கள்- என்னால் அந்த முழுநேர வேலையை பார்க்க இயலாது. உடல்நிலை இடம் கொடுக்கவில்லை என அதை சர்மா நிராகரித்தார். சர்மாவிற்கு ஒருவேளை அடுத்து ஜனாதிபதி வாய்ப்பு போய்விடுமா என்ற எண்ணம் இருந்திருக்கலாம்.

மீண்டும் ஹக்சர் அழைக்கப்பட்டார். இம்முறை அவர் பி வி நரசிம்மராவை பரிந்துரைத்தார். அவரால் கட்சியை கோஷ்டிகளுக்கு அப்பாற்பட்டு அழைத்து செல்ல முடியும் . மற்றவர் குறித்து அவ்வாறு சொல்ல முடியுமா எனத் தெரியவில்லை என ஹக்சர் அறிவுரை கூறினார்.

சோனியாவிற்கும் ராவ் மீது எதிர்மறை எண்ணம் ஏதுமில்லை. ராஜிவ் நெருக்க சர்க்கிளில் அவர் இல்லை என்றாலும், அவர் பொதுவெளியில் அக்குடும்பத்திற்கு எதிராக கருத்து சொல்லாதவர் என்பதை சோனியா அறிந்திருந்தார். சதீஷ் சர்மா ராஜிவ் குடும்பத்திற்கு நெருக்கமானவர். அவருடன் நரசிம்மராவ் தேநீர் உரையாடலை நடத்தினார். சதீஷ் சர்மாவும் சோனியாவை சந்தித்து அர்ஜூன் சிங், பவாரை விட நரசிம்மராவைக் கொணர்வதே மேல் என கருத்து தெரிவித்தார்.சோனியாவும் தலையசைத்து ஆமோதிப்பை தெரிவித்தார்.

நரசிம்ம ராவை காங்கிரசின் தலைவர் ஆக்குவது என்ற முடிவை சோனியா சொல்படி கட்சி CWC எடுத்தது. மிகையில் கோர்பாசாவ் தனது வாழ்த்தை அனுப்பினார். ராஜிவ் படுகொலையை தொடர்ந்த தேர்தல் நிகழ்வுகள் காங்கிரசை ஆட்சியில் அமர்த்தியது. ராவ் அல்லது பவார் என்ற இழுபறி கொஞ்சம் தொடர்ந்தது. ஆர் டி பிரதான் இருவர் சந்திப்பிற்கும் ஏற்பாடு செய்தார். தனக்கு துணைப் பிரதமர் வேண்டும் என சமரசத்திற்கு பவார் வந்தார். ஆனால் ராவ் சீனியர் காபினட் பொறுப்பு என்பதில் நின்றார். பாராளுமன்ற குழு கூடி அர்ஜுன் சிங் முன்மொழிய நரசிம்மராவ் பிரதமர் ஆகிடும் உயர் பவர் டிராமா முடிவிற்கு வந்தது.

ராவிற்கு ஜெயராம் ரமேஷ் மற்றும் பிரனாப் முகர்ஜியும் நிலவும் பொருளாதார நெருக்கடியை எடுத்து விளக்கினர். ராவ் எனக்கு international fame - apolitical Finance Minister தேவை என அலெக்சாந்தரிடம் தெரிவித்தார். அவர் ஐ ஜி படேல்,மன்மோகன் சிங் என இரண்டு பெயர்களை பரிந்துரைத்தார்.

குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனிடம் சென்று ராவ் இருவரில் எவர் இன்றுள்ள நிலைக்கு பொருத்தமானவர் என ஆலோசனை நடத்தினார். இருவருமே சிறப்பானவர். எவர் வருகிறார் எனப் பாருங்கள் என்றார். ஐ ஜி படேல் தன் இயலாமையை தெரிவித்தார். மன்மோகனுக்கு போன் கால்கள் பறந்தன. தரப்பட்டால் எடுத்துக்கொள்வதாக ஒப்புதல் தந்தார் மன்மோகன். இப்படித்தான் இந்தியாவின் பொருளாதார திசை வழி மாற்றத்திற்கான சூழல்கள் இந்தியாவில் அமைந்து, இன்று முன்னேறும் இந்தியா என பலர் மார்தட்டிக்கொள்வதற்கான சாலை கட்டுமானம் போடப்பட்டது.

Inputs The Man Who Made India A Bio of P V Narasimha Rao

Jan 12

In most of the cases, rather than showcasing Religion and spirituality, what happened was and happening is, showcasing the arrogance- the kingly pomp and show- of the holder of the reigns of power. This day also , we are witnessing the same thing.

It is difficult even for any ardent Ram Bakthar to see or search Ram in great loud noise. Building of Ram temple is the outcome of struggles and Supreme Court verdict.

BJP has taken full political advantage on this temple issue, even ready to disobey Sankarachariyars, nothing wrong to have any dissent with any shastras or the priesthood, proving political establishment is higher than any other establishment . But they miss wantonly it seems, the constitutional morality taught and expected by the drafters of the Constitution. They may think differently about the existing constitution.

One may appreciate Communist parties for their ideological position taken to the invitation sent to them. They may claim that they are holding high their secular understanding , derived and peeping beyond the constitution . They bother less about the political dividend or disadvantages due to their ideological positions.

The Congress leadership has taken a bold stand of not extending hand to the invitation. This may be after much internal discussion at least amongst selected few top leaders. They may claim that they stood with the understanding of Constitution. But some of their leaders quoting of Sankarachariars for supporting their stand is absurd(even CPM , VCK spokes persons) . We have to wait and watch the political dividend or disadvantages that Congress need to face in North Indian constituencies.

There was a freedom movement in India. But there is no such movement for Secularism in the understanding of Communists or in Nehruvian framework. For Gandhiji it is equality of all religion, none is low or none is high, all have their good and evil in their script or practices. For Nehru his secularism goes beyond Religion and he extended that to the rights of atheists to propaganda their own scripts and practices. This has been put into great task in the name of belief today’s context.

Theism or Athiesm if any thing is considered as belief system, then each should respect the belief of others without calling names or offending by any impolite behaviour or sayings.

Hope the believers of Ram and non believers keep restraint to make our India a land of peace and prosperity. Hope Vivekananda may also guide by his radical thoughts.

10 hrs 12-1-2024

Jan 13

மார்செல்லோ முஸ்ட்டோவின் கார்ல் மார்க்ஸின் இறுதி கால (1881-83) செயல்பாடுகள் குறித்த ஆவணப்படுத்தல், மார்க்ஸ் இலக்கிய உலகிற்கு புதிய கொடை எனலாம்.

இந்த ஆண்டுகளில் மார்க்ஸ் எழுதிக் குவித்த குறிப்பேடுகள், மூலதன வால்யூம் குறித்த தவிப்புகள், துணைவி ஜென்னியின் உடல் கோளாறு மரணம், மார்க்ஸின் உடல்நிலை பாதிப்பு- எதுவுமே செய்ய முடியாத ஓய்வுக்காலம்- அல்ஜீரியா ஆப்ரிக்க பயணம் அங்கு ஓய்வில் இருக்கும்போதும் , அங்கு கண்ட அராபியர் பழக்க வழக்கம் பற்றிய அவரின் பார்வைகள், மூன்று மகள்களுடன் தங்குதல், மூத்த மகளின் சாவு, மூன்றாம் மகள் எலியனாரின் மனப்போராட்டங்களை கண்டு வருந்துதல், பேரக்குழந்தைகளுடன் குதூகூலம், எங்கெல்ஸ்க்கும், மகள்களுக்கும் எழுதிய சில கடித வரிகள் என பல்வேறு அம்சங்களை இந்த நூலில் முஸ்ட்டோ பதிவு செய்துள்ளார். கடுமையான பணியை மூல ஆசிரியரும், மொழிபெயர்ப்பு உழைப்பை எஸ் வி ராஜதுரை அவர்களும் நல்கியுள்ளனர்.

கடித இலக்கியம் , ஆவண பிரதிகளைவிட சுவாரஸ்யமாக இருக்கும். ஆவணத்தில் எவ்வளவு அறிவை செலுத்த வேண்டுமோ, பொதுவான வாசகருக்கானதோ- அந்த அளவிற்கு கடிதத்தில் தரத் தேவையிருக்காது, அதில் அந்த தனி மனிதருடன் உரையாடல் அமையும். நேயமோ வருத்தமோ அறிவுரையோ , சற்று கோபம் கூட மனதிலேயிருந்து வெளியாகும்.

MECW Marx Engels Collected Works வால்யூம்களில் 10 எண்ணிக்கயிலாவது அவர்கள் கடித போக்குவரத்தின் தொகுப்பாக இருக்கலாம். முஸ்ட்டோ அவற்றில் கவனம் செலுத்தியிருக்கக்கூடும். குறிப்பாக வால்யூம் 46 யை அவர் அதிகம் எடுத்தாண்டுள்ளார். மகள்களுக்கு எழுதியவை, மகள்கள் எழுதியவை என சில துண்டு வரிகளை பொருத்தமான இடத்தில் இணைத்துள்ளார்.

மார்க்ஸ்- ஜென்னிக்கும் போராட்ட வாழ்க்கையிருந்தாலும், அவர்களை விட அவர்களின் மகள்கள் வாழ்க்கை மகிழ்ச்சி- போராட்டம்- சோகம்- துன்பம் என

கழிந்ததாகவே பார்க்கமுடிகிறது. மகள்களின் துன்பத்தை அறிந்த தந்தை என்கிற வகையில் மார்க்ஸ் மிகவும் கவலைப்பட்டதைக் காணமுடிகிறது.

Eleanor Marx Family Life by Yvonne Kapp

Eleanor Marx A Life by Holmes Rachel

The Daughters of Karl Marx by Olga Meir

போன்ற மார்க்ஸின் மகள்கள் குறித்து பலராலும் பேசப்படுகின்ற ஆக்கங்களையும் முஸ்ட்டோ தன் நூலில் சுட்டுகிறார்.

The Last Marx என்கிற மார்செல்லோ முஸ்ட்டோவின் நூல் தமிழில் கிடைப்பதால், மார்க்சிய இலக்கிய பயிற்சி கொண்டவர் எளிதாக வாசிக்கமுடியும் என்றே நம்புகிறேன்.

Jan14

பூக்கள் காய்கறிகள் பற்றி ஒருமுறை விவாதம் நடந்தபோது, பிர்லா குடும்பத்தாரிடம் காந்தி தன் கருத்தைச் சொன்னார்.

மாடித்தோட்டம் பூக்களால் மட்டும் நிறைந்திருக்கிறது. காய்கறி போடலாமே என்பது காந்தியின் ஆலோசனை. அகதா ஹாரிஸன் தன் கருத்தை இவ்வாறு பதிவிட்டார்

Why not people grow flowers? Colour and beauty are as necessary to the soul as food is to the body.

காந்தி மறுமொழி சொல்லாமல் இருப்பாரா- தெரிவித்தார்

We have been taught to believe that what is beautiful need not be useful and what is useful cannot be beautiful. I want to show that what is useful can also be beautiful. I would far rather that we learnt to appreciate the beauty of colour in vegetables.

பிர்லா வீட்டு மாடியில் காய்கறி தோட்டம் வந்தது.

குருதேவ் தாகூர் மறைந்த பின்னர் சாந்தி நிகேதன்- விஸ்வபாரதி பற்றி காந்தி அங்கு சென்றபோது பேச்சு வந்தது. சரியானதை செய்துகொண்டிருந்தால் பணம் வந்துகொண்டிருக்கும். 'மாரல் அம்சங்களில்' கவனமாக இருங்கள் என்றார் காந்தி. தன் தொடர்பில் உணர்ந்த ஒன்றை அவர் சுட்டிக்காட்டினார்.

I have been connected with many institutions for sixty years and I have come to the conclusion that every difficulty in their working was traceable to a defect in the understanding of moral values

சாந்திநிகேதனில் இருக்கும் இசை குறித்து அங்கிருந்த பெண்மணி தாகூர் உறவினர் இந்திராதேவி சுட்டிக்காட்டினார். காந்தி அங்கேயே கீழ்கண்ட பதிலை நல்கினார். பின்னர் கடிதம் ஒன்றில் சொல்லப்பட்ட இசை குறித்தும் எழுதினார்.

அங்கேயே சொன்ன வரிகள்

When you feel within yourself that you are all right but everything around is wrong, the conclusion you should draw for yourself is that everything is all right but there is something wrong with you.

கடிதத்தில் அவர் எழுதிய வரிகள்

I have a suspicion that there is more music than is warranted by life…The music of life is in danger of being lost in the music of voice. Why not the music of the walk, the march, of every moment of ours and every activity?..

I think our boys and girls should know how to walk, how to march, how to sit, how to eat, in short how to perform every function of life. That is my idea of music..

- inputs Mahatma Gandhi vol 9 book 1 Ch 6 by Pyarelal

jan 17

நம்மில் சிலருக்காவது நேரும் அனுபவம் போன்ற ஒன்றை நேரு முன்பே அனுபவித்த சுவையான அதேநேரத்தின் மன அழுத்தம் தரும் செய்தியை படிக்க நேர்ந்தது.

1939ல் காங்கிரஸ் தலைமைக்கு மீண்டும் சுபாஷ் போட்டியிட்டு காந்தியின் ஆதரவைப் பெற்ற பட்டாபி சீதாரமையா தோற்றதை அனைவரும் அறியலாம்.

சுபாஷ் உடன் செயல்படுவது முடியாதென்று செயற்குழு உறுப்பினர்கள் 12 பேர் - பட்டேல் உட்பட கூடி சீகாவுனில் முடிவெடுக்கின்றனர். இராஜினாமா செய்கின்றனர். சுபாஷ், நேரு தான் மிஞ்சுகின்றனர். நேருவும் தனியாக இராஜினாமா செய்கிறார். இவையும் அறிந்த செய்திகளே.

அக்கிராமத்திலிருந்து வார்தா செல்ல இரு கார்களில் முதல் 12 பேர்களும் சென்றுவிடுகின்றனர். நேரு தனியாக நிற்கிறார். அவருக்கு துணையாக கிருபளானி நின்று இருவரும் 5 மைல்கள் நடந்தே வார்தா போய் சேர்கின்றனர்.

இச்செய்தியை ருத்ரமாங்சு தனது புத்தகத்தில் 185 ஆம் பக்கத்தில் தந்துள்ளார்.

கருத்துவேறுபாடு முற்றும்போது பெரிய மனிதர்களுக்கும் மனப்பூட்டு இருக்கும் போலும்..

jan 17

டெல்லி ‘பங்கி’ ஓரக்குடியிருப்புகளில் காந்தி இருந்தார். கேபினட் மிஷன் எனும் தூதுக்குழு பெதிக்லாரன்ஸ் தலைமையில் மார்ச் 1946 ல் வந்து தன் திட்டங்களை வைத்து விவாதித்துக்கொண்டிருந்தது. காந்திக்கு தனது விடுதலை இந்தியா குறித்த பெருங்கனவு இருந்தது.

மாலை வழிபாட்டு நேரத்தில் அங்கு பாடப்பட்ட பாடல் ஒன்று இப்படியான கனவை சுமந்து கொண்டிருந்தது. அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பெதிக் லாரன்ஸ்க்கு அனுப்ப விழைந்தார் காந்தி. அவரே மொழி பெயர்த்தார். அப்படி அவர் எழுதி பெதிக் லாரன்ஸ்க்கு அனுப்பிய அந்தப் பாடலின் வரிகள்

We are inhabitants of a country

Where there is no sorrow and no suffering,

Where there is no illusion nor anguish,

No delusion nor desire,

Where flows the Ganges of love

And the whole creation is full of joy,

Where all minds flow in one direction,

And where there is no occasion for sense of time,

All have their wants satisfied,

Here all barter is just,

Here all are cast in the same mould,

Here is no lack nor care

No selfishness in any shape or form,

No high no low, no master no slave,

All is light, yet no burning heat,

That country is within you

It is Swaraj , Swadeshi,

The home within you

Victory victory victory

He realises it who longs for it.

இப்படி பெருங்கனவான ideal பாடல் ஏன் அதிகம் வெளிச்சொல்லப்படாமல் போனது எனத் தெரியவில்லை. இவ்வரிகள் தாகூரை நினைவு கூறலாம். பாரதியைக்கூட காணவைக்கலாம். காந்தி மானுடம் கண்ட practical idealist. ஒவ்வொரு வரியிலும் light yet no burning heat..என்ன அற்புத மனம் சிந்தனை கனவு.

- வேறு யார் காந்தியின் பல்வேறு காணவேண்டிய நுண்ணிய அம்சங்களை தருவார் , பியாரிலால்தான். மகாத்மா வால்யூம் 9 பகுதி 1 அத் 7

Jan 18

சோவியத்தில் பின்னாட்களில் மிகவும் சக்தியும் அதிகாரமிக்கதுமாக ஆகிப்போன பொதுச்செயலர் என்ற பதவியே 1922 ஏப்ரலில் நடந்த ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில்தான் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னர் அப்பதவி இருந்ததில்லை.

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) 11வது காங்கிரஸ் 1922 மார்ச் 27 முதல் ஏப்ரல் 2 வரை நடந்தேறியது. ஆட்சி அதிகாரத்தின் 5 ஆம் ஆண்டில் இருந்த லெனினுக்கு power , authority, affection என்பதின் உச்சம் இருந்த காங்கிரஸ். இது தான் அவர் கலந்துகொண்ட கடைசி காங்கிரசும் கூட. சோசலிச கட்டுமானத்தின் ஏராள பிரச்சனைகள் குறித்து , நடைமுறை சார்ந்த தீர்வுகளுக்காக அவர் போராடிக்கொண்டிருந்தார். Govt Bureacracy- party Bureaucracy என இரு அதிகார வர்க்க போக்குகள் குறித்து கடுமையாக விமர்சித்து, சுறுசுறுப்பான மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளை முடுக்கிவிட தன் உரையை அவர் பயன்படுத்திக்கொண்டார்.

அரசாங்க அலுவலர் தான் ஏதும் செய்யமுடியாது, கட்சி கமிட்டி நினைத்தால்தான் செய்யமுடியும் எனச் சொல்வது போன்ற புகார்களை அவர் தீவிரமாக சாடினார். 18 மக்கள் கமிசாரில் 15 பேர் வேலையில் அதிருப்தியை லெனின் வெளிப்படுத்தினார். எல்லாவற்றையும் முடிவெடுக்காமல், பொலிட் ப்யோரோவிற்கு கொண்டு வந்து காலதாமதம் செய்வதை கண்டித்தார்.

முன்னரே அவர் under the banner of communism என்கிற நீண்ட கட்டுரையை எழுதியிருந்தார்.

ரஷ்யாவில் அப்போது 14.5 கோடி மக்கள் இருந்திருப்பர். இதில் நகர்ப்புறத்தில் வாழ்ந்தவர்கள் 18 சதம். பல ஊர்களுக்கு எந்த செய்தி பத்திரிகையும் போகாத நிலை. ரயில், சாலை, தந்தி , டெலிபோன் , மின்சாரம் என அடிப்படை கட்டுமானவேலைகள் பிரம்மாண்டமாக முன் நின்றன. 1918ல் தான் 'dial செய்து பேசும் போன்' வசதி முதன் முறையாக லெனின் உட்பட 200 பேருக்கு தரப்பட்டிருந்தது. இப்படி இருந்த ரஷ்யா/ சோவியத் யூனியன் பின்னர் 50 ஆண்டுகளுக்கு மேலாக தன் திட்டங்களின் வழியாக மேற்கின் பொருளாதாரத்திற்கே சவால்விடும் நிலைக்கு உயர்ந்தது.

கட்சியில் 5.32 லட்சம் உறுப்பினர்கள் இருந்த பதிவை செய்தனர். 522 வாக்குரிமை பெற்ற சார்பாளர் பங்கேற்றனர். கூடுதலாக வாக்குரிமையில்லா 165 தோழர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். 1921 ல் கடுமையான களையெடுப்பு நடந்ததில் அப்போது இருந்த உறுப்பினர்களில் 24.8 சத, 1.69 லட்ச தோழர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

லெனினுக்கு அடுத்து அதிக நேரம் பேச முடிந்தவராக டிராட்ஸ்கி அந்த காங்கிரசில் இருந்தார். ஸ்டாலின் பேசவில்லை. புகாரின் வெளிநாட்டில் இருந்ததால் கலந்துகொள்ளவில்லை. அவர் சொல்லவேண்டிய மாற்று கருத்தை ப்ரயோபிரசன்ஸ்கி முன்வைத்தார்.

காங்கிரஸ் மத்திய கமிட்டியை தேர்ந்தெடுத்தது. மத்திய கமிட்டி ஏப்ரல் 3, 1922 ல் கூடி 7 பேர் கொண்ட பொலிட்ப்யுரோவை - லெனின், காம்னேவ்,ரைகோவ், ஸ்டாலின், டாம்ஸ்கி, டிராட்ஸ்கி, ஜினோவீவ் ஆகியோரை தேர்ந்தெடுத்தது. அழைப்பாளர்களாக புகாரின், காலினின், மாலட்டோவ் என அறிவிக்கப்பட்டது. டிராட்ஸ்கி தனது நெருக்கமான தோழரான நிகிடிக் ஸ்மிர்னாவ் என்பாரை பொதுச்செயலருக்கு நிறுத்தினார். ஸ்டாலினுக்கு லெனின் ஆதரவு இருந்ததால் அவரே பொதுச்செயலர் ஆனார்.

இதற்கு முந்திய மாநாடுகளில் ஒரே ஒரு செயலர், பின்னர் மூன்று செயலர்கள் என்ற வழக்கம்தான் இருந்தது. செயலர்களாக வருவதில் டிராட்ஸ்கியும் ஸ்டாலினும் தமக்கு இணக்கமான தோழர்கள் வருவதில் கவனம் செலுத்தியதையும் காணமுடிகிறது.

ஸ்டாலின் பொதுச்செயலர் ஆன பின்னர் தன்னை பலப்படுத்திக்கொள்ளும் முயற்சிகள் நடைபெறலாயின. லெனின் இருந்தவரை, கட்டு இருந்தது என்றாலும், அவரே கோபமடையும் நிகழ்வுகள் நடைபெறலாயின. லெனின் மறைவிற்கு பின்னர் டிராட்ஸ்கி வெளியேற்றப்பட்ட நிலையில், முழுமையான சக்தி மிகுந்த அதிகாரமிக்க பலமான தலைமையாக ஸ்டாலின் உருப்பெறலானார் என்பது தொடர்கதை. ஒரு கட்சி ஆட்சி- பொலிட் ப்யோரோ ஆட்சி- பொதுச்செயலரின் ஆட்சி என்ற காட்சிகள் வளர்ந்து வரலாயின..

-Inputs The Life of Lenin by Louis Fisher chapter 46

jan 18

எழுத்து கிடங்கின் பழைய பக்கங்களைப் pattabiwrites வலைப்பூவில் பார்த்தபோது தெரிந்த தோழர்கள் பற்றி(D Gnaniah, Marudhan , Baskar, Rk, pandi ,Ravi ..) எழுதிய செய்திகள் கண்ணில் பட்டன. 2016 ல் போடப்பட்ட அவற்றில் சில..

sep 20 2016

Rajmohan Gandhi has been writing widely on various aspects of Independence movement, pak affairs etc.He has written biographies of both of his grandfathers Mahatma Gandhi and Rajaji. He is the son of Devadas Gandhi.

This book "Understanding the Founding Fathers: An Enquiry into the Indian Republic's Beginnings" was authored by him more as a rejoinder to two popular authors viz Swami Sachidanand of Gujarat, a critic of Gandhi and to prof Perry Anderson for his book The Indian Ideology .

Swami is less popular in our area and his writings are less known. But Prof Perry Anderson is known to left circle throughout the world by his write ups thro NLR- New Left Review. His book Indian Ideology provoked debates and discussion in the last 3 to 4 years. This book was introduced to me by com RAVI (Rathna Ravi Our JAO,TU Activist, Translator of many good works) last year or so. I read it but not impressed much observing a kind of bias it shown. Com D Gnanaiah(a living giant of P&T movement and a long associate of com Gupta, a Marxian scholar) asked Ravi to translate it, I was told.

Rajmohan Gandhi has given his rebuttal to Perry by bringing some facts from authenticated sources, where perry fails to prove adequately. Perry has given his negative appraisal of Gandhi,Nehru.. positively appreciated the role of Jinnah, Nethaji and Dr Ambedkar. Rajmohan tried his best to disprove some of his negative appraisals in this book. One should read both Perry's Indian Ideology as well as Rajmohan's An Enquiry into Indian Republic's Beginning to get fair impression about our great Leaders of Independent movement of India.

sep 27 2016

Com Baskar, Chennai based TU leader of SastriBhawan has sent me a serious book that needs intensive and responsible debate. The book was originally written in Telugu- then translated to English and now we have its tamil translation. The author Renganayakkamma was already known for her works of Marx's Capital and she is known for her novels also.She has been consistently fighting for Marxist interpretation of soicety and struggles. This book is "For the sloution of Caste- Buddha is not enough- Ambedkar is not enough either- MARX is a must".. Its tamil tittle is ”சாதிய பிரச்சனைக்கு தீர்வு: புத்தர் போதாது அம்பேத்காரும் போதாது -மார்க்ஸ் அவசியத்தேவை”

I have just started reading the book. It is more than 400 pages book. Critical examination is needed about that book also. I hope that I can complete the book within a short span of time and can say some

of my impression about the methodology and presentation, issues handled. Thanks to com Baskar for introducing this book

oct 27 2016

தேசிய புகழ்வாய்ந்த நூலகங்களில் சென்னை கன்னிமாரா பொது நூலகமும் ஒன்று. ஏறத்தாழ 125 ஆண்டுகள் பழமை வாய்ந்த நூலகமது.. இணைய வசதி இல்லாத அக்காலத்தில் புகழ் வாய்ந்தவர்கள் அனைவருக்கும் அறிவைத் தேடும் பெரும் சுரங்கமாக திகழ்ந்திருக்கும். புதிய கட்டிடம் இணைக்கப்பட்டே 40 ஆண்டுகள் ஆகியிருக்கும். லட்சக்கணக்கான நூல்களின் இல்லமது. IAS தேர்விற்கு தயாராகும் சென்னை இளைஞர்கள் ஏராளம் அங்கு மணிக்கணக்கில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.சென்னை வந்தவுடன் அதில் உறுப்பினர் ஆனேன். நான் முன்பு வசித்த திருவாரூர் மாவட்ட நூலகத்தில் பல அரிய நூல்கள் கிடைக்கப்பெற்றன. ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ் வெளியிட்ட தரமான ஆய்வு நூல்கள் (அப்போதே ரூ 500-1100வரை) பலவற்றை அங்கு படிக்க வாய்ப்பு கிடைத்தது. அந்த்ரேபெடலி போன்றவர் எழுத்துக்கள் எனக்கு அங்குதான்அறிமுகமானது. ஒரு கட்டத்தில் அந்த நூலகத்தின் ஆரம்பகாலபுரவலர்கள் பட்டியலில் பேரா அறிவழகனும் நானும் இருந்தோம். இப்போது நிறைய பேர் இடம் பெற்றிருக்கலாம். பழைய பேட்ரான் போர்டு இருக்கிறதா என தெரியவில்லை.

லட்சக்கணக்கான புத்தகங்கள் உள்ள கன்னிமாரா (1890களில் இருந்த சென்னை கவர்னர் கன்னிமாரா பெயரால்) நூலகத்திற்கு நான் அறிந்த சில நண்பர்கள் வந்து போவதை பார்த்திருக்கிறேன். தந்தி இளங்கோ(தமிழ் புலமை, மார்க்சிய அறிவு,தொழிற்சங்கவாதி), ஜெய்சங்கர் (கணிப்பொறி ஆளுமை, இலக்கியம், பக்தி இலக்கியம்), விஜயகுமார் (கவிஞர்/ எழுத்தாளர்-தொழிற்சங்க வாதி- உடல் நிலைபாதிப்புக்குள்ளாகி தற்போது தேறி வருகிறார்), ரெங்கநாதன்(பக்திஇலக்கியம்- வைணவ இலக்கியம்) ஆகியோர் கன்னிமாரா உறுப்பினர்களாக தொடர்கின்றனர். வீரபாண்டியன்(மார்க்சியம்-பெரியாரியம்-தமிழ்பற்று- இதழனுபவம்-தொழிற்சங்க தலைவர்) சென்னையில் இருந்தபோது கன்னிமாரா செல்லும் வழக்கம் வைத்திருந்தார்.

கன்னிமாராவில் மார்க்சிய நூல்களை தேடும் போதெல்லாம் 150க்கும் குறைவாகவே இருக்கிறதே என்ற எண்ணம் எனக்கு உருவாகும். இம்முறை சென்றபோது மூன்று புத்தகங்களை எடுத்து வந்தேன். ருஷ்ய சோவியத் புரட்சியின் 100 ஆண்டுகள் என்பதால் அது குறித்த விவாதங்கள் பெருக இருக்கின்றன. தேடல்களும் பெருகும். நானும் என்னளவில் தேடுகிறேன். கன்னிமாராவில் எடுத்த புத்தகத்தில் ஒன்று மார்க்சிய புலமை மிக்க பாராளுமன்றத்தில் தனது வாத திறமை மிகுந்த பேரா ஹிரன்முகர்ஜி அவர்களின் " Marx -Great October-India and the Future" என்ற சிறந்த புத்தகம். 1983ல் அவர் எழுதி 1984ல் அல்லய்டு பப்ளிஷர் வெளியிட்டு உள்ளனர் Marx- Lenin Legacy and their Intellectual Kinship, அக்டோபர்/நவம்பர் புரட்சி சூழல், மார்க்ஸ் இந்தியா பற்றி, இந்திய விடுதலை போன்ற பல்வேறு அம்சங்களை ஹிரன் விவாதிக்கிறார். அவரின் மூலங்கள் சார்ந்த படிப்பறிவு மூலம் சோவியத் புரட்சி குறித்த பல பெரும் மார்க்சிய அறிஞர்களால் எழுப்பப்பட்ட சந்தேகங்கங்கள், 1980கள்வரை சோவியத் குறித்து எழுந்த பல்வேறு விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வண்ணம் இந்நூலை அவர் எழுதியுள்ளார். இந்த அறிய புத்தகத்தை இதுவரை 4 பேர் மட்டுமே எடுத்துள்ளனர். 1984ல் ஒருவர், 1985ல் இருவர் அதற்கு 30 ஆண்டுகளுக்கு பின்னர் 2016ல் அடியேன்.. இப்புத்தகத்தின் அலமாரி வரிசை எண் 335.43 MUK. 1980களில் நியுஏஜ், பார்ட்டி லைப் ஆகியவற்றில் அவர் எழுதும் கட்டுரைகளை அகராதி கொண்டுதான் புரிந்துகொள்ள முடிந்தது. இப்புத்தகத்தை கூட மார்க்சிய பயிற்சி இல்லாமல் புரிந்து கொள்வது கடினம். ஹிரன்(1907-2004) போன்ற மார்க்சிய பேரறிஞர்கள் இடதுசாரி இயக்கங்களில் குறைந்துவருவதும் கவலைக்குரிய ஒன்றே.

Nov 6 2016

பலரோ சிலரோ ஒருவர் குறித்து பெருமிதத்துடன் புகழ்வதும்- சிலரோ பலரோ அதே நபர் குறித்து இகழ்வதும் தவிர்க்கமுடியாத ஒன்றே. தோழர் லெனினுக்கும் இது நிகழ்ந்தது. சோவியத் புரட்சி- ஆட்சி , உலகத்தின் பல்வேறு நாடுகளின் உழைக்கும் மக்களுக்கு நம்பிக்கை ஒளி என புகழப்பட்டதும் அனார்க்கிஸ்ட்கள், நோம் சாம்ஸ்கி போன்றவர்கள் கூட லெனினை விமர்சித்து வருவதும் நடந்து வருவனவாகவே இருக்கிறது. நூற்றாண்டு என்பதால் இது குறித்து நாம் அதிகம் தெரிந்து கொள்ளமுடியும். பரேஷ் சட்டோபாத்யாய் கனடா க்யூபெக்கில் உள்ள மார்க்சிய ஆய்வாளர். The marxian concept of capital and soviet experience-Paresh Chattopadhyay

என்ற புத்தகமும் எழுதியவர். பல்வேறு கட்டுரைகளை எழுதி வருபவர். அவரது சமீபத்திய கட்டுரை ஒன்று Party problematic in Revolution: Some Random Remarks பிராண்டியர் இதழில் படிக்க நேர்ந்தது .அக்கட்டுரையில் ஜெர்மன் வரலாற்றாசிரியர் OSKAR ANWEILER அவர்களின் சோவியத் இயக்கம் குறித்த ஆய்வு புத்தகம் ஒன்றை குறிப்பிட்டிருந்தார். அதை தேடும் முயற்சி பலனளித்து 360 பக்கங்களை கொண்ட The Russian Workers peasants and Soviet councils 1905-1921 OSKAR ANWEILER படிக்க துவங்கியுள்ளேன்.

பிராண்டியர் இதழ் கல்கத்தாவிலிருந்து வருகிறது. திருவாரூரில் இருந்தபோது பல ஆண்டுகள் வீட்டிற்கு வந்து இதழ். பேராசிரியர் அ. மார்க்ஸ் அவர்கள்தான் எனக்கு பிராண்டியர் முகவரி தந்து உதவியவர். மார்க்ஸ் அவர்கள் தமிழகம் அறிந்த களப்போராளி-Public Intellectual எதையும் focussed ஆக சொல்லியும் எழுதியும் வருபவர். ஏராள புத்தகங்களை எழுதியுள்ளார். பின்நவீனத்துவம் குறித்து எனக்கு புரியாமல் இருந்தபோது தன் கடிதம் மூலம் எனக்கு புரிதலை தந்திருந்தார். பேரா அ. மார்க்ஸ் அவர்களுக்கு எனது நன்றியை பதிவு செய்கிறேன்.

பிராண்டியரில் எனது கட்டுரை ஒன்றும் வந்தது. நியுஏஜ்ஜில் எழுதிக் கொண்டிருந்தபோது பிராண்டியருக்கு எழுதலாமே என்ற முயற்சிக்கு பிராண்டியர் ஆதரவு தந்ததற்கு எனது நன்றி. மரியாதைக்குரிய தோழர் சி. இராஜேஸ்வரராவ் (பொதுச் செயலர் சி பி அய்) அவர்களுடன் மூன்று நாட்கள் இருக்க வாய்ப்பு எனக்கு கிடைத்தது. வாய்ப்பை நல்கிய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட கட்சிக்கும் என் மீது நம்பிக்கை வைத்து அப்பொறுப்பை ஒப்படைத்த திருவாரூர் மறைந்த தோழர் பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது நன்றி.

தோழர் ராஜேஸ்வருடன் இளைஞனுக்கே உள்ள ஆர்வத்தில் நக்சல் இயக்கம்-தன்னார்வ இயக்கம் மற்றவை விவாதித்த போது அவர்தான் நியுஏஜ்ஜிற்கு எழுது என பணித்தார். அவர் மறைந்த பின்னர்தான் சில கட்டுரைகளை எழுத முடிந்தது. இதேபோல் வேறு ஒரு நல்வாய்ப்பும் கிட்டியது. சி பி அய்யின் புகழ் வாய்ந்த தலைவர்களுள் ஒருவரும் குடியரசு தலைவராக இருந்த நீலம் சஞ்சிவிரெட்டி அவர்களின் இளைய சகோதரரும் ஆகிய தோழர் நீலம் ராஜசேகர ரெட்டி அவர்களுடன் முழுமையாக ஒருநாள் உரையாட வாய்ப்பு கிடைத்தது. அப்போது soocial Science probings முதல் இதழ் வந்திருந்த நேரம். அவர்தான் ஆசிரியர். CPIM

தோழர்கள் Social Scientist பத்திரிக்கையை சிறப்பாக பல ஆண்டுகள் நடத்திக்கொண்டிருந்த நேரம். Science Probings தோழர்களை வாங்க வைக்க மத்தியதர வர்க்க தோழர்கள்முயற்சி செய்ய வேண்டும் என தோழர் ராஜசேகர ரெட்டி அறிவுரை செய்தார். சில இதழ்கள் வந்து மிக சிறந்த பத்திரிக்கையாக வரவேண்டியது நின்றுபோய்விட்டது.

இந்நேரத்தில் மிக முக்கிய தஞ்சை தலைவர் தோழர் கே எஸ் கே அவர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். நான் கல்லூரியிலிருந்து அப்போதுதான் வேலைக்கு சேர்ந்த நேரம். ஜெகன் கூட்டம்... என்னை பேச சொன்னபோது இங்கிலீசில் உளறினேன். ஜெகன் நீ இங்கே தங்கி வேலை செய்யறதா இருந்தால் தமிழில் பேசு என்றார். கே.எஸ் கே Dialectics புத்தகத்தை கொடுத்து படி என்றார். ஆங்கிலம்தானே என்று நினைத்து வாங்கிய எனக்கு புரிந்தது ஆங்கிலம் படிக்கத் தெரிந்தாலே எல்லாம் புரிந்து விடாது என்பது. கே எஸ் கே தான் மிகச் சிறந்த அப்போது பெரிதும் நாங்கள் படிக்க காத்துக்கிடக்கும் PartyLife அறிமுகப்படுத்தினார். மார்க்சிய அரிச்சுவடியில் சேர உதவிய தோழர் கே எஸ் கேவுக்கு எனது அன்பு நன்றி.

dec 16 2016

எழுத்தாளர் மருதன் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் ரிபோர்ட்டர் பத்திரிக்கை துறையிலிருந்து 10 ஆண்டுகளாக பல புத்தகங்களை கிழக்கு பதிப்பகம் சார்பில் எழுதி வந்துள்ளார் . 10 ஆண்டுகளுக்கு முன்னர் திருவாரூரில் இன்பஜோதிவிலாஸ் என்ற புத்தகக்கடையில் அவரது இருபுத்தகங்களை காஸ்ட்ரோ - லெனின் வாங்கியதாக நினைவு. கிண்டிலில்(KINDLE) தமிழ் பத்தகங்கள் வருவதாக எங்கள் வீட்டு இரு இளைஞர்கள் மூலம் எனக்கு தெரிய வந்தது. முதலில் என்னை கிண்டிலில் கவர்ந்த தமிழ் புத்தகம் ராமச்சந்திர குஹா எழுதியுள்ள புத்தகம். இந்தியாவின் நவீன சிற்பிகள் பற்றிய எளிய குறிப்புகளும் இன்றுள்ள சூழலில் தேவைப்படும் அவர்களது முக்கிய ஆக்கங்களுமானது. பின்னர் மருதனின் இரு புத்தகங்களை மூன்று நாட்களில் படிக்க முடிந்தது. கிண்டிலில் கண்ணுக்கு சிரமம் இல்லாமல் படிக்க முடிகிறது. கிண்டில் உபயம் மகன் நிர்மல்.

மருதனின் புத்தகங்கள் ஒன்று மாவோ வாழ்க்கை, மற்றது செகுவாரா வாழ்க்கை. மிக எளிய நடை. பள்ளி மாணவர்களுக்கு உதவும் வகையில் எழுத்து நடை. எனக்கு காமிக்ஸ் போல் பட்டாலும் மாணவர்களுக்கு மாவோவை, காஸ்ட்ரோவை, செகுவாராவை எளிய வகையில் அறிமுகப்படுத்தும் புத்தகங்களாக இருக்கும். ஆரம்பநிலை வாசகர்களுக்கும் கூட மருதன் புத்தகங்கள் உதவலாம். அவர் Private Life of Mao(மறைந்த முதல்வர் ஜெயலலிதா அம்மையார் படித்துவிட்டு டாக்டர் ஒருவரிடம் பிரைவேட் லைபை படிக்க பரிந்துரைத்ததாக செய்தி) Unknown Story of Mao, கனவிலிருந்து போராட்டத்திற்கு- செகுவாரா போன்ற புகழ்வாய்ந்த புத்தகங்களை மருதன் ரெபெரன்ஸில் காட்டியுள்ளார். 2002ல் சே கனவிலிருந்து போராட்டம் புத்தகம் ரூ 300க்கு விடியல் வெளியிட்டது. அப்புத்தகம் வந்தவுடன் 5 புத்தகங்கள் எனக்கு அனுப்பப்பட்டன. திருவாரூர் கல்லூரிக்கு அப்புத்தகத்தை அறிமுகப்படுத்தினேன். NFTE மாநில செயலர் பொறுப்பில் அப்போது இருந்த தோழர் ஆர்.கே ஒன்றை பெற்றுக்கொண்டது நினைவிற்கு வருகிறது.

தற்போது சுவாரஸ்யமான எழுத்து முறையிலிருந்து விடுபட்டு ஆழமாக எழுதி வருவதாக மருதன் குறிப்பிட்டுள்ளார். ஏராள புத்தகங்களை எழுதிவரும் அவரது பணி தொடரட்டும்.

Jan 19

நன்னூல் பதிப்பக மணலி காதர் அவர்கள் தன் முகநூல் பக்கத்தில் செய்தி ஒன்றை தந்துள்ளார். அவரது பதிப்பக புத்தகங்கள் எவையெல்லாம் மொழிமாற்றம் செய்யப்படுவதற்காக ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன என்பதே அச்செய்தி.

அதில் தோழர் பட்டாபிராமன் எழுதியுள்ள 'நேருவின் மரபு' அரபு மொழியிலும், 'நவீன சிந்தனையின் இந்திய பன்முகங்கள் ' வங்க மொழியிலும் மொழிபெயர்க்கப்பட ஒப்பந்தங்கள் போடப்பட்ட செய்தியும் இருக்கிறது. நன்னூல் தோழர் காதர் அவர்களுக்கு நன்றி.

நியுஏஜ் இதழிலும், டெலிகாம் இதழிலும் முன்பு நான் எழுதிய கட்டுரைகளை இந்தி, பஞ்சாபி , மலையாளம், தெலுங்கு மொழிகளில் தோழர்கள் ஆங்காங்கே மொழி பெயர்த்த செய்திகள் உற்சாகத்தை தந்தன. தமிழ் - ஆங்கில இரு மொழி புலமை வாய்ந்த கடலூர் தோழர் நீலகண்டன் தொடர்ந்து நான் எழுதிய ஆங்கில கட்டுரைகளை பல தோழர்களுக்கு சென்றடைய உதவியிருக்கிறார். அவரின் மொழியாக்கத்தின் அழகால், அக்கட்டுரைகளின் நேர்த்தி கூடியதை நான் உணர்ந்திருக்கிறேன். திருச்சி அறிவழகன், அக்களூர் ரவி போன்ற தோழர்களும் சில கட்டுரைகளை மொழியாக்கம் செய்து உதவியுள்ளனர்.

மொழியாக்கம் மூலம் எனக்கு உதவிய அனைத்து தோழமைகளுக்கும் எனது நன்றி

jan 19

நரசிம்மராவ் பிரதமராக இருந்த நேரத்தில் அவரது அன்றாட வாழ்க்கைப் பற்றிய செய்தியை வினய் சத்பதி சொல்கிறார்.

காலை 5 மணிக்கு எழுந்துவிடுவார். வீடு 3, ரேஸ்கோர்ஸ் சாலை. வழக்கமான லுங்கி பனியன், வாரப்படாத இருக்கிறவை அப்படியே தூக்கி நிற்கும் தலையுடன் தன் கம்யூட்டர் அறைக்கு சென்றுவிடுவார். 6 மணிக்கு செய்தித்தாள்கள் வந்தவுடன் படிப்பார். டாக்டர் வந்து அவரின் அன்றாட உடல் சோதனைகளை செய்வார். டிரெட்மில் பயிற்சியை அரைமணி நேரம் செய்வார்.

காலை 8.30க்கு ஆகாரம். யாதவராகிய ராஜைய்யா என்பவர் அவரது சமையற்காரர். ராஜையா ராவின் கிராமத்திலிருந்து அழைத்து வரப்பட்டவர்.உப்புமா- பிட்ளை சுவைத்து ராவ் சாப்பிடுவார். பொதுவாக ஆந்திரா- மராத்திய உணவு வகைகளை அவர் எடுத்துக்கொள்வதில் பிரியமாக இருந்தார். காலை கிளம்பினால் -அவரது குர்தா வேட்டியுடன் - மாலை 5 மணிக்குத்தான் இல்லம் திரும்புவார். மாலை ஸ்நாக்ஸ் என்பதற்கு சர்க்கரை இல்லா தேநீருடன் நூடில்ஸ்- பாஸ்தா எடுத்துக்கொள்வார். திரும்ப அலுவல்களுக்காக தன் அறைக்கு சென்றுவிடுவார். தோன்றியவைகளை தானே தன் லாப்டாப் கம்யூட்டரில் தட்டச்சு செய்வார். மெதுவாக இந்துஸ்தானி இசை ஓடிக்கொண்டிருக்கும். இரவு உணவிற்கு முக்கிய் அறிஞர்கள் வருவர். அழைக்கப்பட்டவர்களுடன் விவாதிக்கொண்டே டின்னர் நடைபெறும். அரிசி உணவு பருப்பு வகைகளுடன் இருக்கும். கரேலா என்கிற காய்வகை ஒன்று இருக்குமாம்.

நாட்டின் கொந்தளிப்பான பொருளாதார சீர்திருத்தங்கள், பாபர்மசூதி- ராமர் கோயில் விவகாரம், ஹர்ஷத் மேத்தா ஊழல் என நெருக்கடிகள் பிழிந்த தருணங்களாக அவரது காலம் கடந்தது. அவர் சோனியவிடமோ, அர்ஜுன் சிங், திவாரி, பவார் அல்லது ராஜிவ் காந்திக்கு நெருக்கமானவர் என எவரிடமும் நேரிடையாக மோதிக்கொள்ளாமல் இருக்கமுயற்சித்தார். ஆரம்பத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் எவரையும் சீர்திருத்த திசை நோக்கி அழைத்துச் செல்லமுடியவில்லை. முக்கிய வெளிஅறிவுஜீவிகள் உதவியுடன் மன்மோகன் சிங்கை முன்வைத்து அவர் விமர்சனங்களை சமாளித்து வந்தார்.

சீர்திருத்தங்கள் காரணமாக அரசாங்கம் கவிழ்ந்துவிடக்கூடாது-இருக்க வேண்டிய அவசியம் குறித்து பாஜக-மாநில தலைவர்கள்- கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் அவர் உரையாடலை விரும்பினார். ஜோதிபாசுவிடம் தனது நம்பிக்கைக்குரிய ஜோஸ்யர் என் கே சர்மா வழியாக செய்திகளை அனுப்பினார். வாஜ்பாய் அவர்களுக்கும். இ எம் எஸ் நம்பூதிரி அவர்களுக்கும் உயரிய பத்ம விபூஷன் தர விரும்புவதாக செய்தி தந்தார். ஆந்திராவில் தெலுங்கு மனிதர் என்ற வகையில் என் டி ராமராவின் எதிர்ப்பு இல்லாமல் சமாளித்தார்.

அவரது இல்லத்தில் பிடித்தவர்களுடன் உரையாடுவது, இசை கேட்பது, சிந்தனைகளை

எழுதிக்கொள்வது போன்ற அம்சங்கள் மூலம் அவர் தனக்கு நேர்ந்த அழுத்தங்களை குறைத்து வந்தார் என வினய் சத்பதி எழுதியுள்ளார்.

- The Man who remade India

jan 20

1919 இந்திய சட்டம் மாண்டேகு செம்ஸ்போர்ட் முன்மொழிவுகளுடன் வந்தது. இந்தச் சட்டப்படிதான் மதராஸ் ராஜதானியில் நீதி கட்சி ஆட்சிக்கு வந்தது. பிற ராஜதானிகளில் காங்கிரசின் உட்கட்சி போராட்டத்தில் pro changers என அழைக்கப்பட்டவர்களும் பிறரும் ஆட்சிக்கு வந்தனர். அது இரட்டை ஆட்சி என அன்று அழைக்கப்பட்டது.

ராஜதானியில் மிகப்பெரும் அதிகாரங்கள் கவர்னர் வசம் பிரிட்டிஷ் ஒப்படைத்திருந்தது. இந்தசட்டத்தின் போதாமைகளை விமர்சித்து காங்கிரஸ் தேர்தல் பகிஷ்கரிப்புகளை அப்போது செய்தது. No changers பக்கத்தில் காந்தியின் நிலையை ஏற்று ராஜாஜி, பிரசாத் நின்றனர். ராஜாஜி main spokes person ஆக இருந்தார்.

நீதி கட்சியின் இந்த சட்டமன்றபங்கேற்பை மனதில்கொண்டுதான் நூற்றாண்டு விழாவை தமிழக அரசு தன் மரபாக அதை ஏற்று நடத்திக்கொண்டது.

இந்த இரட்டை ஆட்சியில் உள்ளே போனவர்கள் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்பதை உணர்ந்தனர். சர் சி ஒய் சிந்தாமணி அய்க்கிய மாகாணத்தில் அமைச்சரானார்.அவர் புகழ் வாய்ந்த பத்திரிகையாளர். மே 1920ல் இந்த இரட்டை ஆட்சி குறித்து எழுதியிருப்பார்

At the top there is the Governor whose relation to his Ministers is not the true relation of the Governor in the self governing Dominions to his Ministers but the relation of a superior authority in whom much reserve power is vested

ஏ பி பத்ரோ வட்ட மேஜை மாநாட்டில் அழுத்தமாக பேசியவர். புகழ் வாய்ந்த மதராஸ் ராஜதானியின் தலைவர்களுள் ஒருவர். அவர் ஜூன் 1924 ல் அமைச்சராக இருந்த அனுபவத்தை சொன்னார்.

Ministers were so completely under the power of the Governor..there was no room for the development of joint and corporate responsibility under the circumstances

கே எம் முன்ஷி பம்பாய் சட்டமன்றத்திற்கு 1926ல் நுழைகிறார். அவர் சட்ட அறிஞர் என்ற வகையில் சரியாக புரிந்துகொண்டு சொன்னார்

The legislatures under the act of 1919 were little more than consultative, deliberative and advisory bodies. Experience revealed one thing: the bureaucracy was in all matters inflexibly hostile to nationalist Indians. Only assertive Governors General could really claim to govern the country. Others merely allowed themselves to be guided by the men on the spot

இந்த மனக்குறைகளையெல்லாம் அறிந்த சைமன் கமிஷன் மே 1930 அறிக்கையில் இரட்டை ஆட்சி dyarchy யை நீக்கலாம் என்றது. ஆனாலும் மாகாணங்களில் ஒருவகை கவர்னர் guided democracy concept யை அது தெரிவித்தது. சைமன் எதிர்த்து திரும்பிப் போ என பெரும் போராட்டங்கள் நடந்தன.

1928ல் மதராஸ் சட்டமன்றத்தில் சைமனுக்கு எதிரான சுயராஜ்ய கட்சியினர் தீர்மானம் கொணர முதல்வராக இருந்த சுப்பராயன் ஏற்கவில்லை. சுயராஜ்ய மந்திரிகள் ராஜினாமா ஆதரவை விலக்கிக்கொண்டதால் , நீதி கட்சி ஆதரவு கொடுத்தது.

மதராஸ் வந்த சைமன் கமிஷனை பெரியார் மற்றும் நீதி கட்சியினர் வரவேற்றனர். இராமசாமி முதலியார் விருந்தளித்தார். சர் ஏ டி பி பன்னீர்செல்வத்துடன் சைமன் கமிஷனை சந்தித்து தங்கள் நிலைகளை விளக்கினார்.

சைமன் பகிஷ்காரம் பார்ப்பன சூழ்ச்சி என்றும் அரசாங்கம் அமைத்துள்ள கமிஷனை தக்க வழியில் உபயோகித்துக்கொள்ளவேண்டியது மக்கள் கடமை என்றும் பெரியார் அப்போது போதித்துக்கொண்டிருந்தார். கமிஷனை சமூக சீர்திருத்தத்துக்கு பயன்படுத்துவோம் என்றார். அரசியல் சீர்திருத்தம் சற்று கூட வருவதால் பலன் இல்லை, சமூக சீர்திருத்தமே அவசியம் என்ற பார்வையை அழுத்தமாக பெரியார் சொல்லியிருப்பார். பிப் 26, 1928 குடிஅரசில் இதைக் காணலாம்.

இப்படியாக அன்றைய வரலாறு இருக்கிறது…

jan 20

Dong ping Han அமெரிக்க வாழ் சீனப் பேராசிரியர். மாவோ காலம் பொற்காலம் எனப் பேசிவருபவர். Unknown Cultural Revolution என்கிற புத்தகம் எழுதியவர். அவரின் கட்டுரைகளை thinkchina இணையத்தில் பார்க்க முடிகிறது.

சீனாவில் டெங்ஷியோ பிங்கால் கொணரப்பட்ட one child policy குறித்து கடுமையான விமர்சனங்களை எழுதி வருகிறார். கலாச்சார புரட்சி பெரும் மாற்றங்களை தன் ஊர் உட்பட , சீனா முழுதும் கொணர்ந்தாக சொல்லும் டாங் பிங் , மாவோவிற்கு பின்னர் டெங் காலத்தில் கொணரப்பட்ட சீர்திருத்தங்களால், பெண்களும்- உழைப்பாளர்களும் துயர்களுக்கு உள்ளாக்கப்பட்டும், கொழுத்த பணக்காரத்தட்டு உருவாகி, லஞ்சம் ஆடும் நாடாக சீனா மாறிவிட்டதாக எழுதி வருகிறார்.

மாவோவின் ஆட்சியை பொற்காலம் என்றும், அவருக்கு என வங்கி கணக்கின் இருப்போ சொத்தோ இல்லாமல் அவர் எளிய வாழ்க்கை மேற்கொண்ட கதைப் பிரதியை டாங் பிங் ஹான் எழுதி வருகிறார்.

டாங் எழுதிய The socialist legacy underlies the rise of today's China in the world என்கிற நீள் கட்டுரை ஒன்று Aspects of India's Economy இதழில் வந்தது. அதை புதிய ஜனநாயக முன்னணி தோழர்கள் சோசலிச சீனாவும் முதலாளித்துவ சீனாவும் என மொழி பெயர்த்து கொண்டு வந்தனர். கீழைக்காற்றின் சிறிய புத்தகம் தான். படித்துப் பார்க்கலாம்.

மாவோ உலகம் முழுவதிலுமான போராளிகளுக்கு நம்பிக்கையூட்ட ஏகாதிபத்தியத்தை காகிதப்புலி என வர்ணித்தார். மாவோ மறைவிற்கு பின்னர், அவரையும் காகிதப்புலியாக கருதிக்கொண்ட ஆளும் establishment கொஞ்சம் அவரை விமர்சனக்கண் கொண்டு பார்க்க ஆரம்பித்தது. மாவோ சிந்தனைகள் என்கிற invocative clause சீனாவின் அரசமைப்பு விதிகளிலேயே சொல்லப்பட்டிருந்தாலும், நமது காந்தி ரூபாய் நோட்டில் இருப்பதைப் போன்ற செலாவணியாகவே அங்கு இருப்பதாக தோன்றுகிறது.

மூன்றாம் உலக நாடுகளில் மாவோ சற்று தாக்கத்துடன் இன்னும் இருந்து வருகிறார் என்பதில் உண்மையில்லாமல் இல்லை. அதேநேரத்தில் Mao our chairman போன்ற அதீத முழக்கங்கள் இருப்பதில்லை.

jan 21

Man or woman is a mix of action and quietism. One may be active in some domain, may be quite in some other domain

The holiness of my action is the problem.

Com Namari

jan 21

Gandhi said so

I recognize no God except that is to be found in the heart of the dumb millions.

And I worship the God that is Truth..through the service of these millions

As quoted by Pyarelal in his Mahatma vol 9 book 2

jan 22

During Noakhali Gandhiji taught us so

There are two aspects of Hinduism. There is, on the one hand, the historical Hinduism with its untouchability, superstitious worship of stocks and stones, animal sacrifice and so on. On the other, we have Hinduism..which is the acme of Ahimsa and oneness of all creation, pure worship of one immanent, formless, imperishable God.

Ahimsa is for me the chief glory of Hinduism..I hold that it is the way of life and India has to show to the world

God resides in the heart of pure always..you need fear no one on earth..The Allah of Islam is the same as the Rama of Hindus - the protector of the innocent..

I can sing with cardinal Newman " The night is dark and I am far from home, Lead thou me on"

- inputs Pyarelal Mahatma The Last Phase vol 9 book 2 ch A venture in Faith

வேதங்களின் நாடு’ இ எம் எஸ் அவர்கள் மலையாளத்தில் எழுதிய சிறு பிரசுரம். தமிழில் 64 பக்கங்களில் அதை 15 ஆண்டுகளுக்கு முன்னர் மொழிபெயர்த்து கொணர்ந்தனர். அதன் புதிய பதிப்பு இப்போது கிடைக்கிறது.

ஒரு மணிநேரத்திற்கு சற்று கூடுதலாக கவனத்துடன் உட்கார முடிகின்ற எவராலும் இந்த சிறு பிரசுரத்தை படித்து உள்வாங்கமுடியும். மார்க்சிய பயிற்சி நிறைந்த தோழர் இ எம் எஸ்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் இந்திய வரலாற்றை மிக essence ஆக இதில் சொல்ல முயற்சித்திருப்பார்.

ஆரியர் வருகை- அவர்களுக்கு முன்பே இங்கு நாகரிக மனித கூட்டம் இருந்தமை- ஆரிய திராவிடர்கள் இறுக்கமாக உட்புகமுடியாத கூட்டமாக வளரமுடியாமை- இரு கலாச்சாரங்களும் ஒன்றையொன்று பாதித்தமை- சமஸ்கிருதம் மற்றும் தமிழின் தனித்தொன்மை- இந்து சாம்ராஜ்யங்கள்- சுல்தான் முஸ்லீம்கள் ஆட்சி- பிரிட்டிஷ் ஆட்சி என ஏற்பட்ட தாக்கங்கள்- தாக்கமின்மை- விடுதலை இயக்கம் அதன் சிறப்பு மற்றும் போதாமை- வருண சாதி மதம் கடந்து அசமத்துவத்திற்கு எதிரான போராட்டங்களின் தேவை என இ எம் எஸ் அவர்கள் இந்த சிறிய பிரசுரத்தில் சாரமாக விளக்கிச் செல்கிறார்.

இ எம் எஸ் தொடர் விவாதத்திற்காகவும் சில அம்சங்களை முன் வைக்கிறார்.

நால்வருணம் உருவாவதற்கு முன்னர் வர்க்க வேறுபாடுகள் இல்லையா?

சிந்து கலாச்சாரத்தில் அடிமை முறை சாயல்கள் இருந்ததா?

வருண சாதி முறைக்கு எதிராக (கிரேக்க அடிமை முறைக்கு எதிரானது போல) கலகங்கள் இல்லாமல், லோகயதவாதிகள் புத்த

ஜைன தத்துவப் போராட்டங்கள் மட்டுமே மேலோங்கியிருந்ததா?

பின்னர் வந்த இஸ்லாம் பேரரசுகளாலும் வைதீக கலாச்சாரத்தை அடிபணியச் செய்ய முடியாமல் போனது ஏன்..?

கிராம வாழ்க்கையின் அஸ்திவாரத்தில் பெரிய மாறுதலை ஏற்படுத்த முடியாமை ஏன் ? போன்றவற்றை இ எம் எஸ் மேலும் விவாதம் தேவைப்படும் இடங்களாக பார்க்கிறார்.

சமூகம்,அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றுடன் கலாச்சாரத் துறையிலும் ஆதிக்கம் பெற்ற ஆளும் வர்க்கம் தோன்றியது. இவர்கள் உதவியுடன் இந்து சாம்ராஜ்யங்களும், முஸ்லிம் சாம்ராஜ்யங்களும் ஆட்சி புரிந்த நிலையை இ எம் எஸ் சொல்கிறார்.

இ எம் எஸ் தான் உணரும் தீர்வை முன் வைக்கிறார்

"பொருளாதார கலாச்சாரத் துறைகளில் அதுவரை கண்டிராத அபிவிருத்தி வருண சாதி அமைப்பில் ஏற்பட்டது மறுக்க முடியாத உண்மை..ஆனால் தாசர் - மேல் வர்ணத்தினர் வளர்ந்து சாதி உபசாதிகள் உருவானது சமூகத்தின் வளர்ச்சிக்கு தடையானது…இந்தியாவில் நவீன யுகம் துவங்க வேண்டுமெனில் வருண சாதி கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற முதலாளித்துவ இலட்சிய..பூர்ஷ்வா மறுமலர்ச்சியின் வடிவில் அய்ரோப்பாவில் நடைபெற்ற கலாச்சாரப் புரட்சி இந்தியாவிலும் நடக்கவேண்டும்"

இந்திய முதலாளித்துவ வளர்ச்சியில் விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும் 'பாப்பரானதை' இ எம் எஸ் சொல்கிறார்.

சுயராஜ்யத்தை ராமராஜ்யமாக சித்தரித்து தேசியத் தலைவர்கள் பேசியதால், எதிர்மறையாக இஸ்லாமிய ஆதிக்க புதுப்பித்தல் கனவு முஸ்லிம் சமுதாயத்தில் உருவானது… என அவரது புரிதல் அமைந்தது. இவ்விடத்தில் இ எம் எஸ் ஒருவகை absolute தன்மை ஏற்றியிருப்பது சரியா என என்னிடம் கேள்வி இருக்கிறது.

1935 இந்திய அரசு சட்டம் - அதை ஒட்டிய மாகாண தேர்தல்கள்- அதில் காங்கிரஸ் பெற்ற அமோக வெற்றி பிற இயக்கங்களுக்கு - முஸ்லிம் லீக், அம்பேத்கர் இயக்கம், நீதி கட்சி ஆகிய தேர்தல் பாதையை மேற்கொண்டவர்களுக்கு பெரும் அச்சத்தை உண்டாக்கியது என்பதாகவே எனக்கு புரிதல் உள்ளது. இதற்குப் பின்னர்தான் இவர்கள் இணைந்தோ தனித்தனியாகவோ தேசிய பொது

நீரோட்டத்திற்கு எதிராக தீவிரமாக இயங்கத்துவங்கினர். இடதுசாரிகள் அப்போது போராட்டப்பாதையில் மட்டுமே தாங்கள் இருந்த சிற்சில இடங்களில் கவனம் செலுத்திக்கொண்டிருந்தனர். இந்து மகாசபாவும் தன்னை முடுக்கிவிடத் துவங்கியது.

இந்த நூலில் இ எம் எஸ் இவ்வாறு முடித்திருப்பார்

" வேதங்களின் நாடு என்கிற புனிதப் போர்வையணிந்து இந்தியாவின் சரித்திரத்தை சமூகத்தை பார்க்கக்கூடிய எந்த முயற்சியும் நாட்டை எதிர் நோக்குகிற நெருக்கடிகளுக்கு பரிகாரமாகாது..பெருமைப்பட பாரம்பரியம் என போற்றுவதற்கு இருப்பது போலவே- அதற்கு மாறானவைகளுக்கு எதிராக உறுதியாக போராடவும் வேண்டும்.."

இந்த சிறு ஆக்கத்தில் இ எம் எஸ் வரலாற்றின் போக்கை சமகால வரலாறுவரை (1980 வரை) பார்த்து தன் விமர்சனங்களை முன் வைத்திருப்பார். இந்த வரலாற்றின் ஒரு பகுதியாக சுய விமர்சன ஆய்வு என எதையும் தேடாமல் விட்டிருப்பது சற்று ஏமாற்றமான அம்சமாக எனக்குப் பட்டது. We should also turn search light inwards , otherwise we will be an observer of history not part or maker of history.

ஜன 22, 2024

JAN 23

இந்திய குடிமகன், 18 வயதிற்கு குறையாதவர் என்கிற வகையில்தான், ஒவ்வொரு இந்தியரும் அவரது வாக்குரிமையை அரசமைப்பு சட்டப்படி பெற்றுள்ளார். அவர் இந்த மதக்காரர், இனக்காரர், மொழிக்காரர், பாலினம், சாதிக்காரர், கொள்கைக்காரர்- நாத்திகர்/ ஆத்திகர் என்ற அடிப்படையில் இந்த வாக்காளர் உரிமையை பெறவில்லை.

18 வயதுக்கு குறைவில்லாதவர், mentally stable போன்ற பொது அம்சங்கள் அடிப்படையில் 'சிட்டிசன்' என்கிற பேரடையாளத்தில் இந்த உரிமையை பெறுகிறார். அது single entity.

நாடாளுமன்ற / சட்ட மன்ற தேர்தல் தொகுதி ஒன்றில் அவருக்கான வாக்களிக்கும் உரிமையை அவர் செலாவணி ஆக்குகிறார். அவர் கொள்கை- இசம், சாதி, மத, இன, மொழி, பாலின , வாக்குக்கு பணம் பெறுதல் போன்ற பல காரணிகளின் செல்வாக்கு இழுப்புகளுக்கு உள்ளாகிறார்/ உள்ளாக்கப்படுகிறார். இந்த அடிப்படையில் எல்லாம் எந்த சலுகையும் காட்டப்படாத single voter list என்பதில் தான் அவர் இடம் பெற்றுள்ளார்.

இந்த 'சிட்டிசன்' உணர்வை பெரும்பான்மை வாக்காளர்களிடம் awareness ஆக கொண்டு செல்ல முடியாத பலவீனம் செயல்படுகிறது. இந்த unawareness தேர்தல்களில் பெரும் ஆட்டத்தை நடத்தி, திசை மாற்றங்களை உருவாக்கிவிடுகிறது.

உலகில் நடந்த பெரும் புரட்சிகளுக்கு சற்றும் மதிப்பில் தாழாத, இன்னும் சொல்லப்போனால் மேலான ஒன்றாக இந்திய விடுதலைக்குப் பின்னர் அரசமைப்பு மூலம் இந்திய மக்கள் பெற்ற வயது வந்த அனைவருக்குமான வாக்குரிமை அமைந்தது. அச்சமின்றி, பெரும் தைரியத்துடன் இந்திய கோடிக்கணக்கான மக்கள் மீது நம்பிக்கைக் கொண்டு அரசியல் அமைப்பு அவை இந்த பெரும் sovereigntyயை 'நமக்கு நாமே ' என்று வழங்கியுள்ளது. We the people of India என பிரித்துப் பார்க்காது அந்த இறையாண்மை மக்களால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

As a voter none is low none is high என்கிற காந்திய செல்வாக்கையும், one man one vote one value என்கிற அம்பேத்கரின் அரசியலில் அசமத்துவ ஒழிப்பு செல்வாக்கையும், நேருவின் ஜனநாயக புரிதலுடன் , படேலின் no communal voters என்கிற உறுதிப்பாட்டையும் இந்த வயது வந்தோர் வாக்குரிமை பண்புகளாகக் கொண்டு முகிழ்த்தது. அந்த சிட்டிசன் வாக்கு என்கிற integrityயை சாதி வாக்கு, மத வாக்கு, இன வாக்கு, மொழி வாக்கு , விற்கும் சரக்கு வாக்கு போன்ற பல்வேறு அம்சங்களில் differentiate செய்து ஏதோ ஒரு பெட்டிக்குள் அடைந்துப் போகப் போகிறோமா என்கிற கேள்வியை வாக்காளர் எழுப்பிக்கொள்ள வேண்டாமா?

2024 நாடாளுமன்ற தேர்தல் விரைவில் வரவிருக்கிறது. எந்த வேட்பாளர் / அவரது கட்சி/ அவர்தம் தலைவர் - வாக்காளர் ஆகிய என்னை எந்த பேதமாக்கும் அடையாளத்துடன் அணுகாமல், அரசமைப்பு கொடுத்த உரிமைப்படி பார்க்கும் constitutional morality- dignityயை நிலைப்பெற செய்வார் எனப் பார்த்து தேர்வு செய்திடும் பொறுப்பு முன் எப்போதையும்விட, இப்போது அவசரத் தேவையாகிவுள்ளது.

இந்திய குடிமகன் என்கிற அடையாளத்துடன் ஒருவர் பெறும் உரிமை/ கடமையை வேறு எந்த அடையாளத்துள்ளும் அடகு வைக்க சம்மதியேன் என்கிற உறுதிமொழி பெருகட்டும். அது வழிகாட்டட்டும்.

ஜன 23, 2024

jan 23

இந்திய குடிமகன், 18 வயதிற்கு குறையாதவர் என்கிற வகையில்தான், ஒவ்வொரு இந்தியரும் அவரது வாக்குரிமையை அரசமைப்பு சட்டப்படி பெற்றுள்ளார். அவர் இந்த மதக்காரர், இனக்காரர், மொழிக்காரர், பாலினம், சாதிக்காரர், கொள்கைக்காரர்- நாத்திகர்/ ஆத்திகர் என்ற அடிப்படையில் இந்த வாக்காளர் உரிமையை பெறவில்லை.

18 வயதுக்கு குறைவில்லாதவர், mentally stable போன்ற பொது அம்சங்கள் அடிப்படையில் 'சிட்டிசன்' என்கிற பேரடையாளத்தில் இந்த உரிமையை பெறுகிறார். அது single entity.

நாடாளுமன்ற / சட்ட மன்ற தேர்தல் தொகுதி ஒன்றில் அவருக்கான வாக்களிக்கும் உரிமையை அவர் செலாவணி ஆக்குகிறார். அவர் கொள்கை- இசம், சாதி, மத, இன, மொழி, பாலின , வாக்குக்கு பணம் பெறுதல் போன்ற பல காரணிகளின் செல்வாக்கு இழுப்புகளுக்கு உள்ளாகிறார்/ உள்ளாக்கப்படுகிறார். இந்த அடிப்படையில் எல்லாம் எந்த சலுகையும் காட்டப்படாத single voter list என்பதில் தான் அவர் இடம் பெற்றுள்ளார்.

இந்த 'சிட்டிசன்' உணர்வை பெரும்பான்மை வாக்காளர்களிடம் awareness ஆக கொண்டு செல்ல முடியாத பலவீனம் செயல்படுகிறது. இந்த unawareness தேர்தல்களில் பெரும் ஆட்டத்தை நடத்தி, திசை மாற்றங்களை உருவாக்கிவிடுகிறது.

உலகில் நடந்த பெரும் புரட்சிகளுக்கு சற்றும் மதிப்பில் தாழாத, இன்னும் சொல்லப்போனால் மேலான ஒன்றாக இந்திய விடுதலைக்குப் பின்னர் அரசமைப்பு மூலம் இந்திய மக்கள் பெற்ற வயது வந்த அனைவருக்குமான வாக்குரிமை அமைந்தது. அச்சமின்றி, பெரும் தைரியத்துடன் இந்திய கோடிக்கணக்கான மக்கள் மீது நம்பிக்கைக் கொண்டு அரசியல் அமைப்பு அவை இந்த பெரும் sovereigntyயை 'நமக்கு நாமே ' என்று வழங்கியுள்ளது. We the people of India என பிரித்துப் பார்க்காது அந்த இறையாண்மை மக்களால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

As a voter none is low none is high என்கிற காந்திய செல்வாக்கையும், one man one vote one value என்கிற அம்பேத்கரின் அரசியலில் அசமத்துவ ஒழிப்பு செல்வாக்கையும், நேருவின் ஜனநாயக புரிதலுடன் , படேலின் no communal voters என்கிற உறுதிப்பாட்டையும் இந்த வயது வந்தோர் வாக்குரிமை பண்புகளாகக் கொண்டு முகிழ்த்தது. அந்த சிட்டிசன் வாக்கு என்கிற integrated one யை சாதி வாக்கு, மத வாக்கு, இன வாக்கு, மொழி வாக்கு , விற்கும் சரக்கு வாக்கு போன்ற பல்வேறு அம்சங்களில் differentiate செய்து ஏதோ ஒரு பெட்டிக்குள் அடைந்துப் போகப் போகிறோமா என்கிற கேள்வியை வாக்காளர் எழுப்பிக்கொள்ள வேண்டாமா?

2024 நாடாளுமன்ற தேர்தல் விரைவில் வரவிருக்கிறது. எந்த வேட்பாளர் / அவரது கட்சி/ அவர்தம் தலைவர் - வாக்காளர் ஆகிய என்னை எந்த பேதமாக்கும் அடையாளத்துடன் அணுகாமல், அரசமைப்பு கொடுத்த உரிமைப்படி பார்க்கும் constitutional morality- dignityயை நிலைப்பெற செய்வார் எனப் பார்த்து தேர்வு செய்திடும் பொறுப்பு முன் எப்போதையும்விட, இப்போது அவசரத் தேவையாகிவுள்ளது.

இந்திய குடிமகன் என்கிற அடையாளத்துடன் ஒருவர் பெறும் உரிமை/ கடமையை வேறு எந்த அடையாளத்துள்ளும் அடகு வைக்க சம்மதியேன் என்கிற உறுதிமொழி பெருகட்டும். அது வழிகாட்டட்டும்.

ஜன 23, 2024

jan 23

In India devotion comes easier than serious study. The latter requires effort and responsibility. Sadly, uncritical veneration also ossified, even as it deifies , the object of worship

Maharand paranjape in his India's Vivekananda

jan 24

காந்தி நவகாளி பயணத்தில் sriராம்பூர் பகுதியில் முஸ்லிம்- இந்துக்களிடம் தீவிரமாக உரையாடிக்கொண்டிருந்தார். கிராமத்தில் இரு சாராரும் ஒத்து வாழமுடியும் என்கிற நம்பிக்கையை தந்துகொண்டிருந்தார். அவரிடம் கடவுள், மதம், வழிபாடு குறித்த வந்த கேள்விகளுக்கு தான் உணர்ந்த பதில்களை தந்துகொண்டிருந்தார்.

நாத்திகர்களும் ஏற்றுக்கொள்ளத் தகுந்த Truth is God rather than God is truth என்பதை வெளிப்படுத்தினார். கடவுள் நபரா என்ற கேள்வி வந்தது. காந்தி அதற்கு

I do not regard God as a person என்றார். அதேநேரத்தில் பல்வேறு வகைகளில் கடவுள் பார்க்கப்படலாம் எனச் சொன்னார்.

One may worship God as a person, another as a force and still another as Truth or Law; it makes no difference.

ஏன் பிரேயர் என்கிற வழிபாடு- கடவுள் தன் கடமையை ஆற்ற அதை விழைகிறாரா என்று ஒரு கேள்வி வந்தது. காந்தி அதற்கு

No . God needs no reminder but man does. Prayer is a heart search, a call to humanity , a call for self purification.

God is certainly is irrespective of our belief. Realisation of God is infinitely more than mere belief.

Man often repeats the name of God parrot wise. The true seeker must have that living faith which not only dispel the untruth of parrot wise repetition from within him but also from the heart of others.

வழிபாட்டின் பலன்கள் என பேச்சு வந்தபோது காந்தியின் மறுமொழி

அவரவர் பெறுகின்ற மேன்மையான நன்னடத்தை , உள மாற்றம் என்றார்.

God never appears to you in person but in action. God to be God must rule the heart and transform it. He must express Himself in every smallest act of his votary.

அப்போது பேசியவற்றை தொகுத்தால்

“ to me God is Truth and Love, ethics and morality, source of light and life. God is conscience. He is even the atheism of the atheist. He is personal to those who need his personal presence. He is embodied to who need His touch.

He is the purest essence. He is simply to those who have faith. He is all things to all men. He is long suffering. He is the greatest democrat..He leaves us unfettered to make our own choice between evil and good.”

மதம் பற்றிய உரையாடலில் காந்தி தன் அனுபவ எண்ணங்களை பகிர்ந்தார்

Indeed, there are as many religions as men on earth.

No religion as it existed in the present day was entirely free from blemish .

The criterion is to conform to the message of the learned and practice of good, who have attained complete freedom from hatred and attachment. Even then one should not do a thing unless it appealed to one’s heart as well as intellect.

jan 25

இந்திய விடுதலைப் போராட்ட வேள்வி எனும் பெரும் வரலாற்றில் காந்திக்கு இணையான வரலாற்று பாத்திரம், காந்தியைவிட உயர்ந்த வரலாற்று மனிதர்/ மனிதர்கள் எவரும் இல்லை என்கிற பொது புத்தியின் வலிமையை உணர்ந்தவர்கள், தாங்கள் உயர்த்த விரும்பும் வரலாற்று மனிதரை காந்தியுடன் பொருதச் செய்யும், காந்தியை சாய்க்கும் கருவியாக மாற்ற நினைத்து கருத்தாற்றுவது தொடர் நிகழ்வாகவே இருந்து வருகிறது. காந்திதான் எவருக்கும் உயர் தொடுகோடு.

அட்லி சொன்ன ஏதோ ஒரு செய்தியை வைத்துக்கொண்டு, நேதாஜியே தேசப்பிதா என்கிற diverse discourseயை துவங்கியுள்ளனர். ஆயுதப் போராட்டமே தீர்வு, அகிம்சை நோஞ்சான் கோழைகளின் ஆயுதம் என காந்தியை புரிந்துகொள்ளாமலே பேசுகின்ற கூட்டம் பலவகைப்பட்டது. அதில் ஒன்றுதான் இப்போது நேதாஜியை சாகசக்காரராக சித்தரித்து உயர்பீடாதிபதி ஆக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

Those who understand Gandhi or read Gandhi, know well Gandhi defends himself by his ‘did actions and said messages’.

நேற்று தமிழ் டிவி ஒன்றில் அரைகுறை கலந்துரையாடலை கேட்டு நொந்து போனேன். ஒருவர் சொல்கிறார் காந்திக்கான தேசப்பிதா என்பது அதிகார டைட்டில் அல்ல. அரசமைப்பு விதி 18 abolition of title பற்றி பேசுகிறது. தேசப்பிதா என்பது அப்படி பொதுவாக பேசப்படும் அழைப்புதான் என்று. அவரே சொல்கிறார் தான் நேதாஜி என புத்தகம் எழுதியதை. அது என்ன டைட்டில் - பாபாசாகேப், பெரியார்,லோக்நாயக், ஜனநாயக், பேரறிஞர், கலைஞர், புரட்சித்தலைவர் என்றெல்லாம் அழைக்கிறோமே அவையெல்லாம் அதிகாரபூர்வ டைட்டிலா என கேட்கத் தெரியாத அல்லது விரும்பாத நெறியாளர்.

பங்கேற்றவர் எவரும் காந்தியை கொஞ்சமாவது தெரிந்துகொண்டவர்கள்தானா என்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது.

இந்த முரணை ஏதோ யுரேகா யுரேகா என கண்டுபிடித்த மாதிரி பேசிய திரு ஆர் என் ரவி அவர்களும் காந்தியை படித்தவர்தானா என்ற சந்தேக உணர்வே

எழுகிறது. 1942 க்குப் பின்னர் காங்கிரஸ் காந்தி non event என்பது அவரது மதிப்பீடு. குவிட் இந்தியா தீர்மானத்தை விலக்குவீர் என பிரிட்டிஷ் அலறியதுடன், நடுங்கி காந்தி உட்பட அனைத்து தலைவர்களையும் பல மாதங்கள் சிறையில் அடைத்ததது. ஜேபி, லோகியா அருணா, பட்வர்தன் போன்ற சோசலிஸ்ட்கள் சாகசங்களை அப்போது இந்தியாவில் இருந்து கொண்டு நடத்திக்கொண்டிருந்தனர். வெளியேறி பாசிச ஹிட்லர் காப்பார் என நிற்கவில்லை. தொடர்ந்து வேவல் வைஸ்ராய் காந்தி காங்கிரஸ், லீக் என சிம்லா மாநாடு நடத்தினார். கேபினட் மிஷனும் காந்தியின் கருத்துக்களை மரியாதையுடன் பார்த்தது. நவகாளி நடையை கண்ணுறும் எவரும் கலங்காமல் இருக்கமாட்டார். INA தோழர்கள் காந்தியிடம் உறுதிமொழி தந்துவிட்டு ஆக்கபூர்வ வேலைகளில் இறங்கினர்.

நேர்மையான வரலாற்று வாசிப்பாளராக திரு ஆர் என் ரவி தன்னை உணர்ந்தால் அது குறித்து அவர் ஆதாரங்களுடன் எழுத வேண்டும். அது சரி என்றால் ஏற்பதும், அவதூறு அபத்தம் என்றால் நிராகரிப்பதற்கும் என் போன்றவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

காந்திக்கும் அவர் காலத்திய எவருக்கும் எதிர் எதிர் உரையாடல் தரப்பு இருக்கவே செய்தது. பிரிட்டிசார் வெளியேற்றம் தான் சுதந்திரப் போராட்டம். இரண்டாம் உலகப்போர் பாசிச ஹிட்லர், முசோலினி, ஜப்பானின் வீழ்ச்சியாகவே முடிந்தது. அது உண்மையெனில் அவர்களை நம்பியவர்களின் வெற்றியாக எப்படி இந்திய விடுதலைப் போர் இருந்திருக்கும் ?

பிரிட்டிஷார் காந்தியுடன் , அவர் பிரிட்டிஷாருடன் எதிர் உரையாடல் செய்தது போல் எவருடனும் நடந்திருப்பதாக எனக்கு தெரியவில்லை. காந்திக்கு எதிர் தரப்பு எப்போதும் இருந்தே வந்தது. அவர் ‘எதிரி தரப்பு’ என அதை புரிந்துகொள்ளவில்லை. அவருடன் உரையாடிய சிலர் அவரை பெரும் இடையூறாக எதிரி தரப்பாக பார்த்துள்ளனர். ‘அவர் இல்லாமை ‘ அவர்களுக்கு தேவையாகக் கூட இருந்திருக்கலாம்.

காந்தியை மீறி இந்திய அரசியல் அரங்கில், விடுதலை போராட்ட அரங்கில் எவராலும் செயல்படமுடியவில்லை என்ற பலவீனத்தை ஜின்னா, நேதாஜி, நேரு , அம்பேத்கர் , சாவர்க்கர், எம் என் ராய், கம்யூனிஸ்ட்கள்- சோசலிஸ்ட்கள், இங்கு

பெரியார் என எல்லோருமே உணர்ந்தவர்களாகவே இருந்தனர். நேருவைக் கூட, சரி என நீங்கள் உணரவில்லையெனில் என்னை எதிர்த்து நிற்பதே உகந்தது என சொன்னவர்தான் காந்தி.

காந்தி விடுதலைப் போராட்ட அரங்கில் வந்த ஜின்னா உட்பட எவரையும் இழக்க விரும்பாமல், அவர்களின் கோபதாபங்களை புரிந்துகொண்டு, அவர்களின் மனமாற்ற ஒத்துழைப்புடன், கைகோர்த்து அழைத்துச் செல்லவே விழைந்தார். தன்னால் வெற்றி பெற முடியாத தருணங்களில், எவர் மீதும் அவதூறுகளை பொழியாமல் தன் வழியில் walk alone என துணிச்சலாக வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை சோதித்தவர் காந்தி. அவரைப் போன்ற மாரல் என்கிற அறம், அரசியல், பொருளாதார, சமுக சோதனைகளை compartmentalise செய்யாமல் integrated indivisible ஆக புரிந்து செய்த வேறு ஒருவரை என்னால் உணரமுடியவில்லை. ஆதார பூர்வமாக காட்டினால் திறந்த மனதுடன் அப்படி ஒருவரை காண என் சித்தம் விழையையே செய்யும்.

உலகமும் இந்தியாவும் Holding Gandhi என்ற சோதனையை கைவிடாமல் இருந்தால் மதிப்புகளின் புரட்சியை கண்ணுறும்.

jan 26

Self Honesty is the destination where Reason and Faith both can meet

com Namari

jan 26

Republic Day wishes

Dr B R Ambedkar, chairman of the Constituent Assembly's drafting committee, remarked in his final Constituent Assembly speech on November 26, 1949:

"On the 26th of January 1950, we are going to enter into a life of contradictions. In politics we will have equality and in social and economic life we will have inequality… We must remove this contradiction at the earliest possible moment or else those who suffer from inequality will blow up the structure of political democracy which this Assembly has so laboriously built up."

27th Jan 2024 Two parts Dialogue: Framing of Indian Constitution Pattabiraman with Ahimsa Utsav team

நேரு இடைக்கால அரசின் தலைமை பொறுப்பை ஏற்ற நேரமது. வைஸ்ராய் கவுன்சிலில் முஸ்லிம் லீக் வராமல், இடைக்கால அரசாங்கத்தில் அவர்கள் இடம் நிரப்பப்படாமல் இருந்தது. பின்னர் வைஸ்ராய் ஏற்கச் செய்து, அவர்கள் உள்ளே வந்தனர். வந்ததிலிருந்து கேபினட் கூட்டங்களில் பெரும் பிரச்னைகள் இருக்கலாயின.

காந்தி , இந்து முஸ்லிம் கலகங்களை முடிவிற்கு கொணர்ந்து , பாதிக்கப்பட்ட அச்சப்பட்டவர்களுக்கு நம்பிக்கை கொணரும் பெரும் வேலையில் நவகாளியில் கால் தேய நடந்துகொண்டிருந்தார். அச்சுறுத்துவர்களின் மன மாற்ற போராட்டத்தையும் நடத்தி வந்தார்.

அரசாங்க தலைமை என்கிற பொறுப்பில் இருந்த நேருவும், காங்கிரஸ் தலைவர் என்ற வகையில் கிருபளானியும், எப்படியோ காந்தியைப் பார்க்க சிராம்பூர் வந்து சேர்ந்தனர். சில கிராமங்களின் தூரத்தை அவர்களும் தோழர்கள் உதவியுடன் நடந்துதான் கடக்க வேண்டும்.

நேரு தங்கிட குடிசை ஒன்றை காந்தி சற்றாவது வசதி செய்து வை என மனு விடம் சொல்லியிருந்தார். மனு அப்படி செய்துகொண்டிருந்ததைப் பார்த்த நேரு குரலை உயர்த்தி எதற்கு இதெல்லாம் செய்கிறாய் என சத்தம் போடலானார் . காந்தியின் உத்தரவு என்ன செய்ய முடியும் என மனு அமைதியாக பதில் சொன்னார். காந்தி உன்னை கொன்னு போட்டாலும், நீ முடியாது என அவரிடம் சொல்லியிருக்கவேண்டும் என நேரு சொல்லிவிட்டு, பயப்படாதே, அப்படியெல்லாம் அவர் செய்துவிடமாட்டார் என மனுவை சமாதானப்படுத்தினார்.

இதை காந்தி அறிந்தவுடன், அதான் நேரு என்றார்.

மக்கள் கூட்டமாக வருவதைப் பார்த்த நேரு, இதான் நீங்கள் தனித்து இருக்கும் லட்சணமா என கண் சிமிட்டி ‘கமெண்ட் ‘ தருகிறார். காந்தி, இன்னும் என்னை மகாத்மா என மக்கள் சொல்கிறார்கள் என்பதை நீ அறிவாயா என சொல்லி சிரிக்கிறார்.

காந்தி டெல்லிக்கு வரவேண்டும், அன்றாட ஆலோசனை தேவைப்படுகிறது என நேரு வற்புறுத்தியது காந்தியிடம் எடுபடவில்லை. டிசம்பர் 30 அன்று நேரு , கிருபளானி இருவரும் சாலை இருக்கும் கிராமம் ஒன்றிற்கு நடந்து போய், அங்கிருந்து ஜீப் ஏறி ஏரோடிராம் சென்று டெல்லி திரும்பினர்.

நேரு விடைபெறுவதற்கு முன்னர் 10 நிமிடங்கள் காந்தியுடன் விவாதித்தார். அன்று விடியற்காலை 3 மணிக்கு காந்தி எழுதி வைத்திருந்த துண்டு பேப்பரை நேருவிடம் தருகிறார் . அதில்

Your affection is extraordinary and so natural! Come again, when you wish, or send someone who understands you and will faithfully interpret my reactions, when in your opinion consultation is necessary and you cannot come. Nor is it seemly that you should often run to me even though I claim to be like a wise father to you, having no less love towards you than Motilalji..

I have completely associated myself with all that the working committee did. I could not support with reason what I had felt so vaguely..my reason wholly supports my heart. I notice daily verification. So , I suggest frequent consultations with an old, tried servant of the nation

காந்தியை பார்த்து திரும்பிய நேரு இப்படி பதில் சொன்னார்

It is always pleasure and inspiration to meet this young man of seventy seven. We always feel a little younger and stronger after meeting him and the burdens we carry seem a little lighter

- inputs from Mahatma by Pyarelal vol 9 book 2 ch 6

jan 29 2024

காந்தி கல்வி நிலையத்தில் நாளை(30.01.2024 மாலை 5 மணிக்கு) நடைபெறவுள்ள காந்தி நினைவுதின நிகழ்ச்சிக்கு நண்பர்களை வரவேற்கிறோம். நிகழ்ச்சி பற்றிய விவரங்களை அழைப்பிதழில் காண்க